பக்கங்கள்: இருபத்திநான்கு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 4 செவ்வாய்க்கிழமை (18.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 173

# போரில் நடந்தவற்றை ஐ.நா. அம்பலப்படுத்தத் தவறியது!

## ஓராண்டு நிறைவில் மன்னிப்புச் சபை சாடல்

கொழும்பு, மே 18

இலங்கையின் உள்நாட்டு மோதல்களின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் குறித்து தான் அறிந்தவற்றை ஐக்கிய நாடுகள் சபை பகிரங்கப்படுத்தவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அது எடுக்கவில்லை.

இவ்வாறு கடுமையாகக் குற்றஞ்சாட்டி உள்ளது சர்வதேச மன்னிப்புச்சபை.

இலங்கையில் உள்நாட்டு மோதல் முடிவடைந்து ஒரு வருடம் பூர்த்தியாவதைக் குறிக்குமுகமாக விடுத்துள்ள அறிக்கையிலேயே சர்வதேச மன்னிப்புச்சபை இந்தக் குற்றச்சாட்டை விடுத்துள்ளது. மோதலின் போது தமது குடும்பத்தவர்களை இழந்தவர்களுக்கு நீதி வழங்கவேண்டும் எனவும் அது கோரியுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்கில் மண்சரிவு அபாய எச்சரிக்கை!

கொழும்பு, மே 18

நாட்டின் தென்பகுதியில் தொடர்ந்து பெய்துவரும் கடும் மழை காரணமாக இரத்தினபுரி, களுத்துறை மற்றும் காலி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு அபாயம் ஏற்பட்டுள்ளது என இடர்முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பெல்மடுல்ல, (24 ஆம் பக்கம் பார்க்க)

### நீதித்துறையை அவமதித்தது தொடர்பான

## யாழ். மேயர் மீதான விசாரணை: அவகாசம் வழங்கியது நீதிமன்றம்

யாழ்ப்பாணம், மே 18

நீதிமன்றத்தை அவமதித்ததாக யாழ். நகர மேயர் திருமதி ப.யோகேஸ்வரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்த விசாரணை பூர்த்தியாவில்லை எனப் பொலிஸார் யாழ். நீதிமன்றத்தில் நேற்றுத் தெரிவித்தனர்.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உயிர் நீத்தோர் நினைவாக நல்லை ஆதீனத்தில் நேற்றுப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,மே18

வன்னி மனிதப் பேரவலத்தில் உயிர் நீத்தோரின் முதலாம் ஆண்டு நினைவு கூரலையொட்டி சர்வமதப் பிரார்த்தனை நேற்றுப் பிற்பகல் நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது.

நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமான இந்தப் பிரார்த்தனை 45நிமிடங்கள் வரை நீடித்தது. அங்கு கூடியிருந்தவர்கள் தீபம் ஏற்றி அமைதியான பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்து, கிறிஸ்துப் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன.

இந்தப் பிரார்த்தனை நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்திய திருச்சபையின் முன்னாள் பேராயர் ஜெபநேசன், தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தானத் தலைவர் ஆறு. திருமுருகன் ஆகியோர் உட்பட அறுபதுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பொதுமக்கள் படையினரால் தடுக்கப்பட்டதாகவும் அதன் காரணமாக பிரார்த்தனை (24 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து

## முன்னாள் புலி உறுப்பினர்கள் 600 பேர் இன்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவர்

யாழ்ப்பாணம்,மே18

முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்கள் 600பேர்களை இன்று அவர்களது பெற்றோர்களிடம் கையளிக்கும் நிகழ்வு முற்பகல் 10மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.சிவில் நிர்வாக பொதுமக்கள் உறவுகள் அலுவலகம் நேற்றிரவு இத்தகவலைத் தெரிவித்தது,

படையினரிடம் சரணடைந்த மற்றும் படையினரால் கைது செய்யப்பட்ட 600க்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வு நிலையங்களில் வைத்து புனர்வாழ்வு அளிக்கப்பட்ட பின் சமுதாயத்தில் ஒன்றிணைந்து வாழ்வதற்காக விடுவிக்கப்படவுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

தேசிய ஒற்றுமையை வலியுறுத்தியும் புத்தரின் போதனைக்கு அமைய சமூகத்தில் நல்ல பிரஜைகளாக வாழ வேண்டும் என்ற அறிவுறுத்தலுடன் விடுதலையாகும் விடுதலைப்புலிகளின் ஆண், பெண் உறுப்பினர்கள் தேசியக் கொடியை தமது வீடுகளில் ஏற்றவேண்டும் என்று சிவில் நிர்வாக பொதுமக்கள் உறவுகள் அலுவலக அதிகாரி கேட்டுள்ளார்.

(ஒ-1)

## வலி.வடக்கு இடம்பெயர்ந்த மக்களுக்கு இன்னும் இரு வாரங்களில் நல்ல முடிவு

### 3 கட்சிகளினதும் எம்.பிக்கள் சேர்ந்து உறுதிமொழி

யாழ்ப்பாணம், மே 18

அதிஉயர் பாதுகாப்பு வலயப் பிரதேசமான வலி.வடக்கில் மக்களை மீள் குடியமர்த்துவது தொடர்பாக இரண்டு வாரங்களில் சாதகமான - நல்ல முடிவு குறித்து அறிவிக்கக்கூடியதாக இருக்கும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருமித்த குரலில் தெரிவித்தனர்.

வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுத் தெல்லிப்பழையில் (24 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாநகரப் பிரதி மேயர் இளங்கோ நேற்று நிபந்தனையுடன் பிணையில்

யாழ்ப்பாணம், மே 18

சாவகச்சேரி நீதிவான் ரி.ஜே. பிரபாகரனுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட யாழ். மாநகர பிரதி மேயர் துரைராஜா இளங்கோ (றீகன்) நிபந்தனையின் அடிப்படையில் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் (24 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த வெற்றிக்கொண்டாட்டம் இடைநிறுத்தம்!

கொழும்பு, மே 18

தற்போது காணப்படும் சீரற்ற காலநிலை காரணமாக நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவிருந்த யுத்த வெற்றி விழா இறுதிநாள் நிகழ்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று தேசிய பாதுகாப்பிற்கான ஊடக நிலையத்தின் பணிப்பாளர் லஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட நிலையில் அதன் முதலாவது ஆண்டு விழா மூன்று நாள் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுவந்தன.

இந்தக் கொண்டாட்டங்களின் இறுதி நிகழ்வு நாளை மறுதினம் 20ஆம் திகதி வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு, காலி முகத்திடலில் நடத்த ஏற்பாடாகியிருந்தது.

இருப்பினும் தற்போது நிலவி வரும் காலநிலை காரணமாக யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை நடத்துவதில் அரசு சிக்கல் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

இந்நிலையிலேயே யுத்த வெற்றி விழாக் கொண்டாட்டத்தை (24 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த வெற்றியின் கீழ் முடக்கப்படுகிறது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு

### ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மே 18

தமிழர்களுக்கான அரசியல் தீர்வு, வன்னி அகதிகள் மீள்குடியேற்றம் மற்றும் அந்த மக்களுக்கான நிவாரணம் ஆகியவற்றை இந்த அரசு இன்று இடம்பெறும் யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தின் கீழ் முடக்கிவைத்துள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

யுத்தவெற்றியின் ஒரு வருடப் பூர்த்தியைக் கொண்டாடுவதற்குப் பாரிய ஏற்பாடுகளை அரசு செய்துள்ளது. பெருந்தொகைப் பணம் இதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

யுத்தவெற்றிக்கொண்டாட்டம் என்பது இந்நாட்டு மக்கள் அனைவருக்கும் உரித்தானதாக அமையவேண்டும். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் ஒருபுறம் துன்பப்பட்டுக் (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலி.வடக்கு மீள்குடியமர்வு தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுமக்களையும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி விஜயகலா மகேஸ்வரன், ஈ.சரவணபவன், தெல்லிப்பழை பிரதேசசெயலர் எஸ். முரளிதரன், இடம்பெயர்ந்தோர் சங்கத் தலைவர் எஸ்.ந... ராசா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ். சிறிதரன் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

# தெற்கில் தொடர்கிறது கடும் மழை!

## ★ 5 பேர் பலி! ★ சுமார் ஒரு லட்சம் பேர் இடம்பெயர்வு ★ போக்குவரத்துத் தடை

## ★ விமான சேவை பாதிப்பு ★ மின்சாரம் துண்டிப்பு

கொழும்பு, மே 18

நாட்டின் பல்வேறு பாகங்களிலும் நிலவும் சீரற்ற கால நிலை காரணமாக ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பாதிக் கப்பட்டுள்ளனர். அதுமட்டுமன்றி 5 பேர் பலியாகினர் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இந்தச் சீரற்ற காலநிலையால் நாட்டில் போக்குவரத்து, மின்சாரம், விமான சேவை ஆகியன பாதிக்கப்பட்டன.

கடும் மழை காரணமாக கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இம்மாவட்டங்களில் பல பாதைகளில் நீர் தேங்கி நிற்பதால் போக்குவரத்தில் பாரிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் கெஸ்பாவ, கொலொன்னாவ, ஹங்வல்ல, பாதுக்க, மஹரகம போன்ற பிரதேசங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் மாத்திரம் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டமை ஆரம்ப தகவல்களிலிருந்து தெரியவந்துள்ளது என அனர்த்த முகாமைத்துவ நிலையம் கூறுகிறது.

இக்குடும்பங்களைச் சேர்ந்த 40 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் இந்த நிலையம் சுட்டி க் காட்டியுள்ளது.

நகர வடிகாண் கட்டமைப்பிலுள்ள சீரற்ற நிலையால் மழை நீர் வடிந்து செல்ல அதிக நேரமெடுப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கொழும்பு - கண்டி வீதியில் பலும் மஹரவுக்கும் மிரிஸ்வத் தைக்கும் இடையிலான வீதி போக்குவரத்துச் செய்யமுடியாதவாறு நீரினால் மூடப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் இணைப் பதிகாரி அஜித் நிஷாந்த தெரி வித்தார்.

இது தவிர கம்பஹா மாவட்டத்திலுள்ள பல உள்வீதிகளும் போக்குவரத்துச் செய்ய முடியாதவாறு வெள்ளநீர் நிறைந் துள்ளது.

இம்புல்கொட, வெலிவேரிய, கந்தானை, மினுவாங்கொட, ஜா-எல பிரதேசங்களும் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளன.

இப்பிரதேசங்களில் படகுகளைப் பயன்படுத்தி மீட்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன என இணைப் பதிகாரி கூறினார்.

களுத்துறையில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் களுத்துறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ இணைப்பதிகாரி மேஜர் சஞ்சீவ சமரநாயக்க கூறினார்.

இதேவேளை, நாட்டில் நிலவும் மோசமான கால நிலை காரணமாக பல பிரதேசங்களில் மின்சார விநி யோகத்தில் தடை யேற்பட்டுள்ளது என இலங்கை மின் சாரசபை தெரிவித்துள்ளது.

மின் விநியோ கத்தைச் சீராக்கும் பணிகளில் விசேட குழுவினர் ஈடு பட்டுள்ளனர் என இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நீர்கொழும்பு, திவுலப்பட்டிய, பிலியந்தலை, கெஸ்பாவ, ஹோமாகம, கொழும்பு வடக்கின் சில பகுதிகள் என்பவற்றில் மின் விநியோகத்தில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக சபை கூறுகிறது.

மொனராகலை, கண்டி, களுத்துறை, போன்ற இடங்களில் மரங்கள் வீழ்ந்ததனால் மின் விநியோகத் தடை ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ராகமை பஸ் நிலையத்திலும் ரயில் நிலையத்திலும் நீர் தேங்கி நிற்பதனால் பயணிகள் இவ்விரு போக்குவரத்து வசதிகளையும் பாவிக்க முடியாத நிலையிலுள்ளனர்.

இவ்விரு நிலையங்களுக்கும் செல்லும் வழியில் பெருமளவு நீர் தேங்கியுள்ளதாகப் பயணிகள் கூறுகின்றனர்.

ராகமை ரயில் பாதையும் சிற்சில இடங்களில் வெள்ள நீருள் புதையுண்டு போயுள்ளது.

அத்துடன், மோசமான காலநிலை காரணமாக நேற்று நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறையிலும் பாதிப்புகள் ஏற்பட்டன.

நேற்று அதிகாலை 1.55 இற்கு சிங்கப்பூரில் இருந்தும் அதிகாலை 2.05இற்கு சென்னையிலிருந்தும் இலங்கை வந்தடையவிருந்த விமானங்கள் மோசமான காலநிலை காரணமாக திருவானந்தபுரம் விமான நிலையத்திற்குத் திருப்பப்பட்டதாகக் கட்டுநாயக்க விமான நிலையக் கடமை முகாமையாளர் கூறினார். (சி)

## தீருவிலில் நினைவாலயம் சேதம்

கொழும்பு, மே 18

யாழ். வடமராட்சி, வல்வெட்டித்துறை தீருவிலில் அமைந்துள்ள குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் நினைவாலயமும், புலிகளின் தலைவர்களின் நினைவுத் தூபியும் கடந்த சனிக்கிழமை இரவு சேதமாக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

அண்மைக் காலங்களில் வட பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் நினைவுச் சின்னங்களை அழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள கும்பல், அதன் ஒர் அங்கமாகவே அந்த அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, அண்மையில் வடமராட்சியில் இருந்த மாவீரர் துயிலும் இல்லம் முற்றாக அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2010 இல் யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெற்ற எமது கிராம பட்டதாரிகளை வாழ்த்துகின்றோம்.

புனித யூதாததேயு ஆலய சமூகம், இளவாலை.



திரு.செபஸ்தி றொபின்சன் B.com (Spl.Acc)



செல்வி கொன்சாலிஸ் பீற்றர் யூட்ஸ் சுஜித்திரா B.B.A.(Hons spl.F.m)



செல்வி மரியதாசன் டயானா B.A. (Hons Tamil spl)



செல்வி முடியப்பு யூட்ஸ்பமிலா (B.F.A)



செல்வி வின்சென்ற் - அன்ரனற் சியாமளா (B.FA)

(93392)

## தேவை

AAT, CBF, CIMA கற்கைகளிற்கு கற்பிக்கக்கூடிய B.COM / BBA பட்டதாரிகள் ஒரு கிழமையினுள் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

*4023, மே/பா உதயன்*
*கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.*

## தவறிவிட்டது

வாகன இலக்கத்தகடு (LH-0699) நவகிரிக்கும், கோண்டாவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

077-9351534 (98400)

## மணிவிழா நாயகன்







யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
ஒரு தசாப்த முதல்வர்

திரு. நா. வன்னியசிங்கம்

அவர்களைப் பல்லாண்டு
வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
த. தர்மராசா, ம. கஜன், செ. செல்வா

(சி/567730)

## தகவல் தொழில் நுட்பபட்டக் கற்கை நெறிக்கான புலமைப்பரிசில்

தகவல் தொழில் நுட்ப பட்டக் கற்கை நெறியான BIT கற்கை நெறிக்கு மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். யாழ் மாணவர்களுக்காக விரிவுரைகள் எம்.சி.எஸ் தகவல் தொழில் நுட்ப வளாகத்திலும் பரீட்சைகள் யாழ் பல்கலைக்கழகத்திலும் கொழும்பு பல்கலைக்கழகம் நடாத்துகின்றது. மூன்று ஆண்டுகளைக் கொண்ட இத்தகவல் தொழில்நுட்ப கற்கை நெறியானது, மேலதிகமாக தகவல் தொழில்நுட்பத்தில் டிப்ளோமா பட்டத்தை முதல் ஆண்டின் முடிவிலும், உயர் டிப்ளோமா பட்டத்தை இரண்டாம் ஆண்டின் முடிவிலும் வழங்குகின்றது. BIT கற்கைநெறியில் சிறப்பான செயற்பாட்டிற்கான விருதினை பெற்றுக்கொண்ட MCS கணனி நிறுவனம் BIT மாணவர்களிற்கு ICDL எனப் படும் International Computer Driving licenseக்கும், கணினிப்பொறியியலாளர் (USA), Sun Java கற்கை நெறிகளுக்கு 100 % புலமைப்பரிசிலையும் வழங்குகின்றது. மேலும் இவர்கள் பிரித்தானிய கணினிச்சங்கத்தின் அங்கத்துவத்தையும் பெற்றுக்கொள்ள முடிகின்றது.மேற்படி புலமைப்பரிசிலுக்கான விண்ணப்ப முடிவு திகதி 21மே 2010 ஆகும். தகவல் தொழில்நுட்பத்தில் ஆர்வமுடைய பல்கலைக்கழக மாணவர்கள், அரச தனியார்துறை ஊழியர்கள், பாடசாலை விலகியோர் யாவரும் இக்கற்கைக்கு விண்ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களை இல 324 பலாலி வீதி (பரமேஸ்வரா சந்தி) யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள MCS தகவல் தொழில் நுட்ப வளாகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


## மரண அறிவித்தல்



### வல்லிபுரம் மகாதேவன்

(உரிமையாளர் - தேவன் மில், கோப்பாய் மத்தி)

கோப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மகாதேவன் நேற்றுமுன்தினம் (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - இளையபிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், புஸ்பராணியின் அன்புக் கணவரும், மகாதேவி, சண்முகம் ஆகியோரின் சகோதரரும், தவமணிதேவி (முகாமையாளர், TEC. Srilanka / ஆசிரியை ஜுலான் மத்திய கல்லூரி, பாணந்துறை), லதா (கோப்பாய் மத்தி), சுபேந்திரன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), ஜெயந்தி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (சிரேஷ்ட உதவிப்பதிவாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், நாவல), பாஸ்கரன் (உரிமையாளர், சிற்றிசன் ரவல்ஸ்), சிவசேனா (சிங்கப்பூர்), செல்வசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜனனி, ஜாமினி, அனுஷன், நிருஷன், கஜனி, கஜீபன், சாருணி, லக்ஷனா, யாதவன், ஹரிஸ்ராம், ஹரிஸன், சஸ்மிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.

(98508)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## அவமே உயிர்நீத்த எம் உறவுகளின் ஆன்மாக்கள் அமைதிபெற அஞ்சலிப்போம்!

இலங்கைத் தமிழ் மக்களின் பூர்வீக வாழ்விடங்களில் ஒன்றான வன்னிப் பிரதேசத்தில், இலங்கை அரசாங்கம் நடத்திய அகோரப் போர், தமிழ்மக்களை அழிக்கும் போர் முடிவுக்கு வந்துவிட்டதாக அரசாங்கம் ஜனாதிபதிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்து ஒரு வருடம் பூர்த்தியாகும் நாள் இன்று. அதனையொட்டிப் பெரும் வெற்றி விழாக் கொண்டாட்டம் நடத்துகிறது அரசாங்கம்.

போரில் வெற்றிபெறும் நாடோ அல்லது அரசோ அல்லது அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களோ தமது வெற்றியைக் கொண்டாடுவதைத் தப்பாகக் கொள்ளமுடியாது; அது தப்பும் அல்ல என்று ஒரு சாரார் கூறலாம்.

ஆனால் வெற்றிக் கொண்டாட்டங்கள், போரினால் தோற்கடிக்கப்பட்ட அதாவது பாதிக்கப்பட்ட மக்களின் மன உணர்வுகளைக் கணக்கெடுக்காமலும் வெற்றியினால் உண்டாகும் மமதையின் வெளிப்பாடாகவும் அமையக்கூடாது.

இதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றப் பிரதிநிதி சி.சிறிதரனும் ஜனாதிபதிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் மிகத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கம் தான் வெற்றிகொண்டுவிட்டதாகக் கூறும் வன்னிப்போர், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை இரை எடுத்ததும் மறுக்கமுடியாத, மறைக்க முடியாத பேரவலமும் பேருண்மையும் ஆகும்.

போரில் இறந்த தமிழ்மக்களின் பலருக்குக் கல்லறை வைக்கவோ சமயாசாரங்களின் பிரகாரம் அந்திமக் கிரியைகளைச் செய்யவோ விடாமல் அவர்களின் உறவினர்களை கொடிய குண்டுகளும் ஏவுகணைகளும் துரத்தியமை சர்வதேசம் அறிந்த பரகசியம். இந்தப் போர் தமிழ்மக்களுக்குத் தந்த பேரிழப்புக்களை விட -

ஈழத்தமிழர்களை மிகவும் கொடுமையான - அவர்களை உளரீதியாக இன்று மட்டுமல்ல, அவர்கள் உயிர் வாழும் வரை இருந்து கொல்லும் வியாதியாக, அவர்களின் ஆன்மாக்களையே வதைக்கும் அரக்கன்களாக - போர் தந்த இழப்புகள் மாறியிருக்கின்றன.

அரசாங்கத் தரப்பில் இன்று போர் வெற்றிநாள் கொண்டாடப்படும் வேளையில், அப்போது நடந்தேறிய அவலங்களை எண்ணி எம்தமிழ் உறவுகளின் நெஞ்சங்களில் இரத்தம் கசிந்து கொண்டிருக்கும். ஒன்றல்ல இரண்டல்ல ஒரு குடும்பத்திலேயே இரட்டைத் தானங்களில் இழப்புகளைச் சந்தித்தவர்களின் மன நிலையோ கற்பனையிலும் எண்ணியும் பார்க்க முடியாதது. வர்ணிக்க முடியாதவை.

சர்வதேசமும், கண்மூடி மௌனியாக இருந்து தமிழர் கொலைகளை, இழப்புகளை தடுக்கமுடியாது கைகட்டி வாய் புதைத்து நின்றது எமது இனத்தின் விதியா அல்லது அரசுடன் சேர்ந்து பாடும் போக்கிரித்தனமா என்ற கேள்விக்கு இதுவரை உரிய பதில் இல்லை.

தமிழர்கள் மத்தியில் பல்லாயிரக்கணக்கானவர்கள் மணிக்கு மணி, நிமிடத்துக்கு நிமிடம் அநாதைகள் ஆவது தெரிந்தும் சர்வதேசம் கண்கட்டி வாய்பொத்தி கைகட்டி நின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழ்மக்கள், இழப்புகளை நினைத்து மனதில் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்க, அரசாங்கம் போர் வெற்றியை பிரமாதமாக இன்று கொண்டாடுகிறது. இந்த நிலை குறித்து இலங்கையர் என்ற வகையில் வெட்கப்படவேண்டாமா என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க எழுப்பி உள்ள நியாயமான கேள்வி மனித மனச்சாட்சியை உறுத்தும் கேள்வி? மனச்சாட்சியும் மனித நேயமும் கொண்ட பெரும்பான்மையினர் மனங்களிலும் இந்தக் கேள்வி பிறக்கவே செய்யும். ஆனால் அரசிடம் அத்தகைய குத்தல் இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது!

போர் வெற்றியை நிரந்தர வாக்கு வங்கிச் சொத்தாக வைத்துக் கொண்டு, சிங்கள மக்களை தமது பக்கம் ஈர்க் கலாம் என்ற நினைப்பிலேயே அரசாங்கம் இப்போதும் மிதந்து கொண்டிருக்கிறது. ஆனால் போர் மூலம் எட்டப்பட்ட அரசியல் வெற்றி நிரந்தரமானது இல்லை என்பதனை அது என்றோ ஒருநாள் உணர்ந்தாக வேண்டும். அந்த நிலை உருவாகாது என்று எல்லாக்காலமும் சொல்ல இயலுமா?

அரசாங்கம் போர்வெற்றியைக் கொண்டாடிவிட்டுப் போகட்டும். தமிழ் மக்கள் வன்னியில் உயிர்த்தியாகம் செய்த தமது உறவுகளின், இரத்தத்தின் இரத்தங்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கவேண்டும். கோவில்கள், தேவாலயங்களில் பிரார்த்தனை நடத்தி தமக்குரிய கடமைகளை நிறைவேற்றவேண்டும். அதுவே எமது மக்களின் மனங்களில் அமைதியைத் தரும். எல்லோரும் இதனை ஒரு மனதாக உணர்ந்து எமக்குரிய சமயக் கட மைகளை தவறாது செய்வோமாக! அஞ்சலிப்போமாக! அவர்களின் ஆன்மாக்கள் அமைதி கொள்ள இறைஞ்சி எங்களுக்குள்ள உளவியல் பாரத்தைக் குறைப்போமாக!

## தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் நேற்று அடையாள பணிப் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் கடமைக்குச் செல்லாது கல்லூரி முன்றிலில் நேற்றுக்காலை அடையாள பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

கடந்த நான்கு மாத காலமாக தொடர்ச்சியாகத் தமக்கு வழங்கப் படாதிருக்கும் மாதாந்தக் கொடுப்ப னவுகளை வழங்கக் கோரியே இந்தப் பகுதிநேர பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டதாக தாதிய மாணவர்கள் தெரிவித்தனர்.

இதுபற்றி அவர்கள் மேலும் கூறுகையில், மாதாந்தக் கொடுப்பனவுகளை வழங்காதுள்ளதுடன், தங்குமிட விடுதி வசதிகளையும் கிடைக்கப்பெறாத நிலையில் நாம் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றோம்.

வறிய மாணவர்கள் மற்றும் தூரப் பிரதேசங்களிலிருந்து கற்கைநெறியைத் தொடரும் மாணவர்கள் இதன் காரணமாகச் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

தனியார் வீடுகளில் ரூபா 3ஆயிரம் வாடகைப் பணம் செலுத்தியே தங்கவேண்டியுள்ளது. இதேவேளை விடுதிகள் மூடப்பட்டு மாணவர்களுக்கு பிரயோசனமற்றுள்ளன.

தாதிய மாணவர்களாகிய நாம் எமது கஷ்டநிலையை பல தடவைகள் அதிகாரிகளுக்கு அறிவித்தும் அவர்களால் எவ்வித தீர்வும் பெற்றுத் தரப்படவில்லை.

ஏனைய மாவட்டங்களில் உள்ள தாதிய மாணவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகள் தாமதமின்றி வழங்கப்படும்போது எமக்கு மட்டும் ஏன் இந்தப் பாரபட்ச நிலைமை எனவும் மாணவர்கள் தரப்பிலிருந்து கேள்வி எழுப்பப்படுகிறது.

பகிஷ்கரிப்பின்போது யாழ்.தாதிய மாணவர் ஒன்றியத்தின் சார்பாக அதன் தலைவர் முருகானந்தம் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தார். (50-14-111-224)

(படங்கள் 5 ஆம் பக்கத்தில்)

## வடமாகாணப் பொதுச் சுகாதார பரிசோதகர் பதவிக்கான வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்றவர்கள் நியமிக்கப்படுவர்

### வடமாகாண அமைச்சுச் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம்,மே18

வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான வெற்றிடங்களுக்கு ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படவுள்ளனர்.

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி ரமேஷ் விஜயலட்சுமி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற இடங்களுக்கு 15 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளனர்.

ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியும்.

இப்பதவிக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானோரிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. (எ-224)

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு புதிய தலைவர்

யாழ்ப்பாணம்,18

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக ஹரி ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகரான ஹரிஜெயவர்த்தன சிறிலங்கா ஏயார்லைன்ஸ் மற்றும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றவன்றின் முன்னாள் தலைவராகவும் பணியாற்றியவர். (50-224)

## விளையாடிக் கொண்டிருந்த சிறுவனின் உயிரைப் பறித்தது வீட்டு மதில்!

யாழ்ப்பாணம்,மே18

மதில் ஏறி விளையாடிக்கொண்டிருந்த சிறுவன், மதில் உடைந்து மேலே விழுந்ததில் பரிதாபமாக உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டைப் பகுதியில் நேற்றுமாலை 4 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வட்டு இந்துக் கல்லூரியின் தரம் 6 இல் கல்வி பயிலும் ஸ்ரீபாலச்சந்திரன் ரஜிந்தன் (வயது 11) என்ற சிறுவனே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

குறித்த சிறுவன் பாடசாலை முடிவடைந்ததும் தனது பேர்த்தியாரின் வீட்டுக்குச் சென்று மதில் ஏறி விளையாடியபோது எதிர்பாராத விதமாக மதிலில் ஒரு பகுதி உடைந்து சிறுவன் மீது விழுந்ததாலேயே உயிரிழப்பு நேர்ந்ததாகச் சொல்லப்படுகின்றது. (எ-78)

## அருட்தந்தை சரத் ஜீவன் நினைவாக இரங்கல் வழிபாடு

கொழும்புத்துறை, மே 18

வன்னியில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் உயிரிழந்த அருட்தந்தை சரத் ஜீவன் அடிகளார் மற்றும் பொதுமக்களின் நினைவு தினமும் இரங்கல் வழிபாடும் இன்று செவ்வாய்க் கிழமை கிளிநொச்சி உருத்திரபுரம் பத்திமா அன்னை ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிவரை மக்களோடு நின்று அவர்களுக்கு அரும்பணியாற்றி உயிர் நீத்த அடிகளாரின் நினைவாக உருவச்சிலை ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. (50-6-135)

## புடைவைக் கைத்தொழில் பயிற்சிக்கு மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி,மே18

புடைவைக் கைத்தொழில் அமைச்சு புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நல்லூரிலுள்ள புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலை உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள 12 பாடசாலைகளிலும் எதிர்வரும் ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கையந்திர புடைவைக் கைத்தொழில் ஆரம்பப் பயிற்சி(1வருட காலம்), கையந்திர புடைவைக் கைத் தொழில் பயிற்சி(2 வருடங்கள்) ஆகியவற்றுக்கு புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'புடைவைக் கைத்தொழில் பணிப்பாளர், புடைவைக் கைத்தொழில் அமைச்சு, இல.79,டி.ஆர்.விஜயவர்த்தன மாவத்தை, கொழும்பு -10' என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

பயிற்சிக்காலத்தில் பயிலுநர்களுக்கு நாளொன்றுக்கு 150 ரூபா வீதம் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

விண்ணப்பிப்பதற்கான வயதெல்லை ஒருவருட பயிற்சிக்கு 18-35 வயதுக்கு இடைப்பட்டவர்களாகவும், இரண்டு வருட பயிற்சி நெறிக்கு 18-28 வயதுக்குட்டபட்டவர்களாகவும் இருக்கவேண்டும். ஒரு வருடப் பயிற்சிக்கு 8ஆம் வகுப்புச் சித்தியும் 2 வருட பயிற்சிநெறிக்கு ஜி.சீ.சாதாரண சித்தியும் கல்வித் தகைமையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட விண்ணப்பதாரிகள் திருமதி புஸ்பா கணேஸ்வரன், உதவி வடிவமைப்பாளர், 194, பருத்தித்துறை வீதி, அரசடி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கலாம். மேலதிக விவரங்களுக்கு 0771614355 தொலைபேசி இலக்கத்துடனும் தொடர்புகொள்ளலாம்.

இவ்வாறு நல்லூர் புடைவைக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைப் பொறுப்பதிகாரி திருமதி புஸ்பா கணேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஒ-11)

## குறிகாட்டுவானில் இலையான்களை அழிக்க நாளை மருந்து விசிறுவதற்கு ஏற்பாடு

புங்குடுதீவு,மே18

நயினாதீவு அம்பாள் ஆலய உற்சவ காலத்தில் இலையான்களின் தொல்லையை ஒழிக்கும் பொருட்டு புங்குடுதீவு பொது சுகாதாரப் பரிசோதகரும் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகத்தினரும் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

நாளை புதன்கிழமை குறிகாட்டுவானில் உள்ள சகல கடைகளும் பூட்டப்பட்டு காலை, மதியம், மாலை ஆகிய மூன்று வேளைகளும் இலையான்களை அழிப்பதற்கான மருந்துகள் விசிறப்படவுள்ளன.

குறிகாட்டுவான் துறைமுகப் பகுதியில் விசிறப்படும் மருந்துகளை அந்தப் பகுதி கடை உரிமையாளர்களும், ஏனைய பகுதிகளுக்குத் தேவையான மருந்துகளை புங்குடுதீவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரும் வழங்கவுள்ளதாக புங்குடுதீவு பொதுச் சுகாதார பரிசோதகர் யோ.ரவீந்திரன் தெரிவித்தார். (க)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 5 | 19.05.2010 புதன்கிழமை |
| திதி | : சஷ்டி மு.இ. 09.31 வரை |
| நட்சத்திரம் | : பூசம் மு.இ. 09.40 வரை |
| சுபநேரம் | : 04.33 - 05.52 |
| ராகுகாலம் | : 11.52 - 01.22 |

## குடாநாட்டிலுள்ள சகல தபாலகங்களையும் கணனி வலையமைப்புக்குள் கொண்டுவர ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே18

குடாநாட்டில் உள்ள அனைத்துத் தபாலகங்களும் விரைவில் கணனி வலையமைப்புக்குள் கொண்டுவரப்படவுள்ளன.

யாழ்.பிரதம தபாலக உயர் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

குடாநாட்டில் சில தபாலகங்களே இப்போது கணனி வலையமைப்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள 14 தபாலகங்களை [illegible]வில் கணனி வலையமைப்புக்குள் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு தபாலகங்களின் தேவைகள் கணனி வலையமைப்புக்குள் கொண்டுவரப்படவுள்ளதால் அவற்றின் செயற்பாடுகளும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

இதன்மூலம் தபாலகங்களின் அனைத்து அத்தியாவசிய நடவடிக்கையும் மக்கள் உடனுக்குடன் பெற்றுக்கொள்ளமுடியும் - என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (எ-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

இன்று 18.05.2010 யாழ்.ரிம்மர் மண்டபத்தில் (மணிக்கூட் டுக் கோபுரம் அருகாமை) நடைபெற இருந்த சர்வமதப் பிரார்த்தனை வழிபாடு தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்பெற மாட்டாது என்பதனை மிக மனவருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த நிகழ்விற்கான பிறிதொரு திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம்.

(98502)


## Siva Brothers

கொக்கோலா குளிர்பான பிரியர்களே நீங்கள் வாங்கும் ஒவ்வொரு போத்தல் மூடிகளிலும் 50/-, 100/-, 200/-, 500/-, 1000/- Reload உண்டு. அத்துடன் குளிர்பானம் இலவசம் என இருக்கும் மூடிகளுக்கு இலவசமாக சோடா வழங்கப்படும். ஆகவே கொக்கோலா கொம்பனி குளிர்பான வாடிக்கையாளர்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவும்.

**Distributor சிவாபிறதர்ஸ்**

205, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 0212225688


## வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி

எமது சங்கத்தின் கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலுக்கு அருகாமையில் இருக்கும் உபமொத்த நிலையக் கட்டடத் திருத்தம் செய்வதற்கு கேள்விகூறுகள் சங்கத்தினால் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 31.05.2010ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்குக் கடமை நேரத்தில் சங்கத் தலைமைக்காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்,
வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ. சங்கம்,
நீர்வேலி.

(வி/567728)

## பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான கலந்துரையாடல்

30.05.2010 அன்று நடைபெறவுள்ள யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப்பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் தொடர்பான விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் இன்று 18.05.2010 காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ்.வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத்தில் தமது பதிவுகளை மேற்கொண்டவர்களும், இதுவரை பதிவினை மேற்கொள்ளாதவர்களும் தவறாது கலந்து கொண்டு தங்களது அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும். மேலும் எமது சங்கத்தில் பதிவினை மேற்கொண்ட 2004 ஆம், 2005 ஆம், 2006 ஆம் ஆண்டு வெளிவாரிப் பட்டதாரிகளும் அவசியம் கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

செயலாளர்,
(98507) யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி பட்டதாரிகள் சங்கம்.


## தரம் 5 மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கையில் உள்ள பிரபல –முன்னணி ஆசிரியர்களின் கற்பித்தல் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

**புலமைச் சுடர்**

எதிர்வரும் 20.05.2010 முதல் வாரந்தோறும் உங்கள் அபிமான சுடர் ஒளி - கல்விச்சுடர் தயாரித்து வெளியிடும்

வியாழன் தோறும்

10 ரூபா விலையில்

**தரம் 5,4 மாணவர்களுக்கான முன்னோடிக் கையேடு**

* *முழுமையான மாதிரி வினாத்தாள்* - **தரம் 05**
* *அடிப்படை மாதிரி வினாத்தாள்* - **தரம் 04**
* *பாடரீதியான வினாத்தொகுப்பு*
* *இலகுவழிக் கற்றல் குறிப்புக்கள்*

*இன்னும் பல விடயங்களுடன்*

அனைத்துப் பிரபல்ய ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் ஒருவார கால ஆக்கங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட ஒரேயொரு முன்னோடி கற்றல் கையேடு

உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே அருகில் உள்ள உதயன் பத்திரிகை விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு:
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.
021-5677222
(விநியோகப் பிரிவு)
011-5738855
071-4273035 (ஆசிரியர்)


## பாராட்டு விழா

யாழ்ப்பாணம்,மே18

யாழ்.பல்கலைக் கழகத்தில் இந்த வருடம் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற இளவாலை புனித யுதாததேயு பங்கின் பட்டதாரிகளுக்கான பாராட்டு வைபவம் இன்று புனித யுதாததேயு ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

இளவாலை பங்குத் தந்தை அருட்பணி ஏ.பி. தேவசகாயம் அடிகளார் தலைமையில்நடைபெறும். இந்த நிகழ்வு இன்று பிற்பகல் 4 மணிக்குத் திருப்பலியும் தொடர்ந்து 5 மணிக்குப் பாராட்டு நிகழ்வும் இடம்பெறவுள்ளன. (ஒ-16)

## விபத்தில் சிக்கியவர் மரணமானார்

யாழ்ப்பாணம்,மே18

கோப்பாயில்கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபர் நேற்று முன்தினம் சிகிச்சை பயனின்றி மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த வல்லிபுரம் மகாதேவன் (வயது -73) என்ற முதியவரே எதிரே வந்த மோட்டார் சைக்கில் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்து தொடர்பாக மோட்டார் சைக்கிள் சாரதியைக் கைது செய்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-16)

## ஆங்கில ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே18

தீவக வலயப் பாடசாலைகளில் ஆங்கிலப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான 'வாழ்க்கைத்திறன் விருத்திக்காக ஆங்கிலம்' எனும் செயற்றிட்டக் கருத்தரங்கு நாளை ஆரம்பமாகி 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு ஜனாதிபதி செயலணிக் குழுவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

வேலணை ஆசிரிய நிலையத்தில் 19 - 23ஆம் திகதி வரை முதலாம் அமர்வும், 26-30ஆம் திகதி இரண்டாம் அமர்வுகளும், 10 தினங்கள் நடைபெறும் எனவும் தீவக வலய ஆங்கிலப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஒ-267)


## Pesonal Class

நடாகரும் ஆங்கிலமும்-A/L,தமிழ்-O/L (2010) (Day class) உங்கள் வீட்டில் வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு,
ஸ்ரீ.ரமணன் தொ.பே.0774006948
(மருதர் சபை எல்லைக்குள் இருப்பது விரும்பத்தக்கது)

(98387)


## தவறிவிட்டது

2/2,1ம் ஒழுங்கை, மருதடிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய மாணிக்கம் ஜோசப் ராஜரெட்ணம் என்பவரின் தே.அ.அட்டை (542421770V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:0773316402 (98395)

## மிக அன்போடு வாழ்த்திப் பாராட்டுகிறேன்



திரு. சில்வேஸ்திரி அலென்ரின்
(உதவன்)
(பாராளுமன்ற உறுப்பினர்)



உயர்திரு. கௌரவ
கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்)



திரு. சந்திரகுமார் முருகேசு (அசோக)
(பாராளுமன்ற குழுக்களின் பிரதித்தலைவர், பாராளுமன்ற உறுப்பினர்)

எமது மக்களின் உள்ளங்களை வென்றெடுக்க வேண்டும். பதவிகள் இன்றுவரும்; நாளை போய்விடும். இது யதார்த்தம். ஒரு பதவியில் தொடர்ந்து இருந்து அதிகாரத்தோடு பலகாலம் இருக்க முடியாது. மக்களோடு வெறுப்புக் கொள்ளாது அன்பு, பண்பு கொண்டு, இதய சுத்தியோடு உதவிக்கரம் நீட்டி உங்களால் செய்யும் உதவிகளை வெறுப்பில்லாது எந்தவித மனவிரோதங்களும் இன்றி செயலாற்றி எமது அமைச்சர் அவர்களின் பெயருக்குக் களங்கம் இல்லாது நடந்து அவரைப்போல் மக்களை அன்போடும், பண்போடும், விசுவாசத்தோடும், நல்லவன் கெட்டவன் என்று பாராது உண்மை விசுவாசத்தோடு உதவிக்கரம் நீட்டிப் பழகிக்கொள்வது போல் நீங்களும் நடந்து மக்களின் அன்பைப் பெற்று நடப்பீர்கள் என மிக அன்போடு பாராட்டும்,

லாலா சோப் ஸ்தாபனத்தார்,
லாலா சோப் தொழிற்சாலை,அச்சுவேலி.

(வி/567725)

## தீவகம் தெற்கு பிரதேச சபை, வேலணை.

## கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைக்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.

கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி: 19.05.2010 மு.ப. 8.30 தொடக்கம் 20.05.2010 பி.ப. 1.30 வரை. கேள்விப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி 25.05.2010 பி.ப. 12 மணி.

கேள்வி திறக்கும் காலம்:25.05.2010 பி.ப. 1.30 மணி.

| வேலை விவரம் | ஒப்பந்த காலம் | இக்ராட் பதிவுப் புத்தகம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்வி வைப்பு |
|---|---|---|---|---|
| குறிகாட்டுவானில் தற்காலிக இளைப்பாறும் மண்டபம் அமைத்தல் | 21 நாள்கள் | M8/C9 | 25000.00 | 1000.00 |

மேற்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்வி இக்ராட் தரத்திற்கு பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தகாரரிடமிருந்து எம்மால் கோரப்படுகின்றது.

கேள்விப் பத்திரங்கள் மூன்று பிரதிகளில் பூர்த்திசெய்யப்பட்டு இரண்டு பிரதிகள் செயலாளர், தீவகம் தெற்குப் பிரதேச சபை, அவர்களுக்கு முகவரியிடப்பட்டு கடிதத்தின் இடதுபக்க மேல்மூலையில் வேலையின் விபரத்தை குறிப்பிட்டு எமது அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும் அல்லது பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். மூன்றாவது பிரதி யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். மேலதிக விவரங்கள் தேவைப்படின் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். கேள்வி திறக்கும் வேளையில் கேள்விதாரர் அல்லது பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

கெஜரெத்தினம் தவராசா,
செயலாளர்,
தீவகம் தெற்கு பிரதேச சபை, வேலணை.

(வி/567727)

## அறிவித்தல்

கனகராஜா மோகனதாஸ் ஆகிய நானும் எனது மனைவி ராதிகா மோகனதாஸ் ஆகிய நாங்கள் சுவிஸ்சர்லாந்தில் இருக்கும்போது எனது ஆதனம் அதாவது ஏ.கே.நடராசா நொத்தாரிஸ் அத்தாட்சிப்படுத்தியதும் 2055-03.01.1989 ஆம் இலக்கம்கொண்ட ஆதனத்தை நாங்களும் கனடாவில் வதியும் மாமனாராகிய நமசிவாயம் ராஜேந்திராவும் பெண் விஜயலட்சுமியும் தமது உறுதி இலக்கம் 1890-31.08.1959 இல் நொத்தாரிஸ் வி.எஸ்.சிவகுருநாதன் அத்தாட்சிப்படுத்திய உறுதிமூலமும் சொந்தமான ஆதனத்தையும் இருபகுதியும் சேர்ந்து அறுதி விற்க, 05.03.2005 இல் கனடாவில் இருக்கும் நொத்தாரிஸ் விஜயராணி அன்ரனி மூலம் அத்தாட்சிப்படுத்திய அற்றோனித்தத்துவ மூலம் அறுதி விற்கவும், கனகராஜா மோகனதாஸ் ஆகிய நான் எனது மனைவியும் சுவிஸ்சர்லாந்தில் இருந்து 15.04.2005 இல் நொத்தாரிஸ் குயிஸ்ரவ் லியன்ஹார்ட் மூலம் அத்தாட்சிப்படுத்தி அற்றோனித்தத்துவ மூலமும் அறுதிவிற்க கரவெட்டி கிழக்கு, கரவெட்டியில் வதியும் பழனிப்பிள்ளை ஈஸ்வரநாதனுக்கு தத்துவம் கொடுத்திருந்தோம்.

தற்போது நாங்கள் இலங்கைக்கு வந்திருப்பதனாலும் குறித்த தத்துவப் பத்திரத்தின் பதிவுபட்ட பிரதி காணாமல் தவறவிட்டமையாலும் இன்றில் இருந்து குறித்த இரு தத்துவங்களும் சட்ட வலுவற்றதாகி விட்டன. எனவே குறித்த தத்துவங்களை இன்றில் இருந்து பயன்படுத்தி எத்தகைய உறுதிப்படுத்தலுக்கோ, உறுதிகளோ எழுதி காணி மாற்றம் செய்யயின் அவை சட்டரீதியற்றதாகி விட்டன என்றும் அதற்கு இன்றில் இருந்து நாங்களோ தத்துவக்காரனோ பொறுப்பாளிகள் அல்லர் என இத்தால் இவ் அறிவித்தல் தரப்படுகின்றது.

உண்மையுள்ள,
கனகராசா மோகனதாஸ் &
பொன் ராதிகா.

இந்திரபவனம்,
செட்டித்தெரு,பருத்தித்துறை.

(98501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி யுத்தத்தில் இறுதிக்கட்டத்தில் காணாமற்போன

# அருட்தந்தை பிரான்சிஸ் தொடர்பான தகவல்களை பெற்றுத்தருமாறு பாப்பரசரின் பிரதிநிதியிடம் கோரிக்கை

கொழும்புத்துறை,மே18

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது காணாமற்போன அருட் தந்தை பிரான்சிஸ் யோசப் அடிகளார் தொடர்பான தகவல்களை அரசிடம் இருந்து பெற்றுத்தருமாறு பாப்பரசரின் பிரதிநிதி மேதகு ஜோசப் ஸ்பிறிற்றேரி ஆண்டகையிடம் கோரிக்கை முன்வைக் கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் மேற் கொண்டிருந்த பாப்பரசரின் பிரதிநிதிக் கும் யாழ். ஆயர் தலைமையிலான குழு வுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப் பின் போதே இக்கோரிக்கை ஆயர் குழு வால் முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக உரியவர் களுடன் தொடர்புகொண்டு காணாமற் போன அருட்தந்தை பிரான்ஸிஸ் யோசப் தொடர்பான தகவல்களைப் பெற்றுத்தரு வதாக அவர் உறுதியளித்தார். (1-6-135)

## விடைத்தாள் திருத்த விண்ணப்பிக்கலாம்

கோப்பாய்,மே18

ஜி.சீ.ஈ சாதாரண தரம்-2010 டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள உள்ள தேர்விற்கான விடைத்தாள் திருத்தும் பணிக்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதம பரீட்சகர், மேலதிக பிரதம பரீட் சகர்,உதவிப் பரீட்சகர், கணிதப் பரீட்சகர் ஆகிய பணிகளுக்காக இவ்விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 31.05.2010 ஆகும். இவ்வருடம் யாழ்ப்பா ணத்திலும், நெல்லியடியிலும் மதிப்பீட்டு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்ககப்பட்டுள்ளது. (50-72)

## வீதிப் பெயர்ப் பலகைகளில் தமிழ்க் கொலை




கைதடி,மே18

குடாநாட்டில் ஏ-9 வீதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் நட்டப்பட்டுள்ள வீதிப் பெயர்ப் பல கைகளில் உள்ள தமிழ் எழுத்துக்களில் பிழைகள் காணப்படுவதாக அவற்றைப் பார்வையிடும் பொதுமக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர்.

நாவற்குழிப் பிரதேசத்தை அடை யாளம் காட்டும் பெயர்ப்பலகையில் நாவற்குழி என்பதற்குப் பதிலாக 'நாவந் குழி' என்று எழுதப்பட்டுள்ளது. இத்த கைய தமிழ் எழுத்துப் பிழைகள் இன்னும் பல பெயர்ப்பலகைகளில் காணப்படுவதா கத் தெரியவருகின்றது.

இத்தகைய நிரந்தரமான பெயர்ப்பலகைகளை நிறுவுவதற்கு முன்னர் அவற்றி லுள்ள எழுத்துப் பிழைகளைச் சரி பார்த்துக் கொள்வது வீதி அபிவிருத்தி அதிகார சபை யினரின் கடமையாகும். இதனை விடுத்து தமிழ்க் கொலைக்கு இவர்களும் உடந்தை யாக இருப்பது வேதனையளிப்பதாக இவற்றைப் பார்வையிடும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-288)

## செம்மணி வீதியில் நாளாந்தம் முளைக்கும் விளம்பரப் பதாகைகள்

கைதடி,மே18

செம்மணிப் பிரதேசத்தின் ஏ9 வீதியின் இரு மருங்கிலும் பெருமளவிலான விளம் பரப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள் ளன. தென்பகுதியில் இருந்து வருகை தரும் நிறுவன்ங்கள் ஏட்டிக்குப் போட்டி யாக தமது விளம்பரப் பதாகைகளை நட்டு வருகின்றன.

இதனால் தினமும் இப்பகுதியில் புதிய விளம்பரப் பதாகைகள் அமைக்கப்படு கின்றன. வயல் வெளிகள், சதுப்பு நிலங் களில் கொங்கிறீட் போடப்பட்டு நிரந்தர மாக இவற்றை அமைக்கும் பணியிலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் ஆர்வம் காட்டுகின்றன.

தவிர ஏனைய நிறுவனங்களால் காட்சிப் படுத்தப்பட்ட விளம்பரப் பதாகைகளை அகற்றிவிட்டு தமது விளம்பரங்களை காட்சிப்படுத்தும் செயற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றன.

1995ஆம் ஆண்டுக்கு முன்னர் ஏ9 வீதியின் இரு மருங்கிலும் மரங்கள் நடப் பட்டு பராமரிக்கப்பட்டன. இன்று அந்த மரங்கள் அழிக்கப்பட்டு விளம்பரங்களை காட்சிப்படுத்தும் நடவடிக்கைகளால் மக் கள் விசனம் அடைந்துள்ளனர். இது குறித்து உரிய வர்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர். (க-288)




## கூட்டுறவுத் துறையை துரித கதியில் முன்னேற்ற விசேட செயலணி அமைப்பு

யாழ்ப்பாணம்,மே18

வடமாகாணத்தில் கூட்டுறவுத் துறையை துரித கதியில் முன்னேற்றுவதற்காக - அபிவிருத்தி செய்வதற்காக - ஆளுநரின் பணிப்பின் பேரில் விசேட துரித செய லணி ஒன்று அமைக்கப்பட் டுள்ளது. இத னூடாக கூட்டுறவுத்துறை யில் ஏற்பட் டுள்ள நெருக்கடிகள் களையப்பட்டு வளர்ச் சிப் பாதையில் கூட்டுறவுத் துறை பய ணிக்க முடியும்.

இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண அமைச்சின் செயலாளர் திருமதி ர.விஜய லட்சுமி.

வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன் தினம் கூட்டுறவுத் துறையை மீளமைப் பதற்கான பயிற்சிப் பட்டறையில் உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு-

மக்களுக்கு தன்னலமற்ற சேவையைப் புரிந்துவரும் கூட்டுறவுத்துறையில் சில பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. தொடர்ச் சியாக நிகழ்ந்த போரே இதற்கு முக்கிய காரணம். இப்போது போர் ஓய்ந்துள்ள சூழ லில் கூட்டுறவுத் துறை மூலம் மக்களுக்கு மீண்டும் முன்னரைப் போன்ற சேவையை வழங்குமுகமாகவே இந்தச் செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மிக விரைவில் அபரிதமான வளர்ச்சியை கூட் டுறவுத்துறை எட்டும் என எதிர்பார்ககின் றோம். - என்றார். (எ-224)

## இலகு வேலைத்திட்டத்தின் கீழ்

# தமது பகுதி வீதிகளை துப்புரவு செய்ய அனுமதிக்குமாறு கைதடி மக்கள் கோரிக்கை

கைதடி,மே18

இலகு வேலைத்திட்டத்தின் கீழ் கைத டிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் பல சீரற்ற முறையிலும், பாரபட்சமான முறையிலும் இடம்பெறுவதாக அந்த வேலைகளை மேற்கொள்ளும் பொதுமக்களால் புகார்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மேற்படி வேலைத்திட்டத்தின் கீழ் தமது கிராம சேவகர் பிரிவில் தமது பிர தேசங்களின் வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளப்படாமல் வேறு பிரதேசங்களி லேயே வேலைகள் மேற்கொள்ளப்படுவ தாகவும், இதனால் வேலைகளை மேற் கொள்ள வராத மக்களின் வீதிகளும் ஒழுங் கைகளும் துப்புரவாக்கப்படுவதாகவும் தமது வீதிகள், ஒழுங்கைகள் அசுத்தமாக வும் குப்பைகூழங்கள் நிறைந்து காணப்படு வதாகவும் இலகு வேலைத்திட்டத்தில் கலந்து கொள்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயத்தில் தென்மராட் சிப் பிரதேச செயலக அதிகாரிகள் உடன டிக் கவனமெடுத்து எமது பகுதியை நாம் வளப்படுத்த வாய்ப்பும் அனுமதியும் தர வேண்டும் எனவும் இலகு வேலைத் திட் டத்தில் பங்குகொள்ளும் மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். (50-6-288)

## தீவகப் பிரதேசத்தில் பப்பாசிச் செய்கைக்கு உதவி

நல்லூர்,மே18

வேலணை பிரதேச செயலர், ஊர்காவற் றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக ளில் கமநெகும அபிவிருத்தித் திட்டத் தின் கீழ் பப்பாசிச் செய்கைக்கான உதவி கள் வழங்கப்படவுள்ளன.

தெரிவு செய்யப்பட்ட ஐம்பது விவசா யிகளுக்கு றெட்லேடியன் இன பப்பாசிக் கன்றுகள் வழங்கப்படவுள்ளன. இதற் கென ஊர்காவற்றுறையிலும் வேலணை யிலும் தலா 25 பேர் வீதம் தெரிவு செய்யப் பட்டுள்ளனர்.

இதேவேளை வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் பி.எஸ்.டி.ஜீ.திட்டத்தின் கீழ் வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு ஒருவருக்கு 100 கிலோ வீதம் ஐந்து விவசாயிகளுக்கு நல்லின விதை வெங்காயத்தை வழங்கவும் வேலணை விவசாய போதனாசிரியர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-111)

## 'முட்டியில் வடியும் கள்ளுதான் எனக்குப் பிடிச்ச கள்ளு!'



வலி வடக்கு,மே18

நாட்டில் தற்போது எல்லாமே தலை கீழாக நடக்கத் தொடங்கிவிட்டன. பனை யில் இருந்து கள்ளு எடுப்பதிலும் இப்போது புதிய முறை-மாற்றம்!

குடாநாட்டில் பனை விருட்சத்தை கண் டாலே மதுப்பிரியர்களுக்கு கள்ளுதான் கண்முன்னே வரும். கீரிமலை கூவில் கள என்றால் மதுப்பிரியர்களுக்கு நாவில் எச் சில் ஊறும்!

சுமார் மூன்று தசாப்தங்களுக்கு முன் வெளியூர்களில் உத்தியோகம், வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள் அநேகம் பேர். அவர் கள் விடுமுறையில் வந்தால், பனை மரத்தின் கீழ் போய் ஒரேயடியாக குந்திவிடுவார் கள். அது அந்தக்காலம்.

சரி விஷயத்திற்கு வருவோம். பனையில் இருந்து மண் முட்டியில்தான் கள் சேக ரிப்பது வழமை. ஆண்டாண்டு காலம் இது தான் நடைமுறை. ஆனால் இப்போது 'பிளாஸ் டிக்' போத்தல்களைக் கட்டி அவற்றில் கள்ளைச் சேகரிக்கிறார்கள்.

இதனால் கள்ளின் சுவை மாறிவிடுகிறதாம். கள்ளில் காணப்படும் 'காரத்' தன்மை காரணமாக இரசாயன மாற்றம் ஏற்பட்டு அதன் தன்மை வேறுபடும். இது விஞ் ஞான ரீதியான ஒரு மாற்றமே. இதனால் உடலுக்கு தீங்கு ஏற்படும் சாத்தியங்களும் உண்டு.

மது தலைக்கேறியவர் ''முட்டியில் வடியும் கள்ளுதான் எனக்குப் பிடிச்ச கள்ளு'' என்று பிதற்றுவது காதில் விழுகிறது. (ஒ-86)

## வலி. கிழக்குப் பிரதேசத்தில் போக்குவரத்துப் பொலிஸார் வாகனச் சோதனை


கோப்பாய்,மே 18

வலி.கிழக்கு பிரதேசத்தில் போக்கு வரத்து கண்காணிப்பு பிரிவு பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகள் தீவிரம் பெற் றுள்ளன.

இப்பிரதேசத்தில் பல்வேறு வீதிகளிலும் குழுவாக வரும் பொலிஸார் திடீர் பரிசோத னைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


வாகனம் ஓட்டும் வேகம், பயணிப்போர் எண்ணிக்கை, வாகனங்களின் சைகை விளக் குகள், தடுப்புகள் மற்றும் ஆவணங்களை யும் பரிசீலித்து ஆலோசனைகளை வழங் கியும் தண்டப்பணம் விதித்தும் வருகின்ற னர்.

இதையடுத்து வாகன ஓட்டுநர்கள் அவ தானத்துடன் செயற்பட்டு வருகின்றனர். (50-72)









யாழ்.தாதியர் பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் தமது கடந்த நான்கு மாதக் கொடுப்பனவுகளை வழங்கக் கோரி நேற்றுக் காலை அடையாளப் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்த போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. தாதியர் பயிற்சிக் கல்லூரி நுழைவாயிலுக்கு முன்பாக பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருக்கும் தாதிய மாணவர்களுடன் பொலிஸார் ஒருவர் உரையாடுவதனை முதல் படத்திலும், தாதிய மாணவிகளில் ஒரு பகுதியினர் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருப்பதனை இரண்டாவது படத்திலும் தமது பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்கான காரணத்தை விளக்கியும் தமக்குத் தீர்வை பெற்றுத்தருமாறு கோரியும் மகஜர் ஒன்றினை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜாவிடம் மாணவர்கள் சார்பாக பிரதிநிதிகள் கையளிப்பதனை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன், கரன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 7 ஆவது பிறந்தநாள் வாழ்த்து




வீரபத்திரர் கோயிலடி, உடுப்பிட்டியில் வசிக்கும் **ஜீவராஜா-பிரியா** தம்பதிகளின் செல்வப் புதல்வன் **ஜீ.நட்ரேஷ்** தனது 7 ஆவது பிறந்தநாளை இன்று [18.05.2010] செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை லண்டனில் வசிக்கும் அப்பா ஜீவராஜா, அம்மா பிரியா, பூஅப்பம்மா, ஜெயாமாமா, கனடாவில் வசிக்கும் கோபி சித்தப்பா, மாலா சித்தி, அவுஸ்திரேலியாவில் வசிக்கும் சோபி அத்தை, உடுப்பிட்டியில் வசிக்கும் தவம் தாத்தா, கமலம் அம்மம்மா, பேபி அப்பப்பா, நவம் அப்பம்மா, சுவிசித்தி, சிந்து சித்தி, அபி சித்தி, ரகு மாமா, ஸ்ரீமாமா, கிரி அத்தை, கிருஷ்ணா அத்தை மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பலதும் பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
**தவம்-பேபி தாத்தா.**

(96608)

# அஞ்சலி நிகழ்வு இன்று காங்கிரஸ் அலுவலகத்தில்

யாழ்ப்பாணம், மே 18

முள்ளிவாய்க்காலில் மௌனமாய் புதையுண்டு சிதைவடைந்து போன மாண்புடைய மனிதர்களாகிய எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் 43, 3 ஆம் குறுக்கு வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசியத்துக்கான மக்கள் முன்னணி தலைமைப் பணிமனையில் நடைபெறும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் முன்னணியின் முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்துவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(1)

## ராஜன் ஆபரண மாளிகை
### வாடிக்கையாளர் கவனத்திற்கு

நெல்லியடி பிரதான வீதியில் தற்காலிகமாக இயங்கிவந்த ராஜன் ஆபரண மாளிகை அதன் நிரந்தர அமைவிடமாகிய இல.7, தனங்கிளப்பு வீதி, சாவகச்சேரியில் மீண்டும் புதுப்பொலிவுடன் இயங்க ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

**ராஜன் ஆபரண மாளிகை.**
**0773086859**

குறிப்பு: நெல்லியடிக் கிளை மிகவிரைவில் மீண்டும் அதே இடத்தில் இயங்கும் என்பதனையும் எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். (98399)

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* மோட்டோ கிறேடர் இயக்குநர் (Motor Grader Operator)
* வீதி உருளை இயக்குநர் (Road Roller Operator)

தகுதியுடையவர்கள் தமது விண்ணப்பங்களை 25.05.2010 ஆம் திகதிக்கு முன்பாக எமக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். **யுரோவில், 866, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/567726)

## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலக கிராம அலுவலர் (J/158 வட்டு.வடக்கு) திருமதி திலகவதியார் சிவபாக்கியநாதன் அவர்களின் அன்புக் கணவர்

**இராமலிங்கம் சிவபாக்கியநாதன்**
(ஓய்வுபெற்ற காசாளர், இலங்கை வங்கி)

அவர்கள் 14.05.2010 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பிரதேச செயலகம், வலி.மேற்கு,சங்கானை. (98396) பிரதேச செயலரும் நலன்புரி சங்கஅங்கத்தவர்களும்.

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல ஸ்தாபனத்திற்கு பின்வருவோர் தேவை.

* கணனி இயக்குநர்
* மருந்து விற்பனையில் அனுபவமுள்ளவர்கள் (நன்கு அனுபவமுள்ளவர்கள் மட்டும்)
* அழகு சாதனப் பொருள்கள் விற்பனை அனுபவமுள்ளவர்கள்.

தொடர்பு:- விளம்பர இல: 4022
மே/பா உதயன்.

## காணி விற்பனைக்கு

சுண்டுக்குழி, றக்கா ஒழுங்கையில் 3½ பரப்புக்காணியுடன் பழைய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு - ஆ. இராசசிங்கம்
இல.474, நாவலர் வீதி,
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 8178

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

காலம்: 30.05.2010 ஞாயிறு மு.ப 10 மணி.
இடம்: பாடசாலை மண்டபம்.

### நிகழ்ச்சி நிரல்

1. இறைவணக்கம்
2. தலைமையுரை
3. சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல்
4. செயற்பாட்டறிக்கை
5. பொருளாளர் அறிக்கை
6. புதிய நிர்வாக சபை தெரிவு
7. புதிய நிர்வாகத்தினர் அறிமுகம்
8. பிரேரணைகள்
9. நன்றியுரை
10. இறைவணக்கமும் நிறைவும்.

சகல பெற்றோர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

* முக்கிய குறிப்பு: பிரேரணைகள் இருப்பின் 28.05.2010 இற்கு முன்பாக செயலாளர், பா.அ.சங்கம், யாழ். இந்து ஆரம்ப பாடசாலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

திரு.பா.செந்தில் நந்தனன்
கௌரவ செயலாளர்.

(சி/567724)

## கண்ணீர் அஞ்சலி

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர் ஆ.டேவிற்சன் அவர்களின் அன்புத் தந்தை **சாமிமுத்து ஆசீர் தேவதாஸ்** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம் (பாடசாலைச் சமூகம்).

(98390)

## வீடு விற்பனைக்கு உண்டு

மருதனார்மடம், றோயல் சேவிஸ் ஸ்ரேஷனுக்கு முன்பாக 05 பரப்புக் காணியுடன் கூடிய வீடொன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: ச.மங்கையர்க்கரசி
றோயல் சேவிஸ் ஸ்ரேஷன் வீதி
மருதனார்மடம்.
தொ.பே.இல. 077 3737668 (98383)

## தவறிவிட்டது

மீசாலை வடக்கு, கொடிகாமத்தைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் கருணாதேவி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.725373880V) கடந்த 05 ஆம் திகதியன்று சாவகச்சேரி மக்கள் வங்கி அருகாமையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் அல்லது சாவகச்சேரி நவீனசந்தை செல்வம் கூல்பாரில் கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொ.பே:- 0771727073, 0772165768, 0776154078

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அந்தோனிப்பிள்ளை மரியம்மா**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 22.11.1939 | 18.05.2009 |

எமது பாடசாலையில் கற்பிக்கும் சக ஆசிரியரான திரு.சு.அன்ரன் டயஸ் அவர்களின் தாயாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்தினருடன் எமது நினைவலைகளையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

மு/கோட்டை கட்டியகுளம்
அ.த.க.பாடசாலை
அக்கராயன்குளம். (98393)

அதிபர் மற்றும் ஆசிரிய நண்பர்கள்.

# ஓராண்டு நினைவலைகள்

தாயின் மடியில் 17.07.1950

ஆண்டவன் அடியில்: 18.05.2009



**அமரர் சண்முகராசா நல்லநாதன்**
*(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிஸும்)*
திதி: அபரபட்ஷ நவமி

ஒளிவிளக்காயிருந்து எமக்கு
வழிகாட்டிய அன்பின் சித்தப்பாவே
பண்பின் சிகரமாயிருந்து - எம்மை
உயரவைத்த சித்தப்பாவே
பாசத்தினால் எம்மை ஆண்ட எம் அன்புச் சித்தப்பாவே
ஆண்டு ஒன்று ஆனாலும்
அணையாதே உங்கள் நினைவுகள்....!

639/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இலங்கை அண்ணர் குடும்பத்தினர்.

## இறை தியான ஆயத்த வழிபாடுகள்

கொழும்புத்துறை
மே 18

யாழ்.பழைய பூங்காவீதியில் உள்ள இறைதியான இல்லத்தில் தூய ஆவியின் பெந்தக்கோஸ்தே விழாவையொட்டி மூன்று தினங்கள் விசேட ஆயத்த வழிபாடுகள் இடம் பெறவுள்ளன.

நாளை புதன்கிழமை தொடக்கம் மூன்று தினங்கள் தினமும் மாலை 4 மணி தொடக்கம் இந்த வழிபாடுகள் நடைபெறும்.

(1)

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

**செல்வி சாருஜா நந்தகுமார்** (சாருக்குட்டி)
(அச்சுவேலி குழந்தை யேசு பாலர் பாடசாலை மாணவி)

அன்னை மடியில் 28.08.2006

ஆண்டவன் அடியில் 04.04.2010



முத்தே முழுநிலவே எம்
குலத்தில் பூத்த சாருக்குட்டியே
எங்கம்மா நீ சென்றாய்
ஈரேழு உலகமும் தேடுகின்றோம்
உன் முகத்தைக் காணவில்லை.
துள்ளித் திரிந்த பள்ளி நாள்கள்
உன்வரவை தேடுதம்மா.
வட்டமிடும் உன் கண்கள்
எம் மனதை வாட்டுதம்மா.
45 நாள்கள் ஓடி மறைந்ததம்மா
மாறவில்லை உன் கவலை எம்மைவிட்டு.
இன்னொரு பிறப்பிருந்தால் எம் குலத்திலேயே
வந்து உதிக்க ஆண்டவனை
வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*உன் பிரிவால் வாடும்:*
அப்பா (கொலண்ட்), அம்மா, அன்பு அண்ணா-சாரங்கன் மற்றும் ஐயா, பெரியப்பாமார், பெரியம்மாமார்,மாமாமார், அத்தைமார், சித்திமார், சித்தப்பாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார்,அம்மப்பாமார், அம்மம்மாமார், அண்ணாமார், அக்காமார், தம்பிமார், மச்சிமார்.

*சங்கானை வீதி, தென்மூலை, அச்சுவேலி.*

(98394)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களின் உயர்கல்விக்கு உதவக்கூடிய வகையில் மனவளக் கலையை பாடசாலைகளில் பயிற்றுவிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே 18

முழுமையான நல வாழ்விற்காக மனவளக் கலைக்காயகல்பப் பயிற்சியை யாழ்.மாவட்டப் பாடசாலை மட்டத்தில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என இலங்கை மனவளக் கலைமன்ற துணைப் பேராசிரியர் அருள்நிதி எஸ்.முருகானந்தவேல் தெரிவித்தார்.

மனவளக் கலைக் காயகல்பப் பயிற்சி தொடர்பான அறிமுக நிகழ்வு, கடந்த 8 ஆம் திகதி யாழ்.இந்து மகளிர் கல்லூரி பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போது எஸ்.முருகானந்தவேல் தெரிவித்த மேலும் சில விடயங்கள் வருமாறு:

விஞ்ஞான பூர்வமாக ஆராயப்பட்டு அங்கீகாரம் பெற்ற வாழ்வியல் கலையாக மனவளக் கலை காயகல்பப் பயிற்சி உள்ளது. இந்தக் கலைமூலம் சாதனைகளைப் படைக்க முடியும். இந்தக் கலை மனிதத் தன்மையை உருவாக்குகின்றது. இறை தன்மை மிக்க இக்கலை மூலம் உடல், உள,உயிர் ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

மனவளக் கலையை பாடத்திட்டத்தில் ஓர் அங்கமாக தமிழகப் பாடசாலைகள் கொண்டுள்ளன. அதற்குரிய அங்கீகாரத்தையும் தமிழக அரசு வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் கலந்துரையாடி யாழ்.மாவட்டத்திலுள்ள பாடசாலைகளிலும் மனவளக் கலையைப் போதிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றோம். பாடசாலை மட்டத்தில் இந்தக் கலையைப் போதிப்பதன் மூலம் இளம் சமூகம் தடம் புரளாமல் தமது இலக்கில் சாதனை படைக்க வழிவகை செய்யலாம்- என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்நாடு மனவளக் கலைப் பேராசிரியர் அருள்நிதி வேதசுப்பையா மனவளக் கலை தொடர்பான அறிமுக உரையினையும், பயிற்சியினையும் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். (எ-14)

## அரியாலைப் பகுதியில் கிராமிய மதிப்பீடு

நல்லூர்,மே18

அரியாலையில் மக்கள் பங்கேற்கும் முறையி லான கிராமிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் தெரிவித்தார்.

இது தொடர்பாக எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தில் ஜே-89, ஜே-90 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் பங்களிப்புடன் அபிவிருத்தி வாழ்வாதாரத் தேவைகள், அடிப்படைத் தேவைகள் குறித்தும் மீள் குடியேற்றத்திற்கு முன்னோடியான தேவைகள் குறித்தும் ஆலோசிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்ட இரு பகுதிகளையும் சேர்ந்த மக்கள் இதன்போது சமுமளிக்குமாறும் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன் அறிவித்துள்ளார். (50-111)

## குடாநாட்டில் தொடரும் குற்றச் செயல்களால் குறைந்துபோன சுற்றுலாப் பயணிகள் வருகை

யாழ்ப்பாணம்,மே 18

குடாநாட்டில் அதிகரித்துவரும் குற்றச்செயல்கள் காரணமாகவே சுற்றுலாப் பயணிகள் வருகை குறைவடைந்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கொலை,கொள்ளை,ஆள்கடத்தல், கப்பம் கோரல் போன்ற குற்றசெயல்கள் திடீரென குடாநாட்டில் என்றும் இல்லாதவாறு அண்மைக்காலமாக நடைபெற்று வருகின்றன.

இந்தக் குற்றச் செயல்களால் உண்டான பீதி காரணமாகவே பயணிகளின் வருகை சடுதியாகக் குறைந்துள்ளது என்று தென் பகுதியில் இருந்து வந்த சுற்றுலாப் பயணி ஒருவர் கூறியுள்ளார்.

அந்தப் பயணி மேலும் தெரிவிக்கையில்,யாழ்ப்பாணத்தைப் பார்வையிடுவதற்கு தற்போது அரிய சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. இதைப் பயன்படுத்தி யாழ். குடாவைப் பார்வையிட்டு மகிழ்வுடன் செல்கின்றோம்.

குடாநாட்டில் இதுவரை காலமும் இல்லாதவாறு குற்றச்செயல்கள் தலைதூக்கிக் காணப்படுகின்றன.

இந்தக் குற்றச் செயல்களால் தமக்கும் பாதிப்பை உண்டு பண்ணிவிடுவார்கள் என்றே யாழ்ப்பாணம் வருவதற்கு பயணிகள் அச்சமுற்றுக், காணப்படுகின்றனர்- என்றார். (எ-224)

## காரைநகர் பிரதேசசபைப் பிரிவில் 33லட்சம் ரூபா செலவில் அபிவிருத்தி

காரைநகர்,மே 18

பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை வேலைத் திட்டத்தின்கீழ் காரைநகர் பிரதேச சபை ஊடாக இவ்வாண்டு 33 லட்சம் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெறவுள்ளன.

காரைநகர், வேதரடைப்பு சனசமூக நிலைய கட்டடம் அமைப்பதற்கு ஆறு லட்சம் ரூபாவும், பேரம்பலம் பாலர் பாடசாலைக் கட்டடப் பணிகளுக்கு ஐந்து லட்சம் ரூபாவும்,

வேதரடைப்பு பாலர் பாடசாலைக்கு மலசலகூடம் அமைப்பதற்கு இரண்டு லட்சம் ரூபாவும்,கழிவகற்றல் முகாமைத்துவத்தினை முழுமையாக்குவதற்கு பதினாறு லட்சம் ரூபாவும், காரைநகர் பிரதேச சபையின் உப அலுவலக நூலக தளபாடக் கொள்வனவிற்கு நான்கு லட்சம் ரூபாவும் குறித்தொதுக்கப்பட்டுள்ளது. (50-250)

## மாலுசந்தி மின்சாரசபை அலுவலகத்துக்கு சென்றவரின் பணம், ஆவணங்கள் மாயம்

யாழ்ப்பாணம்,மே 18

பருத்தித்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்கு விண்ணப்பம் ஒன்றை வழங்கச்சென்ற புலோலி வடகிழக்கைச் சேர்ந்த பா.சந்திரகுமார் என்பவர் பெருந்தொகைப் பணம் மற்றும் முக்கிய ஆவணங்களைப் பறிகொடுத்த சம்பவம் ஒன்று நேற்றுக் காலை மாலுசந்தியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது: மந்திகையில் கராஜ் ஒன்றை நடத்திவரும் பிரஸ்தாப நபர் மின்பாவனையாளர் நிலைய முன்றலில் தனது சைக்கிளை நிறுத்திவிட்டு தன்னுடன் எடுத்துவந்த கைப்பையையும், சைக்கிளில் வைத்துவிட்டு தனது காரியத்தை முடித்து மீளவும் வந்து பார்த்தபோது கைப்பை மாயமாய் மறைந்தது தெரியவந்தது என்று கூறப்படுகிறது. (50-14)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## மணற்காட்டில் 4 முன்பள்ளிகளுக்கு கியூடெக் நிறுவனம் உதவி வழங்கியது

வடமராட்சி,மே 18

கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தினால் மணற்காட்டில் உள்ள 4 முன்பள்ளிகளுக்குத் தேவையான கதிரைகள்,கரும்பலகைகள் உள்ளிட்ட உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் சென்ற வருடம் நடத்தப்பட்ட சிறுவர் தினப்போட்டிகளில் வெற்றி பெற்றோர்களுக்கும் இதன்போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சிறுவர் செயற்திட்ட முகாமையாளர் த.அஜந்தன், சிறுவர் உரிமை மேம்பாட்டுத் திட்ட உத்தியோகத்தர் என்.பத்மராஜ் நிகழ்வினை ஒழுங்குபடுத்தியிருந்தனர். சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மணற்காடு பங்குத்தந்தை அருட்திரு லெஸ்லி அடிகள் கலந்துகொண்டார். (236)

## பெண் தபாலதிபரின் தங்கச்சங்கிலியை அபகரிக்க முயன்றவர்கள் மாட்டினார்கள்

வலி.வடக்கு,மே 18

கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த உப தபாலதிபரின் சங்கிலியை அறுக்க முற்பட்டவர்கள் பொதுமக்களிடம் வகையாக மாட்டிக்கொண்டார்கள்.

சுன்னாகம் தபால் நிலையத்தில் கடமையாற்றும் பெண் உப தபாலதிபர் கடமை முடிந்து சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது, சுன்னாகம் ஐயனார் கோயிலடியில் ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று இளைஞர்கள் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓட முனைந்துள்ளனர். இந்தச் சம்பவத்தில் இருசாராரும் கீழே விழுந்துள்ளனர். இந்த வேளையில் பெண்ணின் கூக்குரலைக்கேட்டு அயலவர்கள் பலர் அங்கு திரண்டனர். இதனைக் கண்ட திருடர்களில் இருவர் மோட்டார் சைக்கிளில் தப்பியோட ஒழுங்கையொன்றில் மறைந்து நின்ற மூன்றாமவர் தேடுதலின்போது பிடிபட்டார்.

இந்த நபர் சுன்னாகம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் குற்றத்தடுப்பு பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட ஏனைய இருவரும் ஓட்டுமடம் பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. குறித்த சந்தேக நபர்கள் மூவரும் மல்லாகம் நீதிமன்றத்தில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டதைத் தொடர்ந்து இவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-86)

## காரைநகர் உ.அ. அதிபர் பிரிவில் இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே 18

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெற்ற பிரதேச தேசிய இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோரின் பெயர் விவரம் வருமாறு:

**கட்டுரை -கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- செல்வி ந.எயேந்திமாலா (வியாவில் சைவ வித்தியாலயம்), இரண்டாம் இடம் -செல்வி ம.சிவகௌரி (யாழ்ற்ரன் கல்லூரி), மூன்றாம் இடம்- செல்வி க. சாந்தினி (புதுவீதி, காரைநகர்)

**கவிதை -கனிஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- செல்வி இ.சசிரேகா (வியாவில் சைவ வித்தியாலயம்), இரண்டாம் இடம் -செல்வன் த.கௌரிதரன் (யாழ்ற்ரன் கல்லூரி),மூன்றாம் இடம்- செல்வி க. அன்னபூரணி (கலாநிதி ஆதியாகராசா ம.ம.வி.).

**கட்டுரை -சிரேஷ்ட பிரிவு**

முதலாம் இடம்- செல்வி ம.தரங்கினி (கிழவன்காடு கலாமன்றம்),

**சிறுகதை -திறந்த பிரிவு**

முதலாம் இடம்-செல்வி த.சுகந்தினி (காரைநகர் வடகிழக்கு), இரண்டாம் இடம் -க.கலைச்சந்திரன் (காரைநகர் வடகிழக்கு). (50-250)




திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சைவச் சிறுவர் இல்லத்தில் 'சைவ வித்தியா' மலர் வெளியீடு அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் நூலின் முதற் பிரதியை நல்லை ஆதீன முதல்வரிடமிருந்து மேற்படி சங்கத்தின் பிரதிநிதி பெற்றுக்கொள்வதை முதலாவது படத்திலும், விழாவில் கலந்துகொண்ட சைவச்சிறுவர் இல்லச் சிறார்களை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் அரங்கேறிய 'எந்தையும் தாயும்' நாடகத்தின் காட்சியை இறுதிப் படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவி வெற்றிடங்கள்

ICTAD நிறுவனத்தில் C-4 தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள யாழ்.மாவட்ட கட்டட நிர்மாண நிறுவனம் பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1.சிவில் பொறியியலாளர் - (பல்கலைக்கழகம் ஒன்றில் சிவில் பொறியியல் துறையில் பட்டமொன்றினைப் பெற்றிருக்க வேண்டும். முன் அனுபவம் விரும்பத்தக்கது.)

2.சிரேட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் - (தொழில் நுட்பத் துறையில் தேசிய டிப்ளோமா தராதரத்துடன் 10 ஆண்டுக்குக் குறையாத முன் அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும்)

3.தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள் - (தேசிய தொழில் நுட்பச் சான்றிதழினை குடியியல் அல்லது கணிய அளவீட்டில் பெற்றிருத்தல் வேண்டும்)

4.சாரதி - (A தர சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்)

5.வார்ப்பக (Foundry) மேற்பார்வையாளர் - (இயந்திரவியல் துறையில் தேசிய தொழில் நுட்பச் சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும். அல்லது வார்ப்பக வேலைகளில் நல்ல முன் அனுபவம் உடையவர்களாக இருக்க வேண்டும்)

6.பயிலுநர்கள் (வார்ப்பக வேலைகள்)

5ஆம், 6ஆம் வகுதிகள் தவிர்ந்த ஏனைய பதவிகளுக்கான கடமைகள் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் எப்பகுதியிலும் அமையலாம்.

மேற்படி பதவிகளுக்கான வேதனந் தொடர்பாக விண்ணப்பதாரர்களின் தகுதிகளுக்கேற்ப பேசித் தீர்மானித்துக் கொள்ளப்படும்.

பயிலுநர்களுக்கு பயிற்சிக் காலத்தில் பயிலுநர் வேதனம் வழங்கப்படும்.

விரும்பும் விண்ணப்பதாரர்கள் 25.05.2010ஆம் திகதிக்கு முன்னராக தங்களின் விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்,
லிஸ்வைகர்மா (தனியார்) நிறுவனம்,
இல.28, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 2226781 (98382)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே18

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதீர்வரும் 26ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (204-224)

* * *

யாழ்ப்பாணம்,மே 18

நயினை, தில்லைவெளி பிடாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்தத் திருக்குளிர்த்திப் பொங்கல்விழா எதிர்வரும் 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருதலும் இடம்பெறும்.


கடை அல்லது
வீடு வாடகைக்குத்தேவை

கொழும்பில் பிரபல்யமான நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளைக்கு 750-1500 சதுரஅடி அளவு கொண்ட வீடுஅல்லது கடை தேவை

யாழ் நகரில் இருந்து 1.5 KM எல்லைக்குள்,பிரதான வீதியை அண்டி இருத்தல் வரவேற்கத்தக்கது.

- தொடர்புகளுக்கு -
தொ.பேசி:0772394422
0217538770


# கண்ணீர் அஞ்சலி



எமது திணைக்கள யாழ்ப்பாணப் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் பிரதம எழுதுவினைஞராகக் கடமையாற்றும் திருமதி ஜெகதாம்பிகை சிவப்பிரகாசம் அவர்களின் அன்புக் கணவரும், எமது சகோதர நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் (வடக்கு அலுவலகத்தில்) படவரைஞராகவும், தொழில்நுட்ப அலுவலராகவும் கடமையாற்றியவருமாகிய

**வீரகத்தி சிவப்பிரகாசம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வீதி அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம். (98385)
பிரதம பொறியியலாளர், நிறைவேற்றுப் பொறியியலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள்.

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 01 * 06 * 1980



இறப்பு 02 * 05 * 2006

**இராசரத்தினம் ரஞ்சித்**

*(ஊழியர், உதயன் பணிமனை)*

திதி: 18.05.2010

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இல.2, ஐந்து வீட்டுத் திட்டம்,
கைதடி, நாவற்குழி. (98379)
குடும்பத்தினர்.

# அறிவித்தல்

**மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**ஆதனப் பெயர் மாற்றம்**
**வட்டாரம் 13**
**கட்டுடை ஒழுங்கை**
**ஆதன இல.30**

வட்டாரம் 13 ,கட்டுடை ஒழுங்கை ஆதன இலக்கம் 30 இல் அமைந்துள்ள ஆதனமானது மாதன் செல்லத்துரை என்பவரால் அறுதியாக விற்கப்பட்டு சின்னவன் இரத்தினம் என்பவரால் குறித்த ஆதனம் 3080/01.01.1980ஆம் திகதி எழுதப்பட்ட உறுதி மூலம் தமக்கு சொந்தம் என்பதைத் தெரியப்படுத்தி எமது ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை மாற்றம் செய்வதற்காக பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனத்துக்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள், ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். அவ்வாறு எவராலும் எவ்வித உரிமையும் கோரப்படாதவிடத்து சின்னவன் இரத்தினம் எனும் பெயருக்கு மேற்குறித்த ஆதனம் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

செயலாளர்,
வலி.தென் மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.


சீட்டிழுப்பு இல. 2241
திகதி 2010.05.16

# மஹஜன சம்பத

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்
Y 1 4 7 2 2 2

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y | 1 | 4 | 7 | 2 | 2 | 2 | ரூபா. | 12,200,914/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 1 | 4 | 7 | 2 | 2 | 2 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | 01 |
| 2ம் பரிசுகள் | | | 4 | 7 | 2 | 2 | 2 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 05 |
| 3ம் பரிசுகள் | | | | 7 | 2 | 2 | 2 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 51 |
| 4ம் பரிசுகள் | | | | | 2 | 2 | 2 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 567 |
| 5ம் பரிசுகள் | | | | | | 2 | 2 | ரூபா. | 100/= | பரிசுகள் | 5,744 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. | 20/= | பரிசுகள் | 57,210 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 1 | 4 | 7 | 2 | 2 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 07 |
| 8ம் பரிசுகள் | | 1 | 4 | 7 | 2 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 64 |
| 9ம் பரிசுகள் | | 1 | 4 | 7 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 593 |
| 10ம் பரிசுகள் | | 1 | 4 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 5,683 |
| 11ம் பரிசுகள் | Y | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 22,776 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 12,230,763.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 6,228,570.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4507000 Hotline: 2433631

முடிவுகளை அறிய www.nlb.lk


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 17.07.1950

உதிர்வு: 18.05.2009



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், புளியங்கூடல், துணுக்காயை வதிவிடமாகவும் கொண்ட

திதி: அபரபட்ஷ நவமி

## அமரர் சண்முகராசா நல்லநாதன்

(சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் சமாதான நீதிவானும் மரண விசாரணை அதிகாரியும்)

*ஆண்டு ஒன்று கடந்தாலும் ஓயவில்லை எம் கண்ணீர்*
*எங்கள் அன்புத் தெய்வமே என்னகுறை எமக்கென்று*
*என்றுமே சிரித்தபடி நாம் இருந்தோம் ஒரு கூட்டுப் பறவைகளாய்*
*அன்பால் ஒன்று கூடி வாழ்ந்து இருந்தோமே*
*வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து எம்மையும்*
*நன்றாக வாழவைத்தீரே! யார்கண்தான் பட்டதுவோ*
*அடுத்தடுத்து துயரங்கள் யாரை யார் தேற்றுவது*
*என்று அறியாமலேயே உங்கள் நீங்காத நினைவுகளை*
*நித்தமும் நினைத்தபடியே கண்ணீர் சொரிவதைத் தவிர*
*வேறேதும் செய்யமுடியவில்லையே ஐயா!*
*ஆண்டுகள் என்ன எங்கள் உயிர்மூச்சு இருக்கும்வரை உங்களையே நினைத்தபடி*

639/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (98377)

கண்ணீருடன்:
மனைவி, பிள்ளைகள், உறவுகள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்

## திருமதி ஆறுமுகம் சொர்ணம்மா



தாய் மண்ணில் 16.04.1929

இறை வெளியுடன் 18.04.2010

கடந்த 18.04.2010 அன்று அமரத்துவம் அடைந்த எங்கள் குடும்பத்தலைவியின் மறைவையிட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தும், இறுதிச்சடங்கில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியும், மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவிப்பதுடன் இன்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

160(184) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்
தொ.பே.0776258265 - 0779371846

தகவல்:
பிள்ளைகள் (ரதிஅக்கா),
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள். (98352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசியாவில் தனியான அரச நிர்வாக நகர்;
# அதனால் வர்த்தகச் சுற்றுலாத் துறைகளில் பெருவெற்றி

*வளர்ச்சியடைந்த, வேகமாக வளர்ந்து வரும் நாடுகள் கடந்து வந்த பாதைகள் ஏனைய நாடுகளுக்குப் பாடங்களாக அமைகின்றன. அவர்கள் வளர்ந்த வழிமுறைகள், சந்தித்த சவால்கள், அடைந்த சாதனைகள் எமது எதிர்காலத்தை திட்டமிடப் பெரும் உதவியாக அமையும.*

*அதனடிப்படையில் கடந்த மார்ச் மாதம் "நல்லாட சி" என்ற தலைப்பில் ஓர் சர்வதேச பயிற்சிப்பட்டறையும், கல்விச் சுற்றுலாவும் வடமாகாண சுகாதார அமைச்சினால் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப் பயிற்சியில் வடமாகாண சபையின் உயரதிகாரிகளும், வடமாகாண சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளும், வடமாகாணத்தின் ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இப் பயிற்சியில் பங்கு பற்றிய அங்கத்தவர்களில் ஒருவர் என்ற ரீதியில் இந் நாடுகளில் படித்த பல பாடங்களையும், பெற்றுக் கொணட பல பயனுள்ள அனுபவங்களையும் இப் பயணக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.*

மலேசியா

| | |
|---|---|
| சனத்தொகை | - 28 மில்லியன் |
| நிலப்பரப்பளவு | - 332,633 சதுர கிலோ மிற்றர் |
| பேசப்படும் மொழிகள் | - மலே, சீனம், தமிழ். |
| மதம் | - இஸ்லாம் , பௌத்தம், இந்து, கிறிஸ்தவம். |
| நாணயம் | - றிங்கெற் |
| தலைநகரம் | - கோலாலம்பூர் |
| நிர்வாகத் தலைநகரம் | - புற்றஜாயா |

மலேசியாவில் சம்பிரதாயமான மன்னராட்சியுடன் பாராளுமன்ற ஆட்சியும் காணப்படுகிறது. இன்றைய நவீன மலேசியாவைக் கட்டியெழுப்பிய சிற்பியாக முன்னாள் பிரதமர் மகதீர் முஹமட் அவர்கள் மக்கள் அனைவராலும் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அவரது ஆட்சிக்காலம் பொற்காலமாக மக்களால் போற்றப்படுகிறது. தொழில் ரீதியில் வைத்தியரான இவர் அரசியலில் இறங்கி நாட்டிற்கு சிறந்த தலைமைத்துவத்தை வழங்கி நாட்டைப் புதிய வளர்ச்சிப்பாதையில் இட்டுச் சென்றுள்ளார்.

புற்றஜாயா - நிர்வாகத் தலைநகரம்

பொதுவாக நாடுகளின் தலைநகரங்களில் நிர்வாகக் கட்டமைப்பகளும். வர்த்தக மையங்களும், சுற்றுலா மையங்களும் ஒன்றாகக் கலந்திருப்பதால் எப்போதும் சன நெருக்கடியாகவும், வாகன நெருக்கடியாகவும் காணப்படும். இதனால் சேவைகளை வழங்குவதிலும், பெற்றுக்கொள்வதிலம் பல கஷ்டங்களும் அசௌகரியங்களும் காணப்படும்.

மலேசியாவில் முன்னாள் பிரதமர் மகதீர் முகமட்

# கற்குகை முருகன் கோயில் அந்நாட்டின் இந்துமத தொன்மைக்கோர் உதாரணம்

தனது காலப் பகுதியில் இந் நிலையை மாற்ற விரும்பினார். நாட்டின் அரச நிர்வாகக் கட்டமைப்பைக் கோலாலம்பூருக்கு வெளியே 30 கி.மீ. தொலைவில் புற்றஜாயா என்ற இடத்திற்கு மாற்றினார். பழைய இறப்பர் தோட்டம் இருந்த இடத்தில் மலேசியாவின் நிர்வாகத் தலைநகரைக் கட்டியெழுப்பினார்.

இத்தலைநகர் அமைக்கப்பட்ட இடத்தில் மிகச்சிறந்த, உயரிய, துல்லியமான திட்டமிடல் பண்புகளை நாம் காணலாம். இதனைத் திட்டமிடும்போது பின்வரும் விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அழகாக அமைய வேண்டும். தூய்மையாகக் கவர்ச்சிகரமானதாக, தனித்துவமானதாக இருக்க வேண்டும். தமது கலாசாரத்தைப் பிரதிபலிக்கவேண்டும். இயற்கையின் வனப்புடன் ஒன்றியதாக இருக்க வேண்டும்.

இந்நிர்வாகத் தலைநகரத் தொகுதியைச் சுற்றி செயற்கையான முறையில் ஓர் அழகான ஏரியை உருவாக்கி இதனை ஓர் சிறிய தீவாக அழகுற அமைத்துள்ளனர். பிரதமரின் அலுவலகம் ஏறத்தாழ இந்தியாவின் தாஜ்மகால் போன்ற அமைப்பில் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு அமைச்சுக் கட்டடமும் தனித்தனியான கட்டடக் கலையமைப்பில் கட்டப்பட்டுள்ளன. ஒரே மாதிரியான இரண்டு கட்டடங்களை இங்கு காணமுடியாது. ஒவ்வொன்றும் தனித்துவமானவை.

இங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் தங்குமிடவசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. கோலாலம்பூரிலிருந்து இங்கு குறுகிய நேரத்தில் சென்றுவர விசேட ரயில், பஸ் சேவைகள் நடத்தப்படுகின்றன. இங்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் ஓய்வு நேரங்களில் தமது பொழுதை இனிமையாகக் கழிக்க அழகான பூங்காக்களும், பொழுதுபோக்கு மையங்களும், வணக்கத்தலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டதின்படி கோலாலம்பூர் நகரத்தில் சனநெருக்கடியும், வாகன நெருக்கடியும். குறைந்துள்ளது. கோலாலம்பூர், நகரம் வர்த்தக மையமான சுற்றுலா நகரமாகவும் மாற்றப்படுகிறது. எமது நாட்டிலும் எமது தலைநகரைக் கோட்டைக்கு இடமாற்ற முயற்சிகள் இடம்பெற்றன. ஆயினும் அந்நகர்வுகள் முற்றுப்பெறவில்லை. இன்னமும் பல அமைச்சுக்கள் கொழும்பு நகரத்திற்குள்ளேயே அமைந்துள்ளன. எனவே கொழும்பு நகரம் நெருக்கடியான ஒரு நகரமாகவே இன்னும் காட்சியளிக்கின்றது.




மலேசியாவில் ஓர் புகையிரத நிலையம்

திட்டமிலின் முக்கியத்துவம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் திட்டமிடல் பிரிவு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. தூர நோக்குடன் சிறந்த துல்லியமான திட்டங்கள் தீட்டப்படல் வேண்டும். திட்டங்கள் மட்டும் இருந்தால் போதாது. அவை சரியான முறையில் உரிய காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டும். எனவே முன்னாள் பிரதமர் மகதீர் முகமட் தனது காலத்தில் தனது பிரதமர் அலுவலகத்தில் அதிகாரம் மிக்க திட்டமிடல் பிரிவையும் (planning unit) நிறைவேற்றல் மற்றும் ஒருங்கிணைக்கும் பிரிவையும் (implimantation and co – ordination unit) அமைத்திருந்தார். மலேசியாவின் துரித அபிவிருத்தியில் இவ்விரு பிரிவுகளின் பங்களிப்புக்களும் அளப்பரியவை. இன்றும் மக்களால் நினைவு கூரப்படுகின்றன. எமது நாட்டில் திட்டங்கள் நிறைவேற்றப்படுவதை தொடர்ச்சியாகக் கண்காணித்து நெறிப்படுத்தும் வழிமுறைகளை வலுப்படுத்த வேண்டும்.

அலுவலக முகாமைத்துவம்

இம்மூன்று நாடுகளிலும் அலுவலகங்களில் யப்பானிய 5 's' முகாமைத்துவ பண்புகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. அலுவலகங்கள் மிக துப்புரவாகவும், நேர்த்தியாகவும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு வேலை செய்பவரது மேசை கூட மிக நேர்த்தியாக ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

அந்த அலவலகங்களில் சேவை பெறவரும் பாவனையாளரின் நன்மை கருதி அவர்களுக்கு எளிமையாகத் தெளிவாக புரியும்படி பல வசதிகள் செய்யப்பட்டிருந்தன. குறுகிய நேரத்தில் சேவைகளைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சேவைபெற வருபவர்களை அன்போடு அழைத்து ஆதரவாகப் பேசி சேவைகள் வழங்கப்பட்டன.



*வைத்திய கலாநிதி*
ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.

எமது பிரதேசத்தில் யப்பானிய 5 "s" நடைமுறைகள் சில வங்கிகளிலும், தனியார் நிறுவனங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. சில அரச நிறுவனங்களும் அறிமுகப்படுத்தி வருகின்றன. நாமும் அனைத்து அரச நிறுவனங்களிலும் இதனை நடைமுறைப்படுத்த முயற்சி எடுக்க வேண்டும். இதன்மூலம் பாவனையாளர்களுக்குத் தரமான வினைத்திறன் மிக்க சிறந்த சேவையை நாம் வழங்கமுடியும்.

புற்றஜாயா வைத்தியசாலை

எமது குழு புற்றஜாயா அரச வைத்தியசாலையைப் பார்வையிட்டது. மிகச்சிறந்த முறையில் திட்டமிடப்பட்டு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. வைத்தியசாலை எங்கும் துப்புரவாகப் பேணப்பட்டதுடன் எல்லாம் நேர்த்தியாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. நோயாளர்களுக்கு இங்கு சிறந்த சேவை வழங்கப்படல் வேண்டும் என்ற நோக்கில் இங்கு பணியாற்றம் உத்தியோகத்தர்களுக்கு 10 'S' நடைமுறைகளை பயிற்றுவித்துள்ளனர். மலே மொழியில் S என்ற எழுத்தில் ஆரம்பிக்கும் 10 சொற்களே இந்த 10 'S' ஆகும்.

தமிழில் அவை பின்வருமாறு அர்த்தப்படும்.

1. **புன்னகை செய்யுங்கள்**
2. **வணக்கம் செலுத்துங்கள்**
3. நோயாளியை ஆதரவாக தாங்கிக் கொள்ளுங்கள்
4. நோயாளியின் வலியை உணர்ந்து கொள்ளுங்கள்.
5. பண்பாக அன்பாக பழகுங்கள்.
6. நோயாளிக்கு நம்பிக்கையூட்டங்கள்.
7. உங்களுக்குரிய சீருடையில் பணியாற்றுங்கள்
8. உங்கள் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளுங்கள்.
9. உங்களின் கீழ் பணியாற்றுவோரைச் சரியாக மேற்பார்வை செய்யுங்கள்.
10. உங்கள் சேவையின் தரத்தைத் தொடர்ந்து மேம்படுத்துங்கள்.

நோயாளர் பராமரிப்பில் இவை மிகவும் முக்கியமானவை. நோயாளியின் உளநலம் துரிதமாக குணமடையும். எமது வைத்தியசாலைகளிலும் இந்நடைமுறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். வைத்தியசாலை பணியாளர்களுக்கு இதில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பணியாளர்களிடம் போதிய அறிவு, ஆற்றல் இருக்கலாம். ஆனால் சரியான நல்ல மனப்பாங்கு வேணடும. அதில் நல்ல மாற்றத்தை நாம் ஏற்படுத்த வேண்டும்.

**பயணக் கட்டுரை 3**

**இரட்டைக் கோபுரங்கள் (Twin towers)**

மலேசியாவில் மகதீர் முகமட் பிரதமராகவிருந்த காலத்தில் உலக அளவில் மலேசியாவின் புகழையும் தனித்துவத்தையும் உயர்த்த விரும்பினார். அக்காலத்தில் உலகத்திலே உயரமான இரட்டைக் கோபுரங்களைக் கட்டுவித்தார். ஆனால் தற்போது இதனைவிட உயரமான கோபுரம் துபாயில் கட்டப்பட்டுள்ளது.



மலேசியாவில் உள்ள கற்குகை முருகன் கோயில்

பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணி களைக் கவரும் இக் கோபுரம் 1993 இல் ஆரம்பித்து 1999 இல் கட்டி முடிக்கப்பட்டது. இக்கோபுரத்தின் உயரம் - 452 மீற்றர். 88 மாடிகளைக் கொண்டது. 41 ஆவது மாடியில் இரு கோபுரங்களையும் இணைக்கும் பாலம் உள்ளது. ஒரு கோபுரத்தின் நிறை 300 ஆயிரம் தொன்கள். இக்கோபுரத்தின் பாலம் அமைந்துள்ள 41 ஆவது மாடிக்கு செல்ல நவீன லிப்ற் (Lift) வசதிகள் உள்ளன. 41 ஆவது மாடிக்குச் செல்ல எடுக்கும் நேரம் 40 செக்கன்கள்.

கோலாலம்பூர் நகரத்தின் மத்தியில் அமைந்திருக்கும் இக்கட்டடத்தை அமைக்க காணி வழங்கியவர் யாழ்ப்பாணத்தை பூர்வீகமாகக் கொண்ட மலேசியாவைச் சேர்ந்த ஆசியாவின் முன்னணி செல்வந்தர்களில் ஒருவரான திரு அனந்தகிருஸ்ணன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட பலர் மலேசியாவில் செல்வாக்குடன் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்தவர் கூட்டுறவுச் சங்கம் என்ற பலமிக்க ஒரு அமைப்பை நடத்தி வருகின்றனர். அதன் அலுவலகத்தையும் நாம் கோலாலம்பூரில் காணமுடிந்தது.

இந்த இரட்டைக் கோபுரத்தைப் போல இன்னுமோர் அதிசயமான தொலைத்தொடர்பு கோபுரம் உள்ளது. இக் கோபுரத்தின் 25 வது மாடியில் கண்ணாடிக்குமிழ் உருவத்தின் உள்ளே இரவு உணவு விடுதி உள்ளது. இந்த உணவு விடுதி மெதுவாக சுற்றிக் கொண்டிருக்கும். இங்கு இரவு உணவு அருந்தியபடி கோலாலம்பூர் நகரின் இரவு நேர அழகை ரசிக்கலாம். இதுவும் உல்லாசப்பயணிகளை கவரும் இன்னொரு சுற்றுலா மையமாகும்.

கற்குகை முருகன் கோவில்

மலேசியாவில் கோலாலம்பூரிலிருந்து 20 கி.மீ தொலைவில் புகழ்பெற்ற கற்குகை முருகன் கோவில் அமைந்துள்ளது. இங்கு மிக உயரமான மலையின் குகைக்குள் ஒரு அழகான முருகன் கோயில் கட்டப்பட்டுள்ளது. அதற்கு 300 இற்கு மேற்பட்ட படிகளில் ஏறிச்செல்ல வேண்டும். மலையின் முன்னால் மிகவும் உயர்ந்த பாரிய அழகான முருகன் சிலை காட்சி தருகின்றது.

*(வளரும்....)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மாணவர்களுக்கான மொனிற்றர், பிறிபக்ற் சின்னங்கள், பித்தளை, சில்வர், பிளாஸ்ரிக்கில் நீண்டகாலம் பாவிக்கக் கூடிய எச்சிங், எங்கிறேவிங் முறைகளில் செய்துகொள்ள...

S.S.யசோதரன் ஆட்ஸ்
381, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன்கோயில் அருகாமையில்)தொ.பே:0217903020

PREFECT
J/HINDU LADIE'S PRIMARY

**வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு**

சங்கானை கிழக்கு, காளி கோயிலடியில் அமைந்துள்ள சகல வசதிகளுடனும் கூடிய மாடி வீட்டுடன் 5பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0779184210**

# புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி சாவகச்சேரியில்

யாழ்ப்பாணம்,மே 18

யாழ். போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ச் சிகிச்சைப்பிரிவினால் ஒவ்வொரு கல்வி வலயங்கள்தோறும் நடத்தப்படுகின்ற புற்றுநோய் விழிப்புணர்வுக் கண்காட்சி மூன்றாம் கட்டமாக எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்முறை தென்மராட்சிக் கல்வி வலய மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் நன்மை கருதி நடத்தப்படுகின்ற இக்கண்காட்சியை அனைவரும் பார்வையிட்டு அதன் மூலம் பெறுகின்ற அறிவை, தெளிவை அயலவர்களுக்கும் எடுத்துக்கூறுமாறு யாழ். போதனா வைத்தியசாலைப் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ஒ-16)

## 3 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY!





இந்தியாவில் (திருச்சி)யில் வசிக்கும் கண்ணன்-கலானந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கபிலன் இன்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். கபிலன் குட்டியை சந்நிதி முருகன் அருள்பெற்று, சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ அன்புடன் வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா-கண்ணன்,
அம்மா- கலானந்தி,
அப்பப்பா-நவரெத்தினம்,
அப்பம்மா-ஞானலக்ஷ்மி,
சித்தப்பா-ஹரன்,
சித்தி-கெவீனா,
அத்தை-கிருபா,
தம்பி-ஹரி.

தகவல்:
தி.நவரெத்தினம் (மெம்பர்)
போக்காலை வீதி,உடுப்பிட்டி.

கபிலன்

18.05.2010

### அறவழிப் போராட்டக்குழு போதனாசிரியர் பதவி

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்துடன் இணைந்து அறவழிப் போராட்டக்குழு நடத்தவுள்ள மின் ஒட்டு பயிற்சிநெறிக்கான போதனாசிரியர் தேவையாகவுள்ளது. தராதரமும் முன் அனுபவமும் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை 20.05.2010 இற்கு முன் செயலாளர், அறவழிப் போராட்டக் குழு, 29, கைதடி, நுணாவில், சாவகச்சேரி எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்கவும்.

NVDAG செயலாளர், அறவழி.

**MBBS/MD**

**Lugansk State Medical University**
**UKRAINE - EAST EUROPE**
Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**
**With A/Ls 6 years**
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics

எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பப்பட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.

**www.lugmedi.com**

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (SIC)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# மணிவிழாக் காணும் எமது கல்லூரி முதல்வர்
# திரு.நா. வன்னியசிங்கம்
## அவர்களின் பிறந்தநாள் வாழ்த்து



### சேவை விபரம்

01.05.1976-14.09.1987
யா/ புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.

### கல்லூரி சேவை விபரம்

15.09.1987–31.12.1990 வரை ஆசிரியர்
01.01.1991–12.05.1992 வரை பகுதித் தலைவர் A/L
13.05.1992–30.06.1994 வரை உப அதிபர்
01.07.1994–26.03.1998 வரை பிரதி அதிபர்
27.03.1998 தொடக்கம் இன்றுவரை அதிபர்

### இவர் அலங்கரித்த வேறு பதவிகள்

- அதிபர் சங்கத் தலைவர்-யாழ்.கோட்டம்.
- யாழ்.றோட்டறிக் கழக உப தலைவர்.
- தேசிய கல்வி நிறுவன யாழ்.பிராந்திய விரிவுரையாளர்.
- சைவ பரிபாலன சபை ஆயுட்கால உறுப்பினர்.
- திருநெல்வேலி, ராஜவீதி பாலமுருகன் ஆலய நிர்வாக உறுப்பினர்.
- வலயக் கல்வித் திணைக்கள பரீட்சை சபை உறுப்பினர்.
- திருநெல்வேலி ப.நோ.கூ.ச. 15ஆம் கிளை முன்னாள் தலைவர்.
- கொக்குவில், வேம்படி முருகன் ஆலய நிர்வாக உறுப்பினர்.

### அதிபரின் விபரம்

பிறந்த திகதி: 1950.05.18
ஆரம்பக்கல்வி: யா/கொக்குவில் மேற்கு C.C.T.M. பாடசாலை
இடைநிலைக் கல்வி: கொக்குவில் இந்துக் கல்லூரி-தரம் 6 தொடக்கம் A/L வரை
உயர் கல்வி: ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழகம் B.Sc, (Mgt) Hons
தொழில் தகைமை: Dip.in.Ed. (Merit)

### வாழிய இவர் புகழ்

ஆங்கிலமும் தீந்தமிழும் வர்த்தகமு
மருங்கலையும்
மிக வறிந்தார் அறிவு சான்றோர்
பாங்கறிந்து பழகுகின்ற பண்பாளர்
பாரினிலே என்றும் எவர்க்கும்
உதவுகின்ற உள்ளத்தர் செகத்தவர்க்கும்
என்றென்றும் தீங்கு நினையாப் பண்பர்
சங்கிவரின் விழாச்சிறக்க இதயத்தால்
வாழ்த்துவோமே என்றென்றும்.


வரலாற்றுப் பெருமை மிகு
வைத்தீஸ்வராக் கல்லூரி
வளர்ச்சியென்னும் பாதை தன்னில்
இடர்கள் பல களைந்து இன்று வீறு நடை
புரிகின்ற பெருமை கண்டே
இரவோடு பகலாக இவர் உழைத்த
உழைப்பதனை மனதில் கொண்டோம்
பெருமானின் ஆசியுடன் இவர் வாழ்வு
பெருமையுற வாழ்த்துகிறோம்.

நல்லாசிரியராய்க் கல்வி புகட்டி
நலந்திகழும் பகுதித் தலைவருமாகி
பேணுமுயர் கல்வியிலே விருப்புற்று மாணவர்
தம் உளத்தினையும் ஒருங்கே பெற்று
உபஅதிபராகிப் பின் அதிபராகி
நீணிலத்தே ஆசிரிய உலகத்தின்
மதிப்பதனை நிலைக்கச் செய்தார்.
பேணுகுண வீரசிங்கமென்றும்
பெருமையுற வாழி வாழி.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்,
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அரசியல்வாதியின் மனிதநேயம்!



ஆப்ரஹாம் லிங்கன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சி இது.

வில்லியம் ஸ்காட் என்பவர் கடமை தவறாத இராணுவீரர்.

ஒருநாள் அவரது நண்பர் ஒருவருக்கு சரியில்லாமல் இருந்தது. அதனால் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்த காவல் காக்கும் பணியை ஸ்காட் தாமே ஏற்றுக்கொண்டு பணிபுரிந்து கொண்டிருந்தார்.

மறுநாள் காலையில்தான் அவருக்கு ஒரு விடயம் தெரிய வந்தது.அதாவது, அன்றைக்கும் அவர்தான் காவல் காக்க வேண்டும் என்று.

தொடர்ந்து கண்விழித்தால் தூக்கம்வரும். அதனால் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியாது என்ற எண்ணம் அவர் மனதில் தோன்றியது.

உடனே அவர் தம் தலைமை அதிகாரியிடம் சென்று விடயத்தைக் கூறினார்.

ஆனால் இவர் கூறிய காரணத்தை அதிகாரி ஏற்றுக்கொள்ளவில்லை.

அதனால் வேறு வழியில்லாமல் ஸ்காட் இரண்டு வேளையும் பணி செய்ய ஒப்புக்கொண்டார்.

ஸ்காட் பணிபுரிந்துகொண்டிருந்தபோது அவரையும் அறியாமல் சற்றுத் தூங்கி விட்டார்.

அந்தச் சமயம் பார்த்து மேற்பார்வையிட வந்த அதிகாரி, அதைப் பார்த்துவிட்டு அவருடைய மேலதிகாரியிடம் விடயத்தைக் கூறிவிட்டார்.

போர்க்களத்தில் பணிபுரியும் தூங்கும் வீரர்களுக்கு மரணதண்டனை கொடுப்பது அவர்களுடைய வழக்கம்.

அதன்படி ஸ்காட் தூங்கியதால் அவரை இருபத்திநான்கு மணி நேரத்திற்குள் சுட்டுக் கொல்லும்படி உத்தரவிடப்பட்டது.

அவருடைய நண்பர்கள் இந்த விடயத்தைக் கேள்விப்பட்டதும் மிகவும் பதறிப்போனார்கள். அவர்கள் உயர்அதிகாரியிடம் சென்று எவ்வளவோ வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் பலனில்லை.

கடைசியாக, மரணதண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரம் அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கனுக்கு உண்டு என்று கேள்விப்பட்டதும், ஸ்காட்டின் நண்பர்கள் அவரைச் சென்று பார்த்தார்கள்.

ஸ்காட்டின் நண்பர்கள் ஆப்ரஹாம் லிங்கனிடம் சென்று நடந்த விவரத்தைக் கூறினார்கள்.

ஆப்ரஹாம் லிங்கன் யோசித்தார்.

உடனே அவர் ஓர் உத்தரவைத் தயார்செய்து, அதனை ஸ்காட்டின் தலைமை அதிகாரிக்கு அனுப்பிவைத்தார்.

பிறகு அவர் வாஷிங்டனிலிருந்து புறப்பட்டு ஸ்காட்டைச் சென்று பார்த்தார்.

அங்கு அவர் ஸ்காட் பிறந்த இடம்,தாய்,தந்தை பற்றியெல்லாம் விசாரித்தார்.

பின்னர் அவர் ஸ்காட்டை நோக்கி,'' உன் பெற்றோர்களைத் துக்கத்தில் ஆழ்த்திவிடாதே!'' என்று கூறினார்.

அதற்கு ஸ்காட், '' ஐயா, நாளைக்கு நான் இறக்கப் போவதுதான் தங்களுக்குத் தெரியுமே!'' என்று கூறினார்.

ஆப்ரஹாம் லிங்கன் ஸ்காட்டின் தோளைப் பற்றியவாறு,''ஸ்காட், நீ நாளை இறக்கப்போவதில்லை. அதற்கு மாறாக நீ உன் வேலைக்குச் செல்லப் போகிறாய். ஆனால் நீ எனக்கு மிகவும் சிரமம் கொடுத்துவிட்டாய். வாஷிங்டனிலிருந்து நான் இங்கு வந்து போவதற்கு உண்டான பணத்தை எப்படிக் கொடுக்கப் போகிறாய்?'' என்று வினவினார்.

உடனே ஸ்காட் மகிழ்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு,'' ஐயா,கவலைப்படாதீர்கள். என் சேமிப்புக் கணக்கில் கொஞ்சம் பணம் இருக்கிறது; என் நிலத்தின் மேல் கடன் கொஞ்சம் வாங்குவேன்; நீங்கள் எங்களுடைய சம்பளத் திகதிவரை இருந்தால் என் நண்பர்களும் கொஞ்சம் பணம் தருவார்கள். அவைகளைக் கொண்டு உங்களுக்கான செலவை நான் திருப்பிக் கொடுத்துவிடுவேன்'' என்று மிகவும் உறுதியாகவும் நேர்மையாகவும் கூறினார்.

இதனால் உண்மை அறிந்த லிங்கன் மகிழ்ச்சியாக, '' ஸ்காட், உன் வங்கி சேமிப்பும், நிலத்தின் மேல் வாங்கும் கடனும், நண்பர்கள் கொடுக்கும் பணமும் என் செலவைச் சரி செய்ய முடியாது. அதற்கு பதிலாக ஸ்காட் என்ற ராணுவ வீரன் தன்னுடைய கடமைகளைச் சரியாகத் தொடர்ந்து செய்தால் மட்டுமே அதைச் சரி செய்ய முடியும் '' என்று அவர் கையைப் பிடித்துக் கூறினார்.

''அப்படியே செய்வேன் ஐயா'' என்று ஸ்காட் ஆப்ரஹாம் லிங்கனுக்கு உறுதிமொழி அளித்தார்.

மறுநாள் செய்தித்தாளில் வந்த செய்தி என்ன தெரியுமா?

'' ஒரு சாதாரண இராணுவ வீரனுக்கு ஜனாதிபதியே நேரில் சென்று மன்னிப்புக் கொடுத்தார்''என்பதுதான் அந்தச் செய்தி.

மனித சேவைக்காகத்தான் சட்டம் உருவாக்கப்பட்டதே தவிர,மனித நேயத்தை மறந்து மிகவும் கண்டிப்பாக நடந்து கொள்ளக்கூடாது என்பதை விளக்கவே இந்தக் கதை.

*(நன்றி - நீதிக்கதைகள்)*

# ஆன்மீகத்தில் அதிசயம் அவசியமா?

ஞானி ஒருவர் சீடர்களைப் பார்த்துக் கேட்டார்,

''மழை பொழியும்போது இருவர் அதில் நடந்து சென்றார்கள். அதில் ஒருவர் நனையவில்லை. இது ஏன் என்று உங்களில் யாரேனும் சொல்ல முடியுமா?'' என்று,

உடனே முதல் சீடர்,

'' ஏனென்றால் அதில் ஒருவர் மழையில் நனையாத உடை அணிந்திருந்தார்'' என்றார்.

அடுத்தவரோ ''மழைத்தூறல் ஆங்காங்கே மட்டும் இருந்தது. அதனால் ஒருவர் மழையில் நனையவில்லை'' என்று தன் முடிவை அறிவித்தார்.

மூன்றாம் சீடரோ,'' ஒருவர் சாலையிலும் மற்றொருவர் சாலையோர நிழற் பாதையிலும் நடந்தனர்'' என்று தம் கண்டுபிடிப்பை வெளியிட்டார். குரு சிரித்தபடி,

'' நீங்கள் அனைவரும் ஒரு மனிதர் நனையவில்லை என்ற சொற்றொடரில் தான் கவனம் செலுத்துகிறீர்கள். எனவே நீங்கள் நிதர்சன உண்மையை ஒரு போதும் கண்டறியப் போவதில்லை.

பாருங்கள், ஒருவர் மட்டும் நனையவில்லை என்று சொல்லும்போது, இருவருமே நனைந்து விட்டார்கள் என்ற இயல்பான பொருள் இல்லையா, என்ன? இருவருமே நனைந்தார்கள் என்கிற இயல்பான உண்மையை நீங்கள் ஏன் சிந்திக்கவே இல்லை.



விரல் நிலவை நோக்கிக் காட்டும்போது, நிலா விரலின் மீது இல்லை. உண்மையைக் குறித்த வார்த்தைகள் வெளிவரும் போது, வார்த்தைகளே உண்மைகளாகி விடாது. நாம் வார்த்தைகளில் மட்டும் கவனம் கொண்டால், நாம் அவற்றிலே சிக்கி உண்மையை ஒருபோதும் உணரமாட்டோம்'' என்றார்.

கடவுளைச் சுட்டிக் காட்டிய சிலைகளை நம்மவர்கள் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள். ஆனால் கடவுளைத் தொலைத்து விட்டார்கள். கடவுளைச் சுட்டிக்காட்டிய மதங்களை வெறியோடு பற்றிக் கொண்டார்கள். அந்தோ கடவுளைக் கோட்டைவிட்டுவிட்டார்கள்.

# உழைத்து வாழ வேண்டும்

ஒருமுறை ஓர் அரசன் மாறுவேடம் புனைந்து பல ஊர்களுக்குச் சென்றான். அப்போது ஒரு கிராமத்தில் ஒரே ஒரு பெண் மட்டும் மரநிழலில் அமர்ந்து, கூடை மிடைந்து கொண்டிருந்தாள். அரசன் அவளை நெருங்கி,



''அம்மா! நீ மட்டும் இங்கே தனியே கூடை மிடைந்து கொண்டிருக்கிறாயே! வேறு ஒருவரையும் இந்தக் கிராமத்தில் சாணோமே! அவர்கள் எல்லோரும் எங்கே போயிருக்கிறார்கள்?'' என்று கேட்டான்.

''அரசரைத் தரிசிக்கப் போயிருக்கிறார்கள்'' என்றாள் அந்தப் பெண்.

''அரச்ரைத் தரிசிக்க நீ ஏன் போகவில்லை'' என்று வினவினான் மன்னன்.

''செய்ய வேண்டிய காரியத்தைச் செய்து முடிக்காமல் முட்டாள்தாம் அரசரைத் தரிசிக்கப் போவார்கள்'' என்று மறுமொழி சொன்னாள் அந்தப் பெண்.


''அரசரைத் தரிசிப்பதால் பயன் ஒன்றும் கிட்டாது என்பது உன் கருத்தா?'' என்று கேட்டான் அரசன்.

''பயன் கிட்டுமோ கிட்டாதோ? அதை நான் அறியேன். எனக்கு ஐந்து குழந்தைகள் இருக்கின்றனர். அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை உதறித் தள்ளிவிட்டு, ஒரு நாள் வேலையைப் பாழ்படுத்திக் கொண்டு அரசரைக் காணச் செல்வது மதியீனம் ஆகாதா?'' என்று கேட்டாள் அந்தப் பெண்.

பெண் இப்படிச் சொன்னதும் அரசன் மகிழ்ச்சி அடைந்தான். அந்தப் பெண்ணின் கையில் ஒரு தங்க நாணயத்தைக் கொடுத்து, '' பெண்ணே! இந்தத் தங்க நாணயத்தை நான் தந்த பரிசாக வைத்துக் கொள். அரசனைத் தரிசிக்கச் சென்றவர்கள் திரும்பியதும் அரசன் வந்து உன்னை - ஓர் உண்மையான உழைப்பாளியைத் தரிசித்துவிட்டுச் சென்றான் என்று அவர்களிடம் சொல்'' என்று கூறி விடைபெற்றுக் கொண்டு திரும்பினான்.

* * * * * *

# மன்னிப்பு வழங்கிய மகான்



மகாத்மா காந்தி ஒருமுறை மாலை பிரார்த்தனைக் கூட்டத்தை முடித்துவிட்டு தன் அறையில் அமர்திருந்தார். அந்த நேரத்தில் குளிர் அதிகமாக இருந்ததால் ஒரு சால்வையை எடுத்து அவர் மனைவி கஸ்தூரிபாய் காந்திஜின் தோள்மீது போர்த்தினார்.

அப்போது காந்தியைக் காண ராவ்ஜிபட்டேல் என்பவர் அங்கு வந்தார். வந்தவருக்கு ஒரே அதிர்ச்சி. காரணம் காந்திஜின் முதுகுக்குப் பின்னே ஒரு பெரிய கருநாகம் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது.

ராவ்ஜிபடேல் மிரட்சியுடன்.

பாபுஜி,'' உங்கள் முதுகுக்குப் பின்னால் ஒரு பாம்பு இருக்கிறது. அசையாமல் இருங்கள். நான் அதை மெதுவாக எடுத்துவிடுகிறேன்'' என்றார்.

உடனே அந்தப் பாம்பை மெதுவாக எடுத்து வெளியே வீசினார்.

மறுநாள் இந்த விஷயத்தை ஒவ்வொரு பத்திரிகையும் ஒவ்வொரு விதமாகச் செய்தியை வெளியிட்டிருந்தது.

காந்தியின் கழுத்தைச் சுற்றிய கருநாகம் அவர் தலை மேலே குடை போல் தலை விரித்து ஆடியது என்றெல்லாம் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

ஒரு நிருபர்,மகாத்மா காந்தியிடம்,

'' பாபுஜி, அந்தக் கருநாகம் உங்களைக் கடித்திருந்தால், நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்!'' என்று கேட்டார்.

அதற்கு மகாத்மா,

'' அந்தப் பாம்பைக் கண்டதும் என் உடம்பு நடுங்கியது.ஆனால் மறுநொடியே என் அச்சம் போய் விட்டது.

ஒருவேளை அந்தப் பாம்பு என்னைத் தீண்டியிருந்தால் கூட அதை அடித்துக் கொல்ல வேண்டாம் என்று மற்றவர்களிடம் கூற நினைத்தேன்'' என்றார்.

தன்னைக் கடிக்கக்கூடிய பாம்பைக் கூட அடிக்கக்கூடாது என்ற மகானல்லவா மகாத்மா காந்தி!

*(சொன்னவர் - காந்திதாசன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# SPECIAL GUIDE FOR 2010 A/L ARTS STUDENTS

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஓகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

## தமிழ்மொழி - 01 | பகுதி - I

01. பின்வரும் செய்யுட் பகுதிகளுள் எவையேனும் மூன்றினைத் தெரிவுசெய்து,
அ. அவற்றின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
ஆ. தடித்த எழுத்தில் தரப்பட்டுள்ள பகுதிகளின் சிறப்பை விளக்குக.

1) அறிவெனப் படுவது பேதையார் சொல்நோன்றல்
செறிவெனப் படுவது கூறியது மாறாஅமை
நிறையெனப் படுவது மறைபிற ரறியாமை
முறையெனப் படுவது கண்ணோடா துயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
ஆங்கதை யறிந்தனி ராயினென் தோழி
நன்னுதல் நலனுண்டு துறத்தல் கொண்க
**தீம்பா லுண்பவர் கொள்கலம் வரைதல்**
நின்றலை வருந்தியாள் துயரஞ்
சென்றனை களைமோ பூண்கநின் தேரே.

2) சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.
ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று
மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து
**மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா**
ருயிர்நீப்பர் மானம் வரின்.

3) ஆறி நின்றற மாற்றலர் வாழ்வெனப்
பாறி வீந்தது செல்வம் பரிந்திலர்
தேறி முந்தைத்தஞ் சிந்தைய ராயினார்
**மாறி வந்து பிறந்தன்ன மாட்சியார்.**

காலையென் றெழுந்தது கண்டு வானவர்
வேலையென் றனிகமென் றேங்கி விம்முறல்
சோலையுங் கிரிகளுஞ் சுண்ண மாயெழப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே

4) ஆகமக் கலைகட் கனந்தவா பரண
வழகெனுந் திருப்பெய ரரசை
யேகசிற் பரமெய்ப் பொருளொளித் தெளிவை
**யெமக் கெமைக் காட்டுதர்ப் பணத்தைச்**
சேகரப் பலகற் பனைகடந் துயர்ந்த
செம்மலை நரருயிர்க் குயிராந்
தேகதத் துவநிர் மலமகு மூதைத்
தியானஞ்செய் மனங்களே மனங்கள்.

02. ''அ'' பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அல்லது

''ஆ'' பகுதியிலுள்ள உரைப்பகுதியை வாசித்து அதன் கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அ. 1) எல்லை யில்லாததோர் வானக் கடலிடை வெண்ணிலாவே - விழிக்
கின்ப மளிப்பதோர் தீவென் றிலகுவை வெண்ணிலாவே
சொல்லையும் கள்ளையு நெஞ்சையுஞ் சேர்த்திங்கு வெண்ணிலாவே - நின்றன்
சோதி மயக்கும் வகையது தானென்சொல் வெண்ணிலாவே
நல்ல வொளியின் வகைபல கண்டிலன் வெண்ணிலாவே
நனவை மறந்திடச் செய்வது கண்டிலன் வெண்ணிலாவே
கொல்லு மமிழ்தை நிகர்த்திடுங் கள்ளொன்று வெண்ணிலாவே - வந்து
கூடியிருக்குது நின்னொளி யோடிங்கு வெண்ணிலாவே.

2) நின்னொளி யாகிய பாற்கடல் மீதிங்கு வெண்ணிலாவே - நன்கு
நீயு மமுது மெழுந்திடல் கண்டனன் வெண்ணிலாவே
மன்னு பொருள்க ளனைத்திலு நிற்பவன் வெண்ணிலாவே - அந்த
மாய னப்பாற்டல் மீதுறல் கண்டனன் வெண்ணிலாவே
துன்னிய நீல நிறத்தள் பராசக்தி வெண்ணிலாவே - இங்குத்
தோன்று முலகவ ளேயென்று கூறுவர் வெண்ணிலாவே
பின்னிய மேகச் சடைமிசைக் கங்கையும் வெண்ணிலாவே - நல்ல
பெட்புற நீயும் விளங்குதல் கண்டனன் வெண்ணிலாவே.

3) காதலர் நெஞ்சை வெதுப்புவை நீயென்பர் வெண்ணிலாவே - நினைக்
காதல்செய் வார்நெஞ்சிற் கின்னமுதாகுவை வெண்ணிலாவே
சீத மணிநெடு வானக் குளத்திடை வெண்ணிலாவே - நீ
தேசுமிகுந்தவெண் டாமரை போன்றனை வெண்ணிலாவே
மோத வருங்கரு மேகத் திரளினை வெண்ணிலாவே - நீ
முத்தினொளிதந் தழகுறச் செய்குவை வெண்ணிலாவே
தீது புரிந்திட வந்திடுந் தீயோர்க்கும் வெண்ணிலாவே - நலஞ்
செய்தொளி நல்குவர் மேலவ ராமன்றோ வெண்ணிலாவே.

4) மெல்லிய மேகத் திரைக்குள் மறைந்திடும் வெண்ணிலாவே - உன்றன்
மேனி யழகு மிகைபடக் காணுது வெண்ணிலாவே
நல்லிய லார்யவ னத்தியர் மேனியை வெண்ணிலாவே - மூடு
நற்றிரை மேனி நயமிகக் காட்டிடும் வெண்ணிலாவே
சொல்லிய வார்த்தையில் நாணுற்றனைபோலும் வெண்ணிலாவே - நின்
சோதி வதன முழுது மறைத்தனை வெண்ணிலாவே
புல்லியன் செய்த பிழைபொறுத் தேயருள் வெண்ணிலாவே - இருள்
போகிடச் செய்து நினதெழில் காட்டுதி வெண்ணிலாவே.

1. வெண்ணிலாவின் அழகை உணர்த்தப் பாரதி பயன்படுத்தும் உவமைகளையும், உருவகங்களையும் எடுத்துக்காட்டி விளக்குக.
2. இந்துசமய ஐதீகங்களுடன் பாரதி நிலவை எவ்வாறு தொடர்புபடுத்துகிறார் என்பதைத் தெளிவுபடுத்துக.
3. வெண்ணிலாவே மேலவருக்கு ஒப்பிடுவதில் உள்ள நயத்தை விளக்குக.
4. மேகத்துக்குள் சந்திரன் மறையும் காட்சியை வர்ணிக்குமிடத்துப் பாரதியின் கற்பனை ஆற்றல் துலங்குமாற்றை விளக்குக.

அல்லது

ஆ. அடடா! உனது விவகாரத்தின் நுட்பத்தை என்னென்று சொல்வேன்! நீ ஓயாமல் அடுக்கிக் கொண்டுபோன நவீன ஆராய்ச்சிக்கதைகள் எல்லாம் தமிழ்நாட்டு ஜனங்களுக்குள்ளே வழக்கமான பிறகல்லவோ அவை தமிழ் பாஷையிலே வழங்குவதற்குச் சுலபமாகும்? தமிழ் நாட்டிலேயோ பொதுஜனங்களுக்கு எழுத, படிக்கத் தெரிவதுகூட அருமையாய் இருக்கிறது. வயிற்றுப் பிழைப்பே பெரிய கஷ்டமாய் இருக்கின்றது. ராஜாங்கத்தார் பொதுஜனக்கல்விக்கு மிகவும் வெட்கக்கேடான சிறு தொகையை செலவிடுகின்றார்கள். சிறுபான்மையோருக்குத் தரப்படும் கல்விகூட அவர்களைக் குமாஸ்தாக்களாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கொடுக்கப்படுவதேயன்றி வேறு எவ்விதமான பெருந்தொழிலுக்கும் தகுதியாக்க அன்று. எனவே, இந்நாட்டார் பொதுவாக மிகவும் அறிவு சுருங்கிப்போயிருக்கிறார்கள். இதற்குப் பாஷை என்ன செய்யும்? நீராவியினால் ஓட்டப்படும் ரெயில் வண்டி இந்நாட்டிலே வழக்கமாய் இருக்கிறது. இப்போது பொதுஜனங்கள் அதற்கு வார்த்தை ஏற்படுத்திக்கொள்ளாமலா இருக்கிறார்கள்? மின்சார சக்தியால் தந்தி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குத் தமிழர்கள் வார்த்தை உண்டாக்கிக் கொள்ளவில்லையா? கோவணமில்லாத நிர்வாண தேசத்தாரின் பாஷையிலே பட்டு அங்க வஸ்திரத்துக்குப் பெயர் கிடையாது என்றால், அதற்கு அவர்களுடைய பாஷையின் மேல் என்ன குற்றம் இருக்கிறது? துணியைக்கொண்டு கொடுத்து வழக்கப்படுத்தினால், முறையே வார்த்தைகளும் உண்டாக்கிக்கொள்வார்கள். தமிழ்நாட்டிலே தொழில் வகைப்பாடும் ஆலோசனை மிகுதியும் ஏற்பட்டால் தமிழ் பாஷை அன்றைக்கே வளர்ந்து விடும். இப்படிக்கின்றி இந்தப் பாஷையையே ஒழித்துவிடவேண்டும் என்று சொல்லுவது மிக மூடத்தனம் அல்லவா? கண்ணிலே வியாதி கொண்டிருக்கும் ஒருவன் அதன் மூலகாரணங்களைத் தெரிந்துகொண்டு ஔஷதப்பிரயோகம் செய்யாமல், இந்தக் கண்களை ஒழித்துவிட்டு நல்ல பிரகாசமுள்ள இரண்டு பிரான்ஸ் தேசத்துக்கண்கள் வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசிப்பது நல்ல அறிவாகுமா?

1) தமிழ் நாட்டார் மிகவும் அறிவு சுருங்கிப்போயிருப்பதற்குப் பாரதியார் கூறும் காரணங்களைத் தருக.
2) தமிழ்மொழி வளர்ச்சிக்கு அவசியம் என்று பாரதியார் கருதுபவை யாவை?
3) சமூக வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் இடையில் உள்ள தொடர்பைப் பாரதியார் வெளிப்படுத்தும் பாங்கை விளக்குக.
4) பின்வரும் தொடர்கள் எவ்வெப்பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெளிவுபடுத்துக. அருமையாய் இருக்கிறது, ஆலோசனை மிகுதி, அங்கவஸ்திரம், ஔஷதப் பிரயோகம்.

## பகுதி - II

03. பண்புடைமை என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறுவனவற்றை ஆதாரமாகக்கொண்டு பின்வருவனவற்றை தெளிவுறுத்துக.
அ. பண்புடையார் இயல்புகள்.
ஆ. பண்புடையார் உயர்வு.
இ. பண்பிலார் இழிவு.
ஈ. உவமை அணியினைக் கையாண்டு வேண்டிய உணர்வினை ஏற்படுத்தும் வள்ளுவரது ஆற்றல்.

04. திருவடிசூட்டு படலத்திற் சித்திரகூடமலையை அடைந்த பரதன் இராமனது திருவடிகளில் வீழ்ந்து வணங்குவது வரையிலான பகுதியில்,
அ. இராமனுடைய மாட்சிமையும் மதிநுட்பமும்.
ஆ. பரதனுடைய உயர்குணமும் இராமனிடத்து அவன் கொண்ட பற்றும்.
இ. இலக்குவனுடைய ஆளுமையும் ஆற்றலும் புலப்படுமாற்றைத் துலக்குக.

05. இரட்சணிய சரிதப் படலத்தைப் படிப்போர் உள்ளங்களில்,
அ. இயேசுபிரானிடத்துப் பெருவிருப்பும்.
ஆ. அவருக்குத்துன்பம் விளைத்த விரோதிகளிடத்துப் பெருவெறுப்பும்.
இ. எருசலேம் நகர மக்களிடத்துப் பேரபிமானமும் ஏற்படுவதற்கான காரணங்களை விளக்குக.

06. பகீரதப் பிரயத்தனம் என்ற தலைப்பிலான கட்டுரையை ஆதாரமாகக்கொண்டு,
அ. சகரன் அசுவமேத யாகத்தை நிறைவேற்றிய வரலாறு.
ஆ. ''பகீரதப் பிரயத்தனம்'' என்ற தொடரை வழங்க வைக்கும் வகையில் பகீரதன் மேற்கொண்ட முயற்சியினை முடித்த வரலாறு.
இ. கங்கை நதியின் பெருமைகள்.
ஈ. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மொழிநடை குறித்த உமது அபிப்பிராயம் ஆகியவற்றைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.

07. அ. சிறுகதை இலக்கியத்துக்குக் கூறப்படும் பொதுப்பண்புகள் புதுமைப்பித்தனின் ஒருநாள் கழிந்தது சிறுகதையில் அமைந்துள்ளவற்றை ஆராய்க.
ஆ. முருகதாசர் என்ற கதாபாத்திரம் உருவாக்கப்பட்டிருக்கும் சிறப்பினை மதிப்பிடுக.
இ. புதுமைப்பித்தனின் மொழிநடை குறித்துக் கருத்துரை வழங்குக.

08. அ. நாகம்மாள் அளவில் சிறியதாக இருப்பினும் தமிழிலே தோன்றிய முக்கியமான நாவல்களுள் ஒன்றாகக் கருதப்படுவதற்கான காரணங்களைப் பரிசீலிக்குக.
ஆ. இந்நாவலின் முக்கிய பாத்திரங்களான நாகம்மாள், கெட்டியப்பன் ஆகியோருக்கிடையே நிலவும் உறவு பற்றியும் அவர்களுடைய குணவியல்புகள் குறித்தும் அபிப்பிராயம் கூறுக.
இ. இந்நாவலை ஒரு பிரதேச நாவல் என்று கருதலாமா? விளக்குக.

09. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினை** விளக்குக.
அ. ''அருந்துய ருழத்தலின்'' எனத்தொடங்கும் நற்றிணைச் செய்யுளில் அதிகமான் நெடுமான் அஞ்சி சிறப்பிக்கப்படுமாறு.
ஆ. மாணிக்கவாசகரின் **திருப்பள்ளியெழுச்சியிலே** காலைக்காட்சிகளும் அந்நேரச் செயற்பாடுகளும் சித்திரிக்கப்படுமாறு.
இ. **விநாயகர் நான்மணி மாலையில்** மகாகவி பாரதியாரின் மனித சமூக நல வேட்கை வெளிப்படும் விதம்.
ஈ. **தேவி வணக்கம்** என்ற கவிதையிலே தேவியின் அருட்சிறப்பினைச் சுவாமி விபுலாநந்தர் உணர்த்தும் விதம்.
உ. தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு ஐரோப்பியர் தொடர்பு எவ்வாறு உதவியது என்பது குறித்துப் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை **தமிழும் பிறமொழியும்** என்ற கட்டுரையிற் கூறியுள்ளவை.

(நிறைவுற்றது)

தொகுப்பு: உதயன் கல்விச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, ஒகஸ்ட் 2010.
General Certificate of Education (Advance Level) Examination - August 2010.

# அளவையியல் - 01

* முதலாம், இரண்டாம், மூன்றாம் பகுதிகளில் இருந்து குறைந்தது ஒரு வினாவையேனும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி - I

01. அ. அடைப்புக்குறிக்குள் இருக்கும் எது பின்வரும் விவரிப்புக்கு பொருத்தமானது என இனம் காண்க.
   1) (அரசியல், இளயவியல், தூயகணிதம், மருத்துவம்) சமூக விஞ்ஞானமாகும்.
   2) (புவிச்சரிதவியல், பொறியியல், பொருளாதாரம், புதைபொருளியல்) தொழில்நுட்பவியல் ஆகும்.
   3) (வரலாறு, பொருளாதாரம், தூயகணிதம், மருத்துவம்) அனுபவம் சாரா விஞ்ஞானமாகும்.
   4) (உயிரியல், வானியல், ஒழுக்கவியல், வரலாறு, சமூகவியல்) மேல் வரம்பிடப்பட்ட விஞ்ஞானம் ஆகும்.

   ஆ. 1) விஞ்ஞானத்தையும் விஞ்ஞானம் அல்லாதவற்றையும் வேறுபிரிக்கும் பொப்பரின் வரையறையை உதாரணத்தின் மூலம் விளக்குக.
   2) புவிமையக் கோட்பாடு விஞ்ஞானமாகுமா காரணம் தருக.
   3) ''தூய கணிதத்திற்கு பொப்பரது வரையறை பொருந்துமா'' விளக்குக.

02. அ. 1) அவதானம் பரிசோதனை என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.
   2) ''ஒரு பரிசோதனைக்கு முன்பாக இயற்கை அவதானம் செயற்படுத்தப்படுகின்றது'' உதாரணம் தந்து விளக்குக.

   ஆ. 1) ''முழு நிறைவான பரிசோதனையில் குறித்த நேரத்தில் ஒவ்வொரு காரணியாக மாற்றி ஆய்வு செய்வதன் அவசியம்'' என்பதை விளக்குக.
   2) ''அவதானம் பரிசோதனையின் தரவுகள் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் சரிநுட்பமானவை அல்ல'' என்பதை விளக்குக.

03. அ. 1) அளவறிதலே விஞ்ஞானத்தின் நோக்கமாகும் என்பதை விளக்குக.
   2) ''மொழியாற்றல் தொடர்பான பரீட்சையில் பூச்சியம் புள்ளி வழங்குவது அர்த்தமற்றது ஆகும்'' இக்கூற்றின் பொருள் யாது?

   ஆ. 1) அளவீட்டில் உள்ள பின்வரும் அளவீட்டு முறைகளை உதாரணம் தந்து விளக்குக.
   1. இடையிட்ட அளவுத்திட்டம். 2. வீதசம அளவிடை.
   2) அளவீட்டு முடிவுகளும் அண்ணளவானவை கருத்துக்கூறுக.

04. அ. விஞ்ஞான ஆய்வுகளில் ஒப்புமையின் பங்கை உதாரணம் தந்து விளக்குக.
   ஆ. மில்லின் எச்சமுறையை விஞ்ஞான ஆய்வுகளின் ஆரம்பத்தில் பயன்படுத்த முடியாது. எச்சமுறை என்றால் என்ன என்பதை விளக்கி மேற்கூறிய கூற்றினைப் பரிசீலிக்குக.
   இ. ''விஞ்ஞானம் பிரச்சினையோடு ஆரம்பித்து விதி கோட்பாடு உருவாக்கத்தோடு முற்றுப் பெறுகிறது'' விளக்குக.
   ஈ. விஞ்ஞான விதி, கோட்பாடுகளுக்கிடையிலான தொடர்பு வேறுபாட்டை சுருக்கமாக விளக்குக.

05. அ. அகவயமான நிகழ்தகவு, புறவயமான நிகழ்தகவு என்பவற்றை உதாரணம் தந்து விளக்குக.
   ஆ. 1) ஒரு நாணயம் மூன்று தடைவை மேலே வீசப்பட்டது. நிகழ்வுகள் சாராமையானதா?
   2) A, B என இரு வேறுபட்ட நிகழ்ச்சிகளாகும் அவற்றின் நிகழ்தகவு P(AVB) P(A) P(B) எனத் தரப்பட்டுள்ளது. இவ்விரு நிகழ்ச்சிகள் பற்றி யாது கூறுவீர்?
   இ. ஓர் சீட்டுக்கட்டில் இருந்து மூன்று சீட்டு உருவப்பட்டது பின்வரும் நிகழ்தகவை மதிப்பிடுக.
   1) ஆடித்தனாக வருதல்.
   2) வித்தியாசமான சீட்டுக்களாக வருதல்.
   3) ஒரே இன சீட்டுக்களாக வருதல்.
   4) ஒன்று மாத்திரம் ராணியாக வருதல்.

## பகுதி - II

06. அ. ''சமூக விஞ்ஞான ஆய்வுகளில் புள்ளிவிவரவியல் பயனுள்ள கருவியாகும்'' விளக்குக.
   ஆ. பின்வருவனவற்றை உதாரணம் தந்து விளக்குக.
   1) எண்கணித இடை.
   2) காலணை விலகல்.
   இ. 1) 10, 20, 30, 40, 50 என்ற தரவுக்கூட்டத்தில்,
   1. இடைவிலகல்
   2. நியமவிலகல் என்பவற்றை மதிப்பிடுக.
   2) புள்ளிவிவரவியல் இணைப்பு என்றால் என்ன?

07. அ. இயற்கைவிஞ்ஞான முடிவுகளோடு ஒப்பிடுமிடத்து சமூகவிஞ்ஞான முடிவுகள் பலவீனமானவையாகவே உள்ளன. காரணம் தருக.
   ஆ. சுய தோல்வியைத்தரும் எதிர்வுகூறல் என்பதை விளக்குக. சமூக விஞ்ஞான எதிர்வுகூறல்கள் இவ்வாறு அமைவதற்கு காரணம் யாது?
   இ. வரலாறு, பொருளியல் என்பவற்றின் விஞ்ஞாணப்பண்பினை விளக்குக.
   ஈ. கள ஆய்வின் சாதக பாதகங்களைக் குறிப்பிடுக.

08. அ. உமது பாடசாலை மாணவர்கள் கல்வி தொடர்பாகவும் கற்றல் தொடர்பாகவும் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆய்வு செய்யப்போகும் ஆய்வாளனாக உம்மைக் கருதுக.
   1) மேற்கூறிய ஆய்வில் தரவு சேகரிக்க மிகப்பொருத்தமானது எனக்கருதும் விஞ்ஞான ஆய்வு முறைகளைக் குறிப்பிடுக.
   2) மேலே தெரிவு செய்த இரு முறைகளிலும் உமது ஆய்விற்கு எதனைப் பயன்படுத்த விரும்புவீர்? அதற்கான காரணம் யாது?
   3) மேலே நீர் தெரிவுசெய்த ஆய்வுமுறையைப் பயன்படுத்தி தரவு சேகரிக்கும்போது எவ்வாறான நிபந்தனைகளை கருத்தில் கொள்வீர் என விளக்குக.
   ஆ. சமூக விஞ்ஞான ஆய்வுகளில் கட்டுப்பாட்டுக்குழு முறையை பயன்படுத்துவதில் உள்ள இடர்பாடுகளை விளக்குக.
   இ. வரலாற்று ஆய்வுகளில் அகழ்வாய்வை மேற்கொள்ளும் ஆய்வாளனுக்கு இருக்கவேண்டிய பிரதான பண்புகளைக் குறிப்பிடுக.

## பகுதி - III

09. அ. கலிலியோவினதும், கெப்ளரினதும் கண்டுபிடிப்புக்களை பெரும்பாலும் ஐக்கியப்படுத்தியே நியூட்டன் செந்நெறி பௌதீகத்துக்கும் வானியலுக்கும் அடித்தளமிட்டார் என்பதைத் தெளிவுபடுத்துக.
   ஆ. பூகோளமயமாக்கலின் நன்மை, தீமைகளை விளக்குக.

10. அ. புலமையாளரினதும், கைவினையாளரினதும் ஒருங்கிணைவே நவீன விஞ்ஞான புரட்சிக்கு வித்திட்டது என்பதை விளக்குக.
   ஆ. பின்வருவனவற்றுக்கு குறிப்பு தருக.
   1) பிரான்ஸிஸ் பேக்கனும் தொகுத்தறி முறையும்.
   2) வகையீடு ஒரு முறையிலாகுமா?

11. அ. ''கலிலியோ நவீன விஞ்ஞானத்தின் தந்தை மட்டுமல்ல விஞ்ஞான முறையியலின் தந்தையும் ஆவார்'' ஆராய்க.
   ஆ. பின்வருவோர் விஞ்ஞானத்துக்கு ஆற்றிய பங்களிப்பை சுருக்கமாக கூறுக.
   1) லாமார்க் (Lamarck) 2) ஜோன் டோல்டன்

12. பின்வருவனவற்றில் இரண்டினைப்பற்றி சிறு கட்டுரை வரைக.
   அ. சமயமும் விஞ்ஞானம்.
   ஆ. விஞ்ஞானமும் மூன்றாம் உலகமும்.
   இ. ஓசோன் ஓட்டையும் பாதிப்புகளும்.

நன்றிக்கும் பாராட்டுக்கும் உரிய ஆசிரியர்:
திரு.எஸ்.பவன் B.A(Hons), யாழ்ப்பாணம்.

# கணக்கீடு - 01 | பகுதி - II

தொடர்ச்சி.....

04. அ. 2006 டிசம்பர் 31 இல் கேசன் கம்பனியின் பொறித்தொகுதிகள் வருமாறு:

| இலக்கம் | கிரயம் | வி/னை திகதி | எஞ்சும் பெறுமானம் | பயன்தரு ஆயுட்காலம் |
|---|---|---|---|---|
| 0013 | 90,000 | 01.01.2001 | 10,000 | 5 வருடங்கள் |
| 0018 | 56,000 | 01.04.2003 | 8,000 | 4 வருடங்கள் |
| 0021 | 120,000 | 01.01.2004 | இல்லை | 6 வருடங்கள் |

2008 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுகாலத்தில் இடம்பெற்ற நடவடிக்கைகள் பின்வருமாறு:
1) 2008 ஏப்ரல் 01 இல் பொறி இலக்கம் 0023 ரூபா 70,000 இற்கு கொ/வு செய்யப்பட்டது.
2) 2008 ஜூன் 30 இல் பொறி இலக்கம் 0018 ரூபா 5,000 இற்கு விற்பனை செய்யப்பட்டது.
3) 2008 செப்டெம்பர் 30 இல் பொறி இலக்கம் 0021 ரூபா 54,000 ஆக மீள் மதிப்பீடு செய்யப்பட்டது.

**தயாரிக்குக.**
1. பொறிக் க/கு. 2. பொறித் தேய்வு ஏற்.க/கு.
3. பொறித்தேய்வுக்கணக்கு. 4. பொறி முடிவுறுத்தல் க/கு.

ஆ. 2006 டிசெம்பர் 31 இல் நிறுவனமொன்றிலுள்ள கடன்பட்டோர் மீதிகளும் கடன்பட்டோர் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஐயக்கடன் ஏற்பாடு வீதமும் பின்வருமாறு:

| கடன் நிலுவையிலுள்ள காலம் | கடன்பட்டோர் டிசம்பர் 31 இல் | ஐயக்கடன் ஏற்பாட்டு வீதம் |
|---|---|---|
| 0-30 நாட்கள் | 40,000 | - |
| 31-60 நாட்கள் | 50,000 | 4% |
| 61-90 நாட்கள் | 60,000 | 6% |
| 91 நாட்களுக்கு மேல் | 80,000 | 10% |

பின்வரும் நிலைமைகள் ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் கருதி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.
1) 2006.01.01 இல் ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கிலுள்ள மீதி ரூபா 15,000 எனக் கருதி ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கினை தயாரிக்குக.
2) 91 நாட்களிற்கு மேலாகியும் கடன்செலுத்தாதிருந்த நந்தனின் கடன் தொகையை அறவிடமுடியாக்கடனாக பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டது. 2006.01.01 இல் அறவிடமுடியா, ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கில் உள்ள மீதி ரூபா 14,000 எனக் கருதி அறவிடமுடியா, ஐயக்கடன் ஏற்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்குக.

05. அ. கழகமொன்றில் 2006 ஆம் வருட ஆரம்பத்தில் 100/=வினைச் செலுத்தும் 200 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்களில் 20 பேர் 2005 இற்கான சந்தாவைச் செலுத்தவில்லை. 10 பேர் 2006 இற்கான சந்தாவினை 2005 இல் செலுத்தியிருந்தனர். 2006 இல் 10 பேர் இவ்வருட சந்தாவைச் செலுத்திச் சேர்ந்துகொண்டனர். 2005 இல் பணம் செலுத்தாத அங்கத்தவர்களில் இருவர் உட்பட மொத்தம் 5 அங்கத்தவர்கள் கழகத்தில் இருந்து விலகியதாக அறிவித்ததால் அவர்களது வருமதிகள் பதிவழிக்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டில் (புதிய அங்கத்தவர் தவிர) 20,200/= கிடைத்தது. அதில் 2005 ஆம் ஆண்டுக்கான 10 அங்கத்தவர்கள் பணமும், 2007 இற்கான 12 அங்கத்தவர்கள் பணமும் அடங்கும்.

**வேண்டப்படுவது:**
2006 ஆம் ஆண்டுக்கான காசு அடிப்படையிலும் அட்டுறு அடிப்படையிலும் சந்தாக் கணக்கு தருக.

ஆ. தோறணை வியாபாரத்தின் 2009 மார்ச் 31 ஆம் திகதியன்று கடன்பட்டோர் பேரேட்டு மீதிகள் மொத்தம் 9,300/= ஆகும். அன்றைய தினம் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி 9,350/= ஆக இருந்தது. பரிசீலனையின் போது பின்வரும் விடயங்கள் அறியவந்தன.
1) கடன்பட்டோர் பேரேட்டில் 50% செலவு மீதியைக் கொண்டிருந்த கடன்பட்டோர் ஒருவரின் மீதி பட்டியல் தயாரித்தபொழுது வரவு மீதியாகக் கொள்ளப்பட்டது. இம்மீதி கட்டுப்பாட்டுக் கணக்கில் சரியாகப் பதியப்பட்டது.
2) 200/= அறவிடமுடியாத கடன் பதிவழிப்பு ஒன்று கட்டுப்பாட்டுக் கணக்கல் பதியப்பட்டிருக்கவில்லை.
3) விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை 150 ரூபாவால் கூட்டிக் கணக்கிடப்பட்டிருந்தது.
4) கொடுத்த கழிவான 100/= உரிய கடன்பட்டோர் தனிப்பட்ட கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**
திருத்திய கடன்பட்டோர் கணக்கினைத் தயாரித்து இரு மீதி இணங்க வைக்கும் கூற்றினைத் தயாரிக்குக.

06. அ. 31.12.2008 ஆம் ஆண்டு இரவு சகானா நிறுவனத்தின் ஒரு தொகைப் பண்டங்களும், ஒரு தொகை பணமும் களவாடப்பட்டிருந்தன. அதன் பின்னர் 113,000 கிரயமான பண்டம் மாத்திரம் எஞ்சியிருந்தன. 2008 நவம்பர் 31 இல் இருப்புக்கள் 300,000 ரூபா, காசு 140,000 ரூபா காணப்பட்டிருந்தன. டிசம்பர் மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல்வாங்கல்கள் பின்வருமாறு:
1) வியாபார வாடிக்கையாளருக்கான காசு விற்பனை 350,000 ரூபா, கடன் விற்பனை 550,000 ரூபா.
2) வழங்குநரிடமிருந்து பெற்ற இருப்புக்களின் பட்டியல் 700,000 ரூபா, வியாபாரக்கழிவு கழித்து 600,000 ரூபா.
3) காசுக்கு கொள்வனவு 200,000 ரூபா
4) அலுவலகச்செலவு 41,000 ரூபா.
5) வங்கியில் வைப்பு செய்த தொகை 160,000 ரூபா.
6) கடன்பட்டோரிடமிருந்து 10% வியாபாரக்கழிவு கழித்து 450,000 ரூபா பெறப்பட்டடிருந்து அதேவேளை பொருள் வழங்குநருக்கு 10% கழிவு நீக்கி 270,000 காசு கொடுக்கப்பட்டது. இந்நிறுவனம் விற்பனையில் 20% இலாபம் வைப்பது வழமை.

**வேண்டப்படுபவை:**
1. களவுபோன சரக்கு யாது? 2. களவுபோன காசு யாது?

ஆ. ரமணன் நிறுவனத்தின் மீதிகள் வருமாறு:

| விவரம் | 01.04.08 | 31.03.09 |
|---|---|---|
| கடன்பட்டோர் | 35,000 | 20,000 |
| கடன்கொடுநர் | 17,000 | 16,000 |
| இருப்பு | 40,000 | - |
| தளபாடம் | 100,000 | 90,000 |

1) இந்நிறுவனம் கடன் அடிப்படையில் பொருட்களைக் கொள்வனவு, விற்பனை செய்கிறது
2) விற்பனை விலையில் 30% இலாபம் சேர்க்கிறது.
3) 31.03.2009 இல் இருப்பின் நிகர தேறக்கூடிய பெறுமதி கிரயத்திலும் 10,000 ரூபா குறைவாகக் காணப்பட்டது.

**வேண்டப்படுபவை:**
1. 31.03.2009 இல் வியாபார இலாபநட்டக் கணக்கு.
2. 31.03.2009 இல் ரமணன் நிறுவனத்தின் ஐந்தொகை. (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

### மேடம்



மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று, பனி போல விலகிவிடும். எதிர்பார்த்த பணவரவுகள் சரியான நேரத்திற்கு கைக்கு கிடைக்கலாம். புத்திசாலித்தனமாக செயல்படுவதன் மூலம், சில விஷயங்களில் ஆதாயம் பெறுவீர்கள். தொழில் ரீதியான ஒப்பந்தங்கள் போட மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். அனுகூலமான நாள்.

### இடபம்



சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்வீர்கள். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலை ஒன்றுக்கு அதிகமாகச் செலவாகலாம். நீண்ட நாள்களாக உங்களின் வீட்டிற்கு வராத உறவினர் ஒருவர் வரலாம். அயலாருடன் பழங்கதைகள் பேசி நேரத்தை விணடிப்பீர்கள். வீட்டில் மாற்றங்கள் செய்வீர்கள்.

### மிதுனம்



கடந்த கால தவறு ஒன்றை நினைத்து வருத்தமடைவீர்கள். சிலர் மீது கோபம், வேகம் வந்தாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த பணவரவு மட்டுமின்றி, எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். பகட்டான ஆடை, ஆபரணங்கள் அணிவதில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர் உதவி கிட்டும்.

### கடகம்



நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவரை எதிர்பாராமல் சந்திக்க நேரிடலாம். உங்களுக்கு பிடித்த விடயம் ஒன்று மற்றவர்களுக்கு பிடிக்காமல் போகலாம். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வகையிலோ சிலருக்கு உதவி செய்யலாம். வேலையாள்களின் திடீர் விடுமுறையால் அவதிகளுக்கு ஆளாகலாம். செலவில் சிக்கனம் அவசியம்.

### சிங்கம்



உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங்கலாம். பல நாள்களாக மனதில் நினைத்திருந்த ஆசை ஒன்று நிறைவேறும். நண்பர்கள் சிலருக்கு கடனுதவி செய்யலாம். மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாகப் பொழுது போக்குவதில் நாட்டம் செல்லும். சுகமான அனுபவம் உண்டு.

### கன்னி



மற்றவர்களிடம் உங்களின் பெருமை, செல்வாக்கைக் காட்ட முற்படுவீர்கள். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த ஒருவரை இன்று சந்திக்கலாம். உறவினர்களுக்காக சிறிய தொகையைச் செலவிடலாம். பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம். தேவையற்ற விடயத்தில் தலையிட்டு மண்டை குடைச்சலுக்கு ஆளாகலாம்.

### துலாம்



இரண்டு நாள்களாகத் தடைபட்ட காரியம் ஒன்று, இன்று முடிவுக்கு வரும். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். நீண்ட நாள்களாக தள்ளிவைத்த வெளியூர் பயணங்கள் செல்லலாம். ஒரு விடயம் பற்றி மனக்கோட்டை கட்டி அது கலைந்து போகலாம்.

### விருச்சிகம்



சிலர் உங்களிடம் கடனுதவி கேட்டு நச்சரிக்கலாம். ஓய்வெடுக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்களிடம் அதிக கண்டிப்புடன் நடந்து கொள்ளலாம். ஒரு விடயத்தில் ஆரம்பத்தில் வேகமாக இறங்கிவிட்டு, பின்னர் பின்வாங்குவீர்கள். பொறுமை அவசியம்.

### தனுசு



சக ஊழியர்கள், நண்பர்களுடன் சேர்ந்து கூட்டாகச் சில காரியங்களைச் செய்வீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடிவுக்கு வரும். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிடைக்கலாம். வழக்கத்திற்கு மாறாகக் கூடுதல் நேரம் வேலை செய்வீர்கள். தொழில் ரீதியாக வரவேண்டிய பணம் வரலாம்.

### மகரம்



திட்டமிட்ட வேலைகளைச் சிரமம் இல்லாமல் சுலபமாக முடிப்பீர்கள். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்ட சிலர், ஆதரவாக நடந்து கொள்வர். நீங்கள் எதிர்பார்த்த நேரத்தில் வராத பணவரவு ஒன்று வரலாம். உறவினர் ஒருவரின் அன்புக் கட்டளைக்கு அடிபணியலாம். இளைய உடன் பிறப்புகளால் தொல்லைகள் நேரலாம்.

### கும்பம்



ஓய்வு, உறக்கம் இல்லாமல் செயற்பட நேரிடலாம். நினைத்த வேகத்திற்கு சில வேலைகள் நடக்காமல் மெதுவாக நடப்பதால், எரிச்சல் அடையலாம். நண்பர் ஒருவர் தனது மன ஆதங்கத்தை உங்களிடம் சொல்லிப் புலம்பலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில செலவுகளைச் செய்வீர்கள். சோம்பல் கூடும்.

### மீனம்



திட்டமிட்ட காரியம் ஒன்றில் ஏற்படும் தடையால் எரிச்சல், கோபம் அடையலாம். சக ஊழியர்களின் திடீர் விடுமுறையால் வேலைப்பளு கூடும். கூட்டுத் தொழில் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்குக் கூடும். உங்கள் மூலம் சிலர் காரியம் சாதிக்க முற்படுவர்.


**FREE SEMINAR** Study in leading Universities & Colleges

**UK, AUSTRALIA & NEW ZEALAND**

- FREE APPLICATION & VISA PROCESSING
- PERSONALISED COUNSELING SERVICES
- 100% VISA SUCCESS RATE (Conditions Apply)

**ICBT Campus** இன் இலவச உயர்கல்வி கருத்தரங்கும் UK, Australia & New Zealand போன்ற நாடுகளின் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனைகளும்.

கா.போ.த. சா/த, உ/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான இலவச உயர்கல்வி வழிகாட்டல் ஆலோசனைக்கருத்தரங்கு இலங்கையின் பிரபல நிறுவனமான ICBT Campus இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காலம் :
18.05.2010
மாலை 3.00 - 6.00 மணி
செவ்வாய்க்கிழமை

இடம் :
ST. JOHN'S College Jaffna



Organized by ICBT CAMPUS

மேலதிக விபரங்களுக்கு :
0773 427 287


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 03.04.1975 — விண்ணில் 18.05.2009



## திருமதி வில்விறெட் மேரிலூட்ஸ்

விழியின் ஓரமாய் என் உயிர் கரையுதே
உயிர்போன பின்பும்- இந்த
மனிதக் கல்லறை அலைந்து திரியுதே
விரல்கள் கோத்திடக் கைகள் தந்து
உணர்வுகள் உதிர்த்தவள்
என் மடி மீதிலே வழியின் ஓரமாய்
இறுதிப் பயணம் வந்தவள்
அழவும் இல்லை, சிணுங்கவும் இல்லை
முனகவும் இல்லை சிதறிய மூச்சு
நீ எழுவாய் என்னுடன்
என் கடைசிப் பயணம் வரையென நான் நினைத்தேன்
நம்ப முடியவில்லை உன்னை
நினைத்து நினைத்து கண்ணீர் பெருகி
என் உடல் நனையுதே
என்னை ஆற்ற முடியவில்லை.

கண்ணீரில் கதறியழும்:
**கணவர்** (இ.வில்விறெட்).

அன்பின் மகளுக்கு!
உன் கைவண்ணம் யாவும் எம்
இல்லத்தை அலங்கரிக்க
நீ மட்டும் இங்கு இல்லாமல் போனது
ஏனம்மா?
எவ்வண்ணம் யாம் இதைத் தாங்கிடுவோம்
இறைவனிடம் தான் கேட்கின்றோம்

தினத்திற்கொருமுறை நினைத்திடுவோம்
நீ இருந்திருந்தால்
எத்தினமும் நினைத்திட வைத்து விட்டாய்
நீ மறைந்ததினால்.

நித்தமும் உம் நினைவால் வாடும்:
**தந்தை, தாய், சகோதரர், உறவினர்.**

(98370)

இல.15, சுபாஸ் லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்மாயில்புரம் கிராமத்தில் வைத்தியசாலை இல்லை

சம்மாந்துறை, மே18

சம்மாந்துறை பிரதேச சபை பிரிவிற்குட்பட்ட இஸ்மாயில்புரம் கிராமத்தில் வைத்தியசாலை வசதி இல்லாததால் இங்குள்ள மக்கள் நாளாந்தம் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கின்றனர்.

இங்குள்ள மக்கள் தமது அவசர வைத்திய சேவையினைப் பெற்றுக்கொள்வதற்காக அம்பாறை, சம்மாந்துறை போன்ற தூர இடங்களுக்கு செல்ல வேண்டியிருப்பதாகவும், இதனால் தாம் பல்வேறு பிரச்சினைகளுக்கு உட்பட்டுவருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாட்டிலுள்ள சகல கிராமங்களிலும் ஆகக் குறைந்தது ஒரு கிராமிய சுகாதார நிலைய வசதியாவது இருக்கும் சூழ்நிலையில் இஸ்மாயில்புரம் கிராமத்தில் இவ்வாறானதொரு வசதி ஏற்படுத்தப்படாமலிருப் பதையிட்டு இங்குள்ள மக்கள் வருத்தம் தெரிவிப்பதுடன், அம்பாறை மாவட்டத்திலுள்ள அரசியல் வாதிகள் இவ்விடயம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி இக்குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ளி)

# ஜே.வி.பிக்குப் பொது மன்னிப்பு வழங்கியமை போன்று முன்னாள் போராளிகளுக்கும் மன்னிப்பு வழங்குங்கள்!

## மட்டு.மாவட்ட எம்.பி. பொன் செல்வராசா தெரிவிப்பு

மட்டக்களப்பு, மே 18

''நாட்டில் அரசுக்கெதிரான கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பியினருக்கு பொது மன்னிப்பு வழங்கியதைப் போன்று சிறையில் வாடும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதி முன்வர வேண்டும்.''

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.

மட்டக்களப்பு குருமன்வெளி சக்தி சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம் நாடாளுமன்ற உறுப்பினராக மீண்டும் பொன். செல்வராசா தெரிவு செய்யப்பட்டமைக்காகப் பாராட்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட 'மகிழ்ச்சி விழா''வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ் வைபவம் க. செல்லையா தலைமையில் குருமன்வெளியில் இடம்பெற்றது.

பொன். செல்வராசா எம்.பி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

போர் உக்கிரமடைந்த காலத்திலும், அதன் பின்னரும் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகள் கைது செய்யப்பட்டு இந் நாட்டிலுள்ள சிறைக் கூடங்களில், தடுப்பு முகாம்களிலும் விசாரணைகள் இன்றி பல வருடங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மையின சிங்கள இளைஞர்கள் ஜே.வி.பி. அமைப்பினூடாக கிளர்ச்சி செய்தபோது, கைது செய்யப்பட்டு, பின்னர் பொது மன்னிப்பு மூலம் விடுதலை செய்யப்பட்டதைப் போன்று தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் விடுதலை வழங்கி, அவர்களுக்கு மறுவாழ்வு வழங்க ஜனாதிபதியும் அவரின் கீழ் இயங்கும் அரசும் முன்வர வேண்டும் -என்றார். (ளி)

# தமிழர்களை மதம் மாற்றச் சதி! அம்பாறை மாவட்ட எம்.பி. விசனம்!!

அம்பாறை, மே 18

''யுத்தத்தாலும், ஆழிப்பேரலையாலும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் மற்றுமொரு மத மாற்ற பயங்கர வாதத்தை எதிர்நோக்கியுள்ளனர். அண்மைக் காலமாக ஒரு பிரிவினர் மிகவும் தீவிரமாக இம் மதமாற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ் ஈனச் செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.''

-இவ்வாறு தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமூகநேயன் பொ. பியசேன விடுத்துள்ள பகிரங்க அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடப்பட்டவை வருமாறு:-

இந்து மதத்தவரை கிறிஸ்தவத்திற்கு மதமாற்ற அதிதிவீர செயற்பாடு திருக்கோவில், வினாயகபுரம், அக் கரைப்பற்று, பாலக்குடா, மண்டானை, முனையூர் போன்ற பலபிரதேசங்களில் இடம்பெற்று வருகிறது.

வறுமையைப் பயன்படுத்தி ஆசை வார்த்தைகளைக் கூறி இம் மதமாற்றத்தில் ஒரு கோஷ்டி ஈடுபட்டு வருவதாக ஆதார பூர்வமான தகவல் கள் கிடைக்கின்ற. இந்த மதமாற்றத்தால் கலாசார சீரழிவுட்பட மதக் கலவரம் தோன்றவும் வாய்ப்புள்ளன. அமைதியாக ஒற்றுமையாக வாழ்ந்த மக்கள் மத்தியில் மதவாத விதை விதைக் கப்படுவது ஆரோக்கியமான சூழலை ஏற் படுத்தாது மாறாக பிரிவினையை ஏற்படுத்தும்.

இந்து என்ற பெயரில் இயங்கும் மாமன்றங்கள், அமைப்புக்கள் இம் மதமாற்றத்தையிட்டு கண்டும் காணாமலிருப்பது ஏன்? இந்து தர்மம் காப்போம் என்பவர்கள் இந்து மதத்தையும் காப்பாற்ற வேண்டும். வெறுமனே ஊர்வலம் மட்டும் விழிப்புணர்வை ஏற்படுத்த போதுமானதல்ல. சமய ஆன்மீக கருத்துக்கள் கூறுகின்ற அதேவேளை, இப்படியான மதமாற்றம் நிகழ்கின்ற போது தட்டிக்கேட்க வேண்டும்.

குடிமரபு என்பன காலங்கடந்து போகின்ற நிலையில் மதங்கள் தமது இருப்புக்களை நிலைநிறுத்தக் கூடியன. அநேகமான இந்துக்கள் வீட்டில் யேசு பெருமானை தெய்வமாக பூசிக்கின்றனர். அன்னை தெரேஸாவின் வேலையை உன்னதமாகப் பார்க்கின்றனர்.

அதே உடையோடு மாற்றுமத மக்களை மாதம்மாற்ற ஒருவர் முனைப்போடு செயற்படுவதை யேசு பெருமானே விரும்ப மாட்டார். தமிழினம் கடந்த மூன்று தசாப்த காலமாக பட்டுவந்த அவலத்தை அறியாதவர் யாருமில்லை. இந்நிலையில் மதத்தின் பேரால் அச்சுறுத்தி பயங்கரவாதம் செய்ய முயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

உலகில் அதிகம் மக்களைக் கொண்டுள்ள அம் மதத்திற்கு இன்னும் மக்கள் தேவையா? அப்பாவி இந்து மக்களை ஆசைவார்த்தையைக் கூறி மதம் மாற்றும் முயற்சிகளை இன்றுடன் விட்டு விடுங்கள்.

அன்பு, சேவை, கருணை, காருண்யத்தையே அனைத்து மதங்களும் போதிக்கின்றன. தம்மதம் பற்றி அறியாதவனே மற்ற மதங்களை நிந்திக்கிறான்.

எனவே, வறுமையைக் காரணம் காட்டி இன்னமும் மதம் மாற்றும் செயற்பாடுகள் தொடருமாகவிருந்தால் இந்துமத அமைப்புக்களுடன் சேர்ந்து பாரிய போராட்டமொன்றை அம்மதத்திற்கு எதிராக முன்னெடுக்க வேண்டியிருக்கும் ஆகவே, மத மாற்றத்தை கைவிடுங்கள் -என்றுள்ளது. (ளி)




# கல்முனைக்குடி பிரதான வீதிகள் மிக மோசமாக சேதமடைந்துள்ளன

அம்பாறை, மே18

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனைக்குடிப் பிரதேசத்தில் உள்ள முக்கிய பல வீதிகள் போக்குவரத்து செய்ய முடியாதளவுக்கு மிக மோசமாக சேதமடைந்து காணப்படுகின்றன.

கல்முனைக்குடி கடற்கரைவீதி, கொடியேற்றப்பள்ளி வாசல் வீதி, செயிலான் வீதி, ஜீம் ஆப் பள்ளி வீதி, சாஹிறா வீதி உள்ளிட்ட முக்கிய பல பாதைகளே உடைந்து சேதமடைந்து பொதுமக்களின் பயணத்திற்கு சவாலாக அமைந்துள்ளன.

பல வருடங்களாக மோசமான நிலையில் காட்சியளிக்கின்ற இவ்வீதிகளைப் புனரமைப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், எம்.பிக்கள், கல்முனை முதல்வர் உள்ளிட்ட அரசியல் வாதிகள் பலர் இவ்வீதிகளின் அவல நிலையை நேரடியாகக் கண்ணுற்றும் கூட அவர்களுள் எவரும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த முன்வரவில்லை எனவும் பொதுமக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர்.

இன்னும் ஒரு சில தினங்களில் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்முனைக்குடி நாகூர் ஆண்டகை கொடியேற்று விழா ஆரம்பமாகவுள்ளது. 12 நாள்கள் இடம்பெறுகின்ற இவ்விழாவில் தினமும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பங்குபற்றுவர்.

இதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற பிரதான பாதைகளான கொடியேற்றுப் பள்ளி வீதி, கடற்கரை வீதி ஆகியவற்றிலுள்ள பாரிய பள்ளம் படுகுழிகளையாவது உடனடியாக சீரமைப்பதற்கு கல்முனை மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியன முன்வரவேண்டும் என்று கல்முனை சமூக அபிவிருத்தி மன்றம் வலியுறுத்தியுள்ளது. (ளி)

## மு.காவின் அதியுயர் பீடம் நாளை கூடுகிறது

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் அதியுயர் பீடம் நாளை புதன்கிழமை கூடவுள்ளது.

நாட்டின் இன்றைய அரசியல் சூழ்நிலை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இவ்வுயர் பீடக்கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளதாக கட்சி முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவி மற்றும் உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பில் இங்கு இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் கூறினார். அத்துடன் கட்சியின் அரசியல் உயர்பீடத்தில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான எஸ்.எஸ்.பி. மஜீத், கே.எம்.ஏ. ஜவூத் ஆகியோர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது.

அதேவேளை கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பி நியமன சர்ச்சை குறித்தும் இதன் போது விவாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ளி)

## சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு தொழில் உபகரணங்கள்

மட்டக்களப்பு, மே 18

ஆரையம்பதி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் பொருட்டு பல்வேறு தொழில் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

இத் திட்டத்தின் கீழ் ஆரையம்பதியின், செல்வாநகர் ஒல்லிக்குளம், தாளங்குடா, கோவில் குளம் மற்றும் கிரான்குளம் ஆகிய கிராமங்களிலுள்ள 36 பயனாளிகளுக்குப் 10 லட்சத்து 18 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதாரத் தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந் நிகழ்வு ஆரையம்பதி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பிரதிப்பணிப்பாளர் எம். நடேசராசா, ஆரையம்பதி பிரதேச செயலாளர் எஸ். அமலநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ளி)

## ஏறாவூர் டாக்டர் அகமட் பரீட் வித்தியில் பல்வேறு கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டம்

மட்டக்களப்பு, மே 18

ஏறாவூர் டாக்டர் அகமட் பரீட் வித்தியாலயத்தில் இந்த ஆண்டு பல்வேறு கல்வி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என வித்தியாலய அதிபர் ஏ. அப்துல் றகுமான் தெரிவித்தார்.

இப்பாடசாலையில் 2010ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் ஏறாவூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஐ.எல். கிஸட். ஆப்தீனின் மேற்பார்வையின் கீழ் கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது ஒன்பது பேரைக்கொண்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க நிருவாகிகள் பெற்றோர்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த வருடத்தில் இப் பாடசாலையின் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக பெற்றோரின் பங்களிப்புடன் பல்வேறு துரித வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது பற்றி விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

குறிப்பாக தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் விசேட செயற்றிட்டமொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர் யூ.எல்.எம். ஜெயினுத் வழிகாட்டலின் கீழ் இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக வித்தியாலய அதிபர் குறிப்பிட்டார். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை ஆள்கள் தேவை

1. சமயற்காரர்
(இரவுக்கு, சகல சமயல்களும் தெரிந்த 55 வயதுக்குட்பட்ட ஆண்கள்).

2. கொங்கிரீற் தூண் அரிபவர்கள்
(அனுபவமுள்ளவர்கள்).

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் நேரில் வரவும்.

**TILKO HOLIDAYS (PVT) LTD.**
*NO.70/6, K.K.S.ROAD,*
*JAFFNA.*
[சி/567721] *T.P: 021 222 9497*


## கொடியேற்றத் திருவிழா

யாழ்ப்பாணம், பெப் 18

அல்வாய்வடக்கு அரசடி விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றையதினம் மாலை நிகழ்வுகளாக பிற்பகல் 5.30 மணிக்கு மூலஸ்தான பூசை, 6.15 மணிக்கு தம்பப் பூசை,இரவு7மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் இடம் பெறும்.

(50-204)


## 60ஆவது பிறந்த நாள் வாழ்த்து

### திரு.நா.வன்னியசிங்கம்

(அதிபர், யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி) (18.05.2010)



இன்று(18.05.2010) செவ்வாய்க்கிழமை தனது 60ஆவது பிறந்த நாளைக் கொண்டாடும் எமது கல்லூரி அதிபர் திரு.நா.வன்னிய சிங்கம் அவர்கள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

**2010 உயர்தர மாணவர்கள்,**
**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.**

[98374]



## நீங்காத நினைவில் ஏழாம் ஆண்டு



அமரர்
### கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்
(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், சோலைவரிப் பகுதி,யாழ்.மாநகரசபை)

திதி: 18.05.2010

வையத்துள்:
09★02★1932

வானுலகில்:
04★06★2003

வீழாமல் நாம் வாழ்ந்தோம் வேராகி நின்றீர்
விழுமுன்னே தாய்போல ஏமைத்தாங்கி நின்றீர்
ஆல்போல நாம் வாழும் வாழ்வெல்லாம் உம்மால்
அடிமரத்து ஈரம் இன்னும் காயாத பூமி
ஆண்டேழு ஆனாலும் ஆறாது நெஞ்சம்
அப்பாவும் நாம் வாழ்ந்த வாழ்வெல்லாம் இன்பம்
படமாகச் சுவர்மீது நாம் பார்க்கும்போது
அந்நாளின் நினைவெல்லாம் அலை வந்து மோதும்.

118/4, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (99360)

என்றும் நீங்கா நினைவுடன்:
குடும்பத்தினர்.



## புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் வைகாசி மாதம் 5ஆம் நாள் நாளை (19.05.2010) புதன்கிழமை காலை 9.24 மணிமுதல் 9.44 மணிவரையுள்ள பூச நச்சத்திரமும் சித்த யோகமும் கூடிய மிதுன லக்கின சுப வேளையில்

**எம்மால் புதிதாக அமைக்கப் பெற்ற**

# நியூ பிரிந்தா ஸ்ரோர்ஸ்

என்னும் வியாபார நிறுவனத்தை ஆரம்பிக்க இறைவன் திருவருள் கூடியிருப்பதால் அத்தருணம் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து ஆசீர்வதித்து விழாவினைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கிறேம்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்.

திரு.சு.இராசேந்திரம்
குடும்பத்தினர்.

(93342) அல்லாரை, மீசாலை.



# ஜெப ஆராதனையும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

மனிதருக்குள்: 1936.04.20
கர்த்தருக்குள்: 2010.04.18

## சின்னத்தம்பி பாலசிங்கம்

(இளைப்பாறிய அதிபர்)

காலஞ்சென்ற சின்னத்தம்பி பாலசிங்கம் அவர்களின் வாழ்க்கைக்கு நன்றி கூறுதலின் பொருட்டு இன்று (18.05.2010) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஜெப ஆராதனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.



இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்.

குடும்பத்தினர்

இல. 74/9,
இராமநாதன் வீதி,
நாயன்மார்கட்டு.

(98371)


## யூனியன் வங்கியின் திட்ட முதலீட்டாளராக அமெரிக்க 'ஷோக்கேப்', மலேசிய 'ஜென்டின்' நிறுவனங்கள்

யூனியன் வங்கியின் திட்ட முதலீட்டாளராக மலேசிய 'ஜென்டின்' நிறுவனம் மற்றும் அமெரிக்காவின் 'ஷோக்கேப்' முதலீட்டு நிறுவனம் என்பன இணைந்துள்ளன.

யூனியன் வங்கி ஐந்தாண்டுத் திட்டத்துடன் வேகமான வளர்ச்சியை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறது. அதிதிறமையான பணிப்பாளர் குழுமத்தையும் அதிகாரிகள் குழுவையும் கொண்டுள்ள யூனியன் வங்கியானது 2 பில்லியன் ரூபாவை மேலதிகமாகக்கொண்டு இலங்கையிலுள்ள நிதிச்சேவை நிறுவனங்களுள் முன்னிலை பெறுவதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் கைகோர்த்துள்ளது.

வர்த்தக ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள இந்த முன்னோக்கிய பாதையில் பொழுதுபோக்கு மற்றும் அனுசரணை சேவைகளை முன்னெடுக்கும் ஜென்டின் நிறுவனத்துடன் ஐக்கிய அமெரிக்காவின் பன்ட் ஷோக்கேப் நிறுவனமும் திட்ட முதலீட்டாளராக யூனியன் வங்கியுடன் கைகோர்த்துள்ளது.

இது தொடர்பில் யூனியன் வங்கியின் தலைவர் அஜித த சொய்சா கூறுகையில்,

இந்த முதலீட்டின் மூலம் யூனியன்வங்கி பலமடைந்துள்ளமை வெளிப்படையாகின்றது. ஜென்டின் நிறுவனம் ஆசியாவிலேயே சிறந்த முகாமைத்துவத்தைக் கொண்ட முன்னணி நிறுவனமாகும்.

இந்த ஒன்றிணைவின் மூலம் யூனியன் வங்கியின் வளர்ச்சி மேம்படுவதோடு, அரசாங்கத்தின் நிதி கட்டமைப்புக்கமைய பாதுகாப்பான முதலீட்டுக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக்கொடுக்கப்படும். யுத்தம் முடிவடைந்ததை அடிப்படையாகக் கொண்டு இலங்கை, சர்வதேசநிதிச் சந்தையின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, வேகமானவளர்ச்சியுடன் முதலீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதனால் இந்நாட்டிலுள்ள நிறுவனங்கள் அதிவேகமான வளர்ச்சி காணக்கூடும். இலங்கையில் முதலீடு செய்யப் பலர் தற்போது சம்மதம் தெரிவித்து வருகின்றனர்.அத்தோடு யூனியன் வங்கியானது ஐந்தாண்டு வளர்ச்சியை இலக்காகக்கொண்டு வெளிநாட்டு நிறுவனங்களுடன் செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

விளம்பரம்

அபிவிருத்தி வளர்ச்சியுடன் முன்னோக்கிச் சென்று கொண்டிருக்கும் யூனியன் வங்கியானது ஐந்தாண்டு திட்ட அபிவிருத்தியை இல்க்காகக் கொண்டுள்ளது. இதன் மூலம் நிதி சுலபப்படுத்தி இலங்கை மத்திய வங்கியின் அதி குறைந்த மூலதனத்தை ஏற்படுத்தலாம் என்றார்.பிரதம நிறைவேற்று அதிகாரி நிலந்த டி சில்வா கூறுகையில்,

யூனியன் வங்கியானது 62.1 மில்லியன் ரூபா இலாபத்துடன் 2009 ஆம் ஆண்டு எடுத்துக்காட்டான வளர்ச்சியை எட்டியது. அதற்கு முந்திய வருடத்தில் 23.1 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தது. வங்கியின் வைப்பு 10.4 பில்லியன் ரூபாவிலிருந்து 12 பில்லியன் ரூபா வரை அதிகரித்தது. வங்கியின் சொத்துக்கள் 12 பில்லியனிலிருந்து 14.1 பில்லியன்களாக வளர்ச்சியடைந்தது என்று கூறினார்.

''முறையான திட்டங்களுக்கமைய செயற்பட்டமையினால் வங்கியின் புதிய கிளைகள் பலவற்றை அமைக்கக் கூடியதாக இருந்தது'' என்று யூனியன் வங்கியின் ஆலோசனை/ பணிப்பாளர் அனில் அமரசூரிய தெரிவித்தார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில்,எமது முறையான திட்டங்களினால் புதிய கிளைகள் பல அமைக்கப்பட்டன. தற்போது எமது கிளைகள் வடக்கிலும் இயங்க ஆரம்பித்துவிட்டன. இனிவரும் காலங்களில் நாட்டில் பல பாகங்களிலும் எமது கிளை வலையமைப்பை விஸ்தரிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பங்குதாரர்களின் எதிர்பார்ப்பை பூர்த்திசெய்யும் நோக்குடன் செயற்திறன்மிகு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய செய்திகள், தகவல்கள் இங்கே பதிவுகளாக...




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

01.06.1991

✱ வெளிநாட்டு தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தமையால் அந்நிறுவனங்கள் வடக்கு - கிழக்கில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளத் தயக்கம்.

✱ ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் இந்தியப் புலனாய்வுத்துறையின் தலைவர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கவைச் சந்தித்து பேச்சு.

02.06.1991

✱ உலகிலேயே மிக முக்கிய அரசியல் தலைவரைக் கொல்ல 'மனித குண்டு' பயன்படுத்தப்பட்டது இதுவே முதற் தடவை என இந்து நாளிதழ் தெரிவிப்பு.

✱ பேராசிரியர் ரால்ப் புல்ஜின்ஸ் கடத்தப்பட்டமை தொடர்பாக முன்னாள் அமைச்சரும், ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி திஸநாயக்க மீது நீதிமன்றத்தல் குற்றப்பத்திரிகை தாக்கல்.

03.06.1991

✱ அரச படையினர் திட்டமிட்டுச் செய்யும் கொலைகள் காணாமற்போகச் செய்தல், சித்திரவதைகள் என்பவற்றை அரசு அனுமதித்தால் அது அரச பயங்கரவாதமே என சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் தெரிவிப்பு.

✱ 40 பேர் உயிரிழக்கக் காரணமான, 1987ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் மருதானையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் தொடர்பு பட்டிருந்த தமிழ்ப் பெண் ஒருவர் குறித்தும் இந்தியப் புலனாய்வுக் குழு விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிப்பு.

04.06.1991

✱ 16 வருட காலத்தின் பின்னர் இலங்கைக்கு விஜயம் செய்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபை தூதுக் குழு கொழும்பில் அரச அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தி வருவதாகத் தெரிவிப்பு.

✱ ராஜீவ் காந்தியின் கொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என இந்தியப் பிரதமர் சந்திரசேகர் குற்றஞ்சாட்டியுள்ளதாக 'லண்டன் ஒப்சேவர்' பத்திரிகை தெரிவிப்பு.

05.06.1991

✱ கொழும்பு வந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபையின் பிரதிநிதிகள் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்ய முயன்று கொண்டிருக்கும் இவ்வேளையில், கிழக்கில் அரச படையினரின் அத்துமீறல்கள் தொடர்வதாகத் தெரிவிப்பு.

✱ ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்ட உலக சூழல் தினத்தை ஒட்டி ஐ.நா. சங்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவு வழங்கும் கௌரவ விருது 'உதயன்' பத்திரிகைக்கு வழங்கப்படுவதாக அறிவிப்பு.

06.06.1991

✱ கிளிநொச்சி இந்து மகாவித்தி யாலயத்தின் மீது குண்டுவீச்சு விமானம் ஒன்று குண்டு வீசித் தாக்கியதில் மாணவன் ஒருவன் உட்பட மூவர் பலி.

07.06.1991

✱ தற்கொலைப் படையினரின் தாக்குதல்களில் இருந்து தலைவர்களைக் காப்பாற்றுவது முடியாத காரியம் என்று தமிழ்நாடு பொலீஸ் மா அதிபர் வோல்டர் தேவாரம் தெரிவிப்பு.

✱ மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா.ஆணைக்குழுவில் 1992 முதல் 1994 வரை அங்கம் வகிக்க இலங்கை மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு.

08.06.1991

✱ மன்னார் மாவட்டத்தில் அரச படையினர் பெருமெடுப்பில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலில் படையினரின் கவச வாகனம் ஒன்று சேதமுற்றதாகவும் தெரிவிப்பு.

✱ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒன்றுக்கான முயற்சி நடைபெற்று வருவதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

09.06.1991

✱ வடக்கு - கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பிரெஞ்சு வைத்தியக் குழு டாக்டர்கள் தொடர்ந்தும் அப்பணியை மேற்கொள்வதா, இல்லையா என முடிவு செய்வதற்காக பாரிஸுக்கு சென்றுள்ளனர் என்று தெரிவிப்பு.

✱ கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாட்ஸ்ரோனை இலங்கையை விட்டு வெளியேறுமாறு இலங்கை அரசு உத்தரவிட்டமைக்கு பிரிட்டனின் தொழிற்கட்சி கண்டனம் தெரிவிப்பு.

10.06.1991

✱ இலங்கைக்கு வந்திருக்கும் சர்வதேச மன்னிப்புச் சபைப் பிரதிநிதிகள் குழுவுக்கு கொழும்பில் வைத்து பயமுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாக பி.பி.ஸி. வானொலி அறிவிப்பு.

✱ விடுதலைப் புலிகளுடன் சமாதானம் செய்துகொள்ளும் வகையில் புதிய சமாதானத் திட்டம் ஒன்றை முன்வைக்க அரசு முயன்று வருகிறது என அமைச்சர் ரணில் விக்கிரசிங்க தெரிவித்தாக வெரித்தாஸ் வானொலி அறிவிப்பு.

11.06.1991

தமிழீழ விடுத்லைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் சாவகச்சேரியில் நடந்த முத்தமிழ் விழா நிகழ்ச்சிகளில் நேரில் கலந்துகொண்டு தேசிய விருதுகள் வழங்கிக் கௌரவித்ததாகத் தெரிவிப்பு.

✱ கலைஞர் மு.கருணாநிதிக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சுவார்தை பல தடவைகள் நடந்ததாக இந்திய சட்டத்துறை அமைச்சர் சுப்பிரமணியசுவாமி தெரிவிப்பு.

12.06.1991

✱ உள்நாட்டுப் போரை நிறுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து இலங்கை அரசுடன் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் இயக்கம் தயாரான இருப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் லோறன்ஸ் திலகர் தெரிவிப்பு.

✱ காரைநகரில் இராணுவத்தினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் பின்னர் அங்குள்ள பொதுமக்களுக்கு பலவித கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தி வருவதாகத் தெரிவிப்பு.

13.06.1991

✱ இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு மூன்று ஐரோப்பிய நாடுகளுக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்திருப்பதாகத் தெரிவிப்பு.

✱ பிரெஞ்சு வைத்தியக் குழு மீது தாண்டிக்குளத்தில் வைத்து தாக்குதல் நடத்திய உலங்குவானூர்தி ஓட்டுநர்கள் மீது வழக்குத் தொடரவேண்டும் என பிரெஞ்சு வைத்தியக் குழுவினர் அரசிடம் கோரிக்கை.

14.06.1991

✱ மட்டக்களப்பு மாவட்டம், கொக்கட்டிச்சோலைப் பகுதியில் இலங்கை இராணுவத்தினர் கடந்த இரு நாள்களாக நடத்திய வெளியாட்டத்தில் 160 இற்கும் அதிகமான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதாகத் தெரிவிப்பு.

✱ பிரெஞ்சு மருத்துவ தொண்டர் நிறுவனத்துக்குச் சொந்தமான வாகனத்தின் மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதலுக்கு இலங்கைப் பாதுகாப்புப் படையினர் எவரும் பொறுப்பாளிகள் அல்லர் என அச்சம்பவம் குறித்து விசாரித்த ஜனாதிபதி தனிநபர் விசாரணைக் குழுவின் ஆணையாளர் தெரிவிப்பு.

15.06.1991

✱ கொக்கட்டிச்சோலைச் சம்பவங்கள் இராணுவத்திலுள்ள சிலரின் தனிபட்ட செயல்களாக இருக்கக் கூடும். அத்தகையோர் மீது அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்கும் என ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

✱ நேரடிப் பேச்சு நடத்தும் தனது விருப்பத்தை விடுதலைப் புலிகள் இயக்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அரசு அதுகுறித்து பரிசீலிக்கும் என ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தெரிவிப்பு.

# வன்னிப் பகுதித் தபாலகங்களுக்கு சீ.டி.எம்.ஏ. தொலைபேசிகள்

யாழ்ப்பாணம்,மே18

வன்னிப் பகுதியில் உள்ள தபாலகங்களுக்கு புதிதாகத் தொலைபேசி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

அனேகமாக தபாலகங்ளுக்கு சீ.டி.எம்.ஏ தொலைபேசிகள் தற்போது வழங்கப்பட்டுள்ளன.

தற்போது வன்னிப் பிரதேசங்களில் தபால் சேவைகள் மிகவும் சீரான முறையில் நடைபெற்று வருகின்றன.

இதனால் வன்னிப்பகுதி மக்களுக்கான வெளித் தொடர்புகள் மீளவும் கிடைக்கப்பெற்றுவருகின்றன.

நீண்ட காலத்தின் பின்னர் தமது முகவரிக்கு வரும் கடிதங்களைச் சொந்த இடத்தில் பெறும்வாய்ப்பும் வன்னி மக்களுக்குக் கிட்டியுள்ளது என்று சொல்லப்படுகின்றது.

(எ-224)

# இருளில் மூழ்கும் நெடுந்தீவு

நெடுந்தீவு,மே18

பிரதான மின்பிறப்பாக்கி பழுதடைந்தமையால் நெடுந்தீவுப் பிரதேசம் இரவு வேளைகளில் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கிக் கிடக்கின்றது.

நெடுந்தீவின் சகல பகுதிகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்காக மின்சார சபையினர் இரண்டு மின்பிறப்பாக்கிகளைப் பயன்படுத்தி வந்தனர். இவற்றில் பெரிய மின்பிறப்பாக்கி பழுதடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

இதன்காரணமாக மற்றைய சிறு மின்பிறப்பாக்கி மூலமாக பகலில் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இரவு வேளைகளில் மின்சாரம் வழங்கப்படாததன் காரணமாக நெடுந்தீவுப் பிரதேசம் முழுவதும் இருளில் மூழ்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-111)

# நாடு கடந்த தமிழீழ அரசை அங்கீகரிக்குமாறு ஆஸி.நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை

கொழும்பு,மே18

நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆஸ்திரேலியாவின் பிரதான அரசியற் கட்சியொன்று ஆதரவு வழங்க முன்வந்திருக்கிறது என்று அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அங்குள்ள பிரதான அரசியற் கட்சிகளில் ஒன்றான கிரீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அமண்டப்றேச்ணன் அம்மையார் நாடு கடந்த தமிழீழ அரசை ஆஸ்திரேலியா அங்கீகரிக்கவேண்டும் என்று கோரியுள்ளார்.

அண்மையில் இடம்பெற்று முடிந்த நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தலில் அமண்ட ப்றேச்ணன் கண்காணிப்பாளராகப் பணியாற்றியிருந்தார். இந்நிலையில் பெருமளவு புலம்பெயர் தமிழர்கள் வகைதொகையின்றி கலந்துகொண்டு நாடு கடந்த தமிழீழ அரசுக்கு ஆதரவு வழங்கி உள்ளமையை நேரில் அவதானித்தார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் நாடு கடந்த தமிழீழ அரசுக்கான தேர்தல் முடிவுகளை ஆஸ்திரேலிய அரசு அங்கீகரிக்கவேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார் என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

# ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகச் செயற்படும் சூழ்நிலை தற்போது நாட்டில் நிலவுகின்றதாம்!

## மல்வத்த பீட மகாநாயக்கர் தெரிவிப்பு

கொழும்பு,மே18

நாட்டில் ஊடகவியலாளர்கள் அச்சமின்றி செயற்படக் கூடிய சூழ்நிலை நிலவுவதாக மல்வத்த பீட மகாநாயக்க திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கள தேரர் தெரிவித்துள்ளார்.

ஊடகத்துறை அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல நேற்றுமுன்தினம் மல்வத்த பீட மகாநாயக்க திப்பட்டுவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்து ஆசிபெற்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தின்போதே மல்வத்த பீட மகாநாயக்க தேரர் இதைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஊடகத்துறை அமைச்சர், பேச்சு நடத்திக் காலம் தாழ்த்தியதை விடுத்து, செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

பிரதேச ஊடகவியலாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுடன், நாட்டின் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்புக்களை வழங்கவுள்ளார் எனவும் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உறுதியளித்துள்ளார்.(சி)

**புலனாய்வுத் துறையினரைப் போல் நடித்துக் கொள்ளை;**

# படைத்தரப்பைச் சேர்ந்த இருவர் உட்பட மூவருக்கு விளக்கமறியல்

கொழும்பு,மே

குற்றப் புலனாய்வுப் பொலிஸாரைப் போல் நடித்துப் பட்டப் பகலில் தமிழர் வீடு ஒன்றுக்குள் புகுந்து நகைகளை எடுத்துச் சென்றனர் என்ற வழக்கில் முன்னாள் படையினர் இருவர் உட்பட மூவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

களுத்துறையைச் சேர்ந்த காமினி பெர்னாண்டோ, அம்பாறையைச் சேர்ந்த ரி.வி. பிரசாந்த, கொழும்பைச் சேர்ந்த ரொபேர்ட் விஜேரட்ண ஆகிய மூவரையுமே இரு வாரங்களுக்கு விளக்கமறியலில் வைப்பதற்கான உத்தரவை கல்முனை நீதிவான் எம.ஐ.எம். ரிஸ்வி பிறப்பித்தார்.

காமினி பெர்னாண்டோ இராணுவத்திலும், ரொபேர்ட் விஜேரட்ண கடற்படையிலும் முன்னர் கடமை புரிந்தவர்கள் ஆவர்.

கல்முனைப் பொலிஸ் நிலையப் பெருங்குற்றப் பிரிவுப் பொலிஸார் இம்மூவரையும் மன்றில் ஆஜராக்கினர்.

இச்சம்பவம் குறித்து பெருங்குற்றப் பிரிவுப் பொலிஸார் மன்றுக்குத் தெரிவித்தவை வருமாறு:-

''கல்முனை வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த மோகனதாஸ் தயாளரூபி என்பவரின் வீட்டுக்குள் கடந்த 13ஆம் திகதி மதியம் 2.45 மணியளவில் இம்மூவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரைப் போல் பிரவேசித்தனர். படையினரின் அடையாள அட்டைகளைக் காண்பித்தனர். வீட்டுக்குள் சோதனை போட்டனர். பின்னர் புறப்பட்டனர். அவர்கள் சென்ற பின்னர் வீட்டு அலுமாரியை மோகனதாஸ் தயாளரூபி பார்வையிட்டார். அப்போது சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மூவராலும் களவாடப்பட்டிருக்கின்றமையை உடனடியாகவே கண்டுபிடித்தார். அவர் சத்தமிட்டவாறு வீதிக்கு வந்து அவர்களைத் துரத்திச் சென்றார். அவர்கள் ஓடித் தப்ப முயன்றனர். அவர்களை வைத்தியசாலைக் கடமையில் நின்ற கல்முனைப் பொலிஸ் நிலையப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர். மூவரையும் அவர்கள் சோதனை செய்த போது காணாமல் போயிருந்த நகைகள் மீட்கப்பட்டன. பின்னர் மூவரும் பெருங்குற்றப் பிரிவில் ஒப்படைக்கப்பட்டனர்.''

கல்முனைப் பொலிஸ் நிலையப் பெருங்குற்றப் பிரிவுப் பொலிஸார் இவர்கள் இது மாதிரி வேறு வீடுகளிலும் கைவரிசைகள் காட்டி உள்ளனரா? என்பது குறித்துப் புலனாய்வு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளனர்.

மோகனதாஸ் தயாளரூபியின் கணவர் வெளிநாட்டில் உள்ளார் என்பதும் வேறு ஆண்கள் அவ்வீட்டில் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "படகு ஒன்றில் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் பொருட்டு அவர் தனது உயிரை பணயம் வைத்தார். ஆனால், அவர் அங்கு போய்ச்சேரவில்லை."

கமலினி. வயது 50
அண்மையில் விதவையானவர்.


அவுஸ்திரேலியாவுக்கு படகு மூலம் செல்வதற்காக கமலினியின் கணவர் தனது வர்த்தக நிலையத்தை விற்றதுடன் கடனும் வாங்கினார். ஆனால், துரதிஷ்டவசமாக ஆட்கடத்தல்காரர்கள் , அளித்த வாக்குறுதி நிறைவேறவில்லை. இந்தப் பயணத்தின் போது படகு நீரில் மூழ்கியதால் கமலினியின் கணவர் உயிரிழந்தார். படகு மூலம் முறையற்ற விதத்தில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கும் இலங்கையர்கள் எதிர்கொள்ளும் அனர்த்தங்களை விளக்கும் கதைகளில் இதுவும் ஒன்றாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் எண்ணிலடங்கா இலங்கையர்கள் ஆட்கடத்தல்காரர்களுக்கு பலிக்கடாக்களாகின்றனர். படகு மூலம் முறையற்ற விதத்தில் பயணம் செய்பவர்கள் பட்டினியையும், துன்பங்களையும் எதிர்கொள்கின்றனர். சில சந்தர்ப்பங்களில் உயிரையும் இழக்கின்றனர். உங்களுக்கு என்ன நேரிடும்?

**இலங்கையர்களின் புகலிடக் கோரிக்கைகள் பரிசீலிக்கப்படுவதை அவுஸ்திரேலியா இடைநிறுத்தியுள்ளது.**

முறையற்ற விதத்தில் படகுமூலம் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்து தமது உயிரை பணயம் வைத்துக்கொள்ள வேண்டாம்.

அவுஸ்திரேலிய அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் சேமநலச் செய்தி.



ஒருவர்: உண்மைச் சம்பவங்கள் மற்றும் மக்கள் கூறிய [illegible] அவற்றின் அடிப்படையில் இந்தச் சமூக அறிவித்தல் தயாரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அமரர் க.தர்மேஷன் ஞாபகார்த்த மென்பந்துத் துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி கடந்த சனிக்கிழமை வட்டு. வை.எம்.எச்.ஏ. மைதானத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உரையாற்றுவதையும் சம்பியன் வென்ற சுழிபுரம் விக்ரோறியன்ஸ் வி.க.அணித் தலைவர், மூளாய் விக்ரோறி வி.க.தலைவரிடம் இருந்து வெற்றிக்கிண்ணத்தைப் பெறுவதையும் வெற்றிபெற்ற அணியினர் விருந்தினர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: விற்றோறி)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம்; உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் சம்பியன்!

வலி.வடக்கு, மே 18

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக்கொண்டன. கோல்கள் பெறுவதற்கு இரு அணிகளும் மேற்கொண்ட பிரயத்தனமான முயற்சிகள் எவையும் வெற்றிபெறவில்லை.

இரு அணிகளும் இறுதிவரை கோல் பெறுவதற்கு எடுத்த முயற்சிகள் அனைத்தும் இரு அ்ணிகளினதும் பின்வரிசை வீரர்களினால் முறியடிக்கப்பட்டதுடன் கோல் காப்பாளர்களும் கோல் பெறும் சர்ந்தர்ப்பங்களைத் தடுத்து நிறுத்தினார்கள்.

ஆட்டம் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாத நிலையில் சமநிலையில் நிறைவுபெற்றது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமனிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி 5:4 கோல்கள் என்ற அடிப்படையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை வெற்றிபெற்று மாவட்ட சம்பியனாகியது. (6-86)

## வலிகாமம் கல்வி வலய மெய்வன்மைப் போட்டியில் சம்பியன் வென்றவர்களின் விபரங்கள்

வலி.வடக்கு, மே18

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான மெய்வன்மைப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் விவரங்கள் வருமாறு:

**11 வயதுப் பிரிவு**

றொசால்ட் ஹரினி துவாரகா (இளவாலை புனித கன்னியர்மடம் பாடசாலை).

**13 வயதுப் பிரிவு**

செ.மேரிநிலக்சனா (இளவாலை புனித கன்னியர்மடம் பாடசாலை).

**15 வயதுப்பிரிவு**

தவகுலசிங்கம் சங்கீதா (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

**17 வயதுப் பிரிவு**

மகேந்திரம் கமலினி (வட்டுக்கோட்டை மத்திய கல்லூரி).

**19 வயதுப்பிரிவு**

இ.காவேரி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி).

**21 வயதுப் பிரிவு**

ர.துஷ்யந்தி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி), செ.கீர்த்திகா (தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி). (6-86)

# யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம்; கோப்பை வென்றது மானிப்பாய் இந்துக் கல்லூரி!

வலி.வடக்கு, மே 18

யாழ்.மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற் 17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி சுமார் பத்து நிமிட நேரத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு தண்டனை உதை எல்லைக்கு அண்மையாகக் கிடைத்தது. நேர் உதை ஒன்றை சரியான முறையில் பயன்படுத்தி முதலாவது கோலைப் பெற்றுக்கொண்டது.

முதல்பாதி ஆட்டம் மிகவும் சூடுபிடித்த நிலையில் சென்.ஹென்றீஸ் கல்லூரிக்கு தண்டனைப் பகுதியில் ஒரு உதை கடைத்த போதிலும் அதனை உரிய முறையில் பயன்படுத்தி கோல் பெறும் வாய்ப்பைத் தவறவிட்டது.

முதல்பாதி ஆட்டம் மானிப்பாய் இந்துக் கல்லூரி ஒரு கோல் பெற்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் பெறவேண்டும் என்ற துடிப்புடன் மோதிக் கொண்ட போதிலும் இரு அணிகளினாலும் கோல்கள் எதனையும் பெறமுடியாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் இளவாலை சென்.ஹென்றீஸ் கல்லூரியை வெற்றிபெற்று யாழ்.மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (6-86)

## அரையிறுதி ஆட்டங்கள்

வலி.வடக்கு, மே 18

யாழ்.மாவட்ட உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள், பிரதேச செயலகங்களுக்கு இடையே வடமாகாணத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்.செயலகத்தின் விளையாட்டுப் பிரிவு நடத்தும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3 மணிக்கு வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் அரையிறுதிப் போட்டியில் மோதும் அணிகள் வருமாறு:

* நல்லூர் பிரதேச செயலக அணி எதிர் கரவெட்டிப் பிரதேச செயலகம்.
* சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக அணி எதிர் யாழ்ப்பாணப் பிரதேச செயலக அணி. (6-86)

# நுகேகொட சென்.ஜோன்ஸ் 6 விக்கெட்டுக்களால் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியை வென்றது!

யாழ்ப்பாணம், மே 18

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ்- நுகேகொட சென்.ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையே நடைபெற்ற சினேகபூர்வ துடுப்பாட்டப் போட்டியில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியை 6 விக்கெட்டுக்களினால் வென்றது நுகேகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் ரஜிந்தன் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்ந்து எடுத்தார்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் வீரர்கள் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணித்தலைவர் ரஜிந்தன் பொறுப்பாக ஆடி 6 பௌண்டறிகள் ஒரு சிக்ஸருடன் 48 ஓட்டங்களைப் பெற்றார்.

எட்வின் ஜோய் 20, திலக்சன் 19, பிரசன்னா 11, சஞ்சயன் 10, தனுசன் 10 என ஆட்டம் இழக்க யாழ்ப்பாணம் செ்ன். ஜோன்ஸ் கல்லூரி 44.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

பந்து வீச்சில் ஸ்ரீவர்த்தனா, நதுன், லஹிரு ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நுகேகொட சென்.ஜேன்ஸ் கல்லூரியின் அணித் தலைவர் லஹிரு, ஸ்ரீவர்த்தனாவின் சிறப்பான ஆட்டத்தினால் இலகுவாக வெற்றியிலக்கை நோக்கி முன்னேறியது.

லஹிரு 25 பந்துகளில் 10 பௌண்டறிகளுடன் 48 ஓட்டங்களையும் ஸ்ரீவர்த்தனா 37, வன்னியாராச்சி 23, தெவிண்டு 17, மிதுன் 12 ஓட்டங்களையும் பெற்றனர். நுகேகொட சென்.ஜோன்ஸ் கல்லூரி 27.1 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது.

பந்து வீச்சில் சஞ்சயன் 2 விக்கெட்டுக்களையும் ஹரிகரன், அமிதயன் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்டம்; சம்பியன் வென்றது கைதடி வளர்மதி வி.க.

கைதடி,மே 18

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் கரப்பந்தாட்டச் சம்பியன் வென்றது கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக்கழகம்.


தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான 'செற்றப்' ரீதியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப் போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகமும் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியில் கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடியதுடன் பார்வையாளர்களின் கவனத்தையும் பெற்றது.

ஐந்து செற்களைக் கொண்ட இப் போட்டியில் 25:16, 25:21, 15:11 எனும் செற் கணக்கில் தென்மராட்சியில் கடந்த 8 வருடங்களாகச் சம்பியனாகத் திகழ்ந்த மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தி கைதடி மத்தி வளர்மதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

போட்டிக்கு நடுவர்களாக எஸ்.மகிந்தன், ஆர்.சசிகரன் ஆகியோர் கடமையாற்றினர். (6-288)



## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்


### மாவட்ட கரம்போட்டி திகதியில் மாற்றம்

வலி.வடக்கு, மே 18

யாழ்.மாவட்ட கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறுவதாக இருந்த 19 வயதுப் பிரிவு ஆண்கள், பெண்களுக்கான கரம்போட்டிகள் 24ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக மண்டபத்தில் நடைபெறும் என யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண்.தயாளன் அறிவித்துள்ளார். (6-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுகுண்டைத் தாங்கிச் சென்று தாக்கவல்ல இந்தியாவின் ஏவுகணைச் சோதனை வெற்றி!



பாலசோர், மே 18

எதிரிகளின் இலக்கை துல்லியமாக தாக்கும் வல்லமை கொண்ட 'அக்னி - 2' ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாக நேற்று சோதித்தது.

ஒரிசா மாநிலம் பாலசோர் கடற்கரையில் இருந்து நடத்தப்பட்ட இந்த சோதனை உலக அளவில் இந்தியாவுக்கு கூடுதல் மதிப்பை உயர்த்தும் என்றால் மிகையாக இருக்க முடியாது.

ஏனெனில் கடந்த மார்ச் மாதம் விண்ணில் ஏவப்பட்ட அக்னி -1 ஏவுகணை 700 கி.மீட்டர் தூரம் சென்று தாக்கும் வல்லமை கொண்டது. தற்போது இது ( அக்னி -2 ) செல்லும் தூரம் இரண்டரை மடங்கு அதிகரித்திருக்கிறது. கடந்த 2009 ஆம் ஆண்டில் கடலில் உள்ள எதிரிகளின் இலக்கை கப்பலில் இருந்து தாக்கும் வல்லமை கொண்ட பிரிதிவி- 2 சிறியரக ஏவுகணை வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதனையடுத்து நேற்று மேலும் ஒரு சோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டிருக்கிறது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட இந்த அக்னி- 2 ஏவுகணை அணுகுண்டை சுமந்து சென்று சுமார் 2 ஆயிரம் கிலோமீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் வல்லமை கொண்டது. 17 தொன் கொண்ட இந்த ஏவுகணை ஆயிரம் தொன் எடையை சுமக்கும் வல்லமை கொண்டது. நமது இந்திய இராணுவ தொழில்படையினர் இந்தத் தயாரிப்பில் முழுக்கவனம் செலுத்தினர்.

காரியத்தை கச்சிதமாக முடிக்கும் : சொன்னதைச் செய்யும் கிளிப்பிள்ளை போல இந்த இடத்தை அழித்து விட்டு வா என்று அதற்குக் கட்டளையிட்டால் காரியத்தைக் கச்சிதமாக முடித்துவிடும். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடத்தப்பட்ட இந்தச் சோதனை தோல்வியில் முடிந்தது. இந்த முறை நேற்று ( 17ஆம் திகதி ) வெற்றிகரமாக சோதனை நடத்தப்பட்டது.

# 100 தீவிரவாத இயக்கங்களுக்கு தடை விதித்தது இந்தியா!

புதுடில்லி, மே 18

உலக அளவில் அல் - குவைதா இயக்கத்துடன் தொடர்புடைய 100இக்கும் மேற்பட்ட தீவிரவாத இயக்கங்களுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டு உள்ளது.

இந்தியாவில் இப்போது 33 தீவிரவாத இயக்கங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. உலக அளவில் பல்வேறு நாடுகளில் குண்டு வெடிப்பு மற்றும் வன்செயல்களில் ஈடுபட்ட இயக்கங்களை தடை செய்ய ஐ.நா. பாதுகாப்பு ஆளுநர் கூட்டத்தில் 2007இல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்படி இந்தோனேசியாவில் பாலி நகரில் குண்டு வெடிப்பில் தொடர்புடைய ஜெம்மா இஸ்லாமியா, இஸ்லாமிக் ஜிகாத் குரூப் ஆப்லிபியா, எகிப்தியன் இஸ்லாமிக் ஜிகாத் உட்பட பல்வேறு இயக்கங்கள் தீவிரவாத இயக்கங்களாக அறிவிக்கப்பட்டு தடைசெய்யப்பட்டன.

இந்தியாவிலும் இந்த இயக்கங்களுக்கு திருத்தப்பட்ட சட்டவிரோத செயல்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடை விதிக்க மத்திய அரசு பரிசீலித்து வந்தது. இந்தியாவில் வன்முறையில் ஈடுபட்ட தீவிரவாதிகள் மீதான வழக்குகளை கையாளும் போது சட்டச் சிக்கல்களை ஏற்படுவதை தவிர்க்க அல் - குவைதா இயக்கத்துடன் தொடர்புடைய தீவிரவாத இயக்கங்களுக்கு தடை விதிப்பது அவசியமாகிறது.

எனவே, 100இக்கும் மேற்பட்ட தீவிரவாத இயக்கங்களை தடைசெய்யப்பட்ட இயக்கமாக உள்துறை அமைச்சகம் நேற்று அறிவித்தது. இந்த பட்டியல் விரைவில் இணையத்தளத்தில் வெளியிடப்படும். தடைசெய்யபட்டுள்ள இயக்கங்களில் லஸ்கா-•இ - தொய்பா, ஜெய்ஷ் - இ - முகமது, தாரிக் - உல் - அன்சார். சிமி, மாயோவிஸ்ட் கம்யூனிஸ்ட் சென்டர், எல்.டி.டி.இ. பாபா கல்சா சர்வதேசம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

## இலங்கை செல்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து

# நடிகர் சல்மான்கானுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய தமிழர்கள் கைது!

மும்பை, மே.18

இலங்கையில் நடைபெற உள்ள திரைப்பட விழாவில் கலந்துகொள்ள எதிர்ப்பு தெரிவித்து மும்பையில் நடிகர் சல்மான்கான் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முயன்ற தமிழர்களை பொலிஸார் கைது செய்தனர்.

எதிர்ப்பு இந்திய சர்வதேச திரைப்பட விழா இலங்கை தலைநகர் கொழும்பில் நடைபெற உள்ளது. இந்த விழாவின் தூதராக அமிதாப்பச்சன் நியமிக்கப்பட்டார். இந்திய சர்வதேச திரைப்பட விழா இலங்கையில் நடைபெறுவதற்கு பல்வேறு தமிழ் அமைப்புகளும், அரசியல் பிரமுகர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இந்த எதிர்ப்பை தொடர்ந்து கடந்த சில வாரங்களுக்கு முன்பு பிரபல பொலிவுட் நடிகர் அமிதாப்பச்சன் வீட்டு முன்பு நாம் தமிழர் இயக்கத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்களிடம், மற்றவர்களின் மனம் புண்படுமாறு எந்தவொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்க மாட்டேன் என்று அமிதாப்பச்சன் தெரிவித்தார்.

சல்மான்கானை கண்டித்து ஆர்ப்பாட்டம் ஆனால் உறுதியான எந்தவொரு அறிவிப்பையும் அமிதாப்பச்சன் தெரிவிக்கவில்லை. இதனால் கடந்த மாதம் 11ஆம் திகதி அன்று மீண்டும் நாம் தமிழர் இயக்கத்தினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டனர். அதன்பிறகு தூதராக நியமிக்கப்பட்ட அமிதாப்பச்சன் அதிலிருந்து விலகினார். இதனையடுத்து புதிய விழா தூதராக பிரபல இந்தி நடிகர் சல்மான்கான் அறிவிக்கப்பட்டார்.

இந்தநிலையில் மும்பை பாந்திராவில் உள்ள சல்மான்கான் வீட்டை முற்றுகையிட்டு பல்வேறு தமிழ் அமைப்புகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதி கேட்டனர். ஆனால் பொலிஸார் அனுமதி கொடுக்கவில்லை. இந்தநிலையில் தடையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக தமிழ் அமைப்புகள் இதனால் சல்மான்கான் வீட்டு முன்பு பொலிஸார் குவிக்கப்பட்டனர். திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த சல்மான்கான் வீடு நோக்கி திரளான தமிழர்கள் வந்தனர். அப்போது அங்கிருந்த பொலிஸார், தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றதாக கூறி அவர்களை கைது செய்து வான் ஏற்றிச் சென்றனர். இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# எழுத்தாளர் அனுராதா ரமணன் காலமானார்



சென்னை, மே 18

பிரபல எழுத்தாளர் அனுராதா ரமணன் (62) சென்னையில் ஞாயிற்றுக்கிழமை காலமானார். உடல்நலக் குறைவு காரணமாக அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

சென்னை திருவான்மியூரில் வசித்து வந்த அனுராதா ரமணன், ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகதைகளையும், 850 நாவல்களையும் எழுதியுள்ளார். 'சிறை', 'ஒரு வீடு இரு வாசல்', 'கூட்டுப் புழுக்கள்' ஆகிய இவருடைய நாவல்கள் திரைப்படங்களாக எடுக்கப்பட்டுள்ளன.

எழுத்துத் துறையில் சிறந்து விளங்கியதற்காக முன்னாள் முதல்வர் எம்.ஜி. ஆரிடமிருந்து தங்கப் பதக்கம் மற்றும் சிறந்த எழுத்தாளருக்கான ராஜீவ் காந்தி விருது என பல்வேறு விருதுகளை இவர் பெற்றுள்ளார்.

கடந்த சில நாள்களாக உடல் நிலை சரியில்லாமல் இருந்த அவர், அடையாறில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை மாரடைப்பு ஏற்பட்டு அவர் உயிரிழந்தார். அவருடைய உடல் திருவான்மியூர் வால்மீகி நகரில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு. திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு பெசன்ட் நகரில் உள்ள எரிவாயு தகன மயானத்தில், அவருடைய உடல் தகனம் செய்யப்பட்டது.

# அரசியல் குறித்த சர்ச்சைகளில் ஆளுநர்கள் தலையிடக்கூடாது!

பெங்களூர், மே 18

'அரசியல் சர்ச்சைகளில் மாநில ஆளுநர் தலையிடக்கூடாது' என, பாரதிய ஜனதா தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார். சுரங்க அதிபர்களும் கர்நாடக மாநில அமைச்சர்களுமான ஜனார்த்தன ரெட்டி மற்றும் அவரது சகோதரர்கள் மீது கொண்டைய்யா என்ற எம்.எல்.சி. ஆளுநர் பரத்வாஜிடம் புகார் கொடுத்தார். இந்த புகாரை பெற்றுக்கொண்டு மாநில ஆளுநர், ரெட்டி சகோதரர்கள் நேரில் ஆஜராகும்படி உத்தரவிட்டார். 'மாநில ஆளுநர் நீதிபதியல்ல, அவரது உத்தரவுக்கு கீழ்பணிய முடியாது' என, ரெட்டி சகோதரர்கள் மறுத்து விட்டனர்.

இது குறித்து பா.ஜ.மூத்த தலைவர் வெங்கையா நாயுடு குறிப்பிடுகையில், 'மாநில ஆளுநர், அரசியல் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது. அவர் மாநிலத்தின் காப்பாளராக இருந்து அரசுக்கு வழிகாட்டியாகச் செயல்பட வேண்டும். ஏதாவது தவறு இருந்தால் அதை நீதிமன்றம் கவனித்துக் கொள்ளும். ஆளுநர், நீதிபதி போல மனு அனுப்புவது என்பது ஏற்புடையதல்ல. ராம் சேனாவின் நடவடிக்கைகளை பாரதிய ஜனதா ஆதரிக்கவில்லை. அவர்கள் தவறு செய்தால் சட்டம் தன் கடமையை செய்யும்' என்றார்.

# இந்தியச் செய்திகள்

# வடிவேலுவுக்குக் கொலை மிரட்டல்; நடிகர் சிங்கமுத்து பொலிஸாரால் கைது



சென்னை, மே 18

நகைச்சுவை நடிகர் வடிவேலுக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்ற சந்தேகத்தின் பேரில் நடிகர் சிங்கமுத்துவை விருகம்பாக்கம் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர். இது குறித்த விவரம் வருமாறு:

வடிவேலுவுடன் இணைந்து பல படங்களில் நகைச்சுவை காட்சிகளில் நடித்து பிரபலமானவர் சிங்கமுத்து.

சினிமாவில் ஏற்பட்ட நட்பு காரணமாக நிலம் வாங்குவது உள்ளிட்ட நடவடிக்கைகளிலும் இவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். இதில், தாம்பரம் அருகில் நிலம் வாங்கி விற்றது தொடர்பாக தன்னிடம் ரூ. 7 கோடி அளவுக்கு மோசடி செய்துவிட்டதாக, சிங்கமுத்து மீது மாநகர பொலிஸில் வடிவேலு புகார் அளித்திருந்தார்.

சிங்கமுத்து தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாகவும் விருகம்பாக்கம் பொலிஸில் அவர் மீது புகார் அளித்திருந்தார். இந்த புகார்களின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த பொலிஸார், சிங்கமுத்துவை தேடி வந்தனர். இரு வழக்குகளிலும் அவர் முன் ஜாமீன் பெற்றிருந்தார்.

இந்த நிலையில், விருகம்பாக்கம் பகுதியில் உள்ள வடிவேலுவின் அலுவலகத்துக்கு சிங்கமுத்து ஞாயிற்றுக்கிழமை காலையில் சென்றாராம். அங்கு வடிவேலு இல்லையாம்.

ஆனால், அலுவலகத்தில் இருந்தவர்களிடம் வடிவேலுவுக்கு கொலை மிரட்டல் விடுக்கும் வகையில் இவர் பேசியதாகக் கூறப்படுகிறது.

இது தொடர்பாக வடிவேலுவின் சார்பில் அவரது அலுவலக மேலாளர் சங்கர், விருகம்பாக்கம் காவல் நிலையத்தில்

புகார் அளித்தார். இதன் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்த விருகம்பாக்கம் பொலிஸார், சிங்கமுத்துவை மாலையில் கைது செய்தனர். பின்னர் அவர் புழல் சிறையில் 15 நாள் நீதிமன்றக் காவலில் அடைக்கப்பட்டார்.

# பொலிஸாருக்கு உளவுத் தகவல் கொடுத்த 6 பேர் நக்ஸலைட்டுக்களால் கொலை!

சட்டீஸ்கர் மாநிலத்தில் கிராமத் தலைவர் உட்பட 6 பேரை நக்ஸலைட்கள் சுட்டுக் கொன்றனர். சட்டீஸ்கரில் ராஜ் நந்த்கான் மாவட்டம் டெரிகான் என்ற கிராமத்தில் நேற்று முன்தினம் அதிகாலை நக்ஸலைட்கள் பயங்கர ஆயுதங்களுடன் புகுந்தனர். கிராமத் தலைவர் உட்பட கிராம மக்கள் 6 பேரை சுட்டுக் கொன்றனர். அவர்களது உடல்களை கிராமத்துக்கு வெளியேயே வீசி எறிந்து விட்டு நக்ஸலைட்கள் தப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

எதற்காக இந்தக் கொலைகள் நடந்தன என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர் நக்ஸலைட்கள் பற்றி பொலிஸாருக்கு உளவு சொன்னதாக சந்தேகப்பட்டு 6 பேரையும் நக்ஸலைட்கள் கொன்றிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். தப்பிச் சென்ற நக்ஸலைட்களை பொலிஸார் தேடி வருகின்றனர். டெரிகான் மாவட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியில் உயிர் நீத்தவர்களின் நினைவாக நேற்று மாலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இந்த நிகழ்வில் வன்னியில் உயிர்நீத்த உறவுகளுக்காக தமிழரசுக்கட்சிப் பிரமுகர்கள் தீபமேற்றுவதை முதற்படத்திலும், ஏற்றப்பட்ட தீபங்கள் சுடர்விட்டு எரிவதை இரண்டாவது படத்திலும், உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துவதை இறுதி இரு படங்களிலும் காணலாம். (படங்கள்-ரட்ணம்)

# தமிழ் மக்களின் கண்ணீரில் வெற்றிவிழா கொண்டாடும் மஹிந்த அரசின் அநாகரிகம்!

## வெதும்புகிறார் சேனாதிராஜா எம்.பி.

யாழ்ப்பாணம்,மே18

வன்னியில் பேரவலங்களைச் சந்தித்து தமிழ்மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும் வேளையில் அவர்களது கண்ணீரைக்கொண்டு வெற்றிவிழாக் கொண்டாடப்படுகின்றது.

இந்த நடவடிக்கை மகிந்த அரசின் நாகரிகமற்ற தன்மையின் வெளிப்பாடே- இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா.

வன்னிப்போரில் படுகொலைசெய்யப்பட்ட தமிழ் மக்களின் நினைவு நிகழ்வு நேற்று தமிழரசுக்கட்சியின் யாழ்.தலைமையகத்தில் கட்சியின் தலைவர் பொ.கனகசபாபதி தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய மாவை சேனாதிராஜா மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ்மக்கள் தமது வரலாற்றில் எத்தனையோ ஆயிரம் ஆயிரம் உயிர்களை இனத்தின் விடுதலைக்காக இழந்துள்ளனர். தமிழ் மக்கள் அகிம்சை வழிப்போராட்டத்தை ஆரம்பித்தது முதல் இனப்படுகொலைகள் நடந்தேறி வருகின்றன.

1954இல் தனிச் சிங்களச் சட்டத்தை எதிர்த்து தந்தை செல்வாவினால் காலி முகத்திடலில் அகிம்சை வழியில் எதிர்ப்பைக்காட்டியபோது, சிங்களப் பேரினவாதிகளினால் தாக்கப்பட்டு இரத்தம் சிந்த வேண்டியேற்பட்டது.

அன்னை இந்திரா காந்தி இலங்கையில் மோசமான இனப்படுகொலைகள் இடம்பெறுவதாக 1983இல் குறிப்பிட்டிருந்தார். தமிழ்மக்களது வாழ்விடங்கள் சிங்கள மயப்படுத்தப்பட்டு-இராணுவ மயப்படுத்தப்பட்டு- வருகின்றன.

### எம்மவர்கள் சிலரின் அலட்சியப்போக்கு

எமது இனம் வன்னியில் எத்தனையோ ஆயிரம் உறவுகளை இழந்து நிற்கிறது. ஆனால் எமது மக்களில் அநேகர் அதனைப் பொருட்படுத்தாமல் - அலட்சியமாக- இருக்கின்றனர். ஆட்டம், பாட்டம், கேளிக்கை என்று அவர்கள் பொழுதைப் போக்கி வருகிறார்கள். இவ்வாறானவர்களை எண்ணிப்பார்க்கும் போது மிகவும் மனவேதனையாக இருக்கிறது. மற்றவரின் துன்பத்தில் பங்கு கொள்வது தமிழர்களின் பாரம்பரியத்தில் காலாகாலமாக இருந்து வருகிறது.

எமது வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்படவேண்டும். அதன் மூலம் எதிர்கால சந்ததிகள் தங்களின் கடந்தகால வரலாற்றை உணரக்கூடியதாக இருக்கும். ஆனால் வரலாற்றுக் சின்னங்களை- எமது அடையாளச் சின்னங்களை-அழிக்கும் நடவடிக்கையை சிங்களப் பேரினவாதம் தற்போது கச்சிதமாக நிறைவேற்றி வருகிறது.

இன அழிப்பின் உச்ச எல்லையே கடந்த வருட மே மாதத்தில் வன்னியில் இடம்பெற்றுள்ளது, பல ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர். எம் மக்கள் நாளாந்தம் வகைதொகையின்றி கொன்று குவிக்கப்பட்டனர். எங்கும் ஒரே பிணக்குவியல்கள்-

ஹிட்லர்,முசோலினி போன்றவர்களின் கொடூரமான ஆட்சியை விடவும் மிகக் கொடுமையான ஆட்சி இலங்கையில் இடம்பெற்று வருகிறது. இவ்வாறான நிலையில் எமது உறவுகளின் இழப்புகளுக்காக இதயபூர்வமாக அஞ்சலி செலுத்துவோம். ஆண்டுதோறும் இந்தநாளை எம்மவர்களின் ஆத்ம சாந்திக்காக- அவர்களின் நினைவாக அனுஷ்டிப்போம் -என்றார். (ஓ-14)

## 23கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த

# கிளிநொச்சி மக்களின் மீள்குடியமர்வு; இன்றும் நாளையும் பதிவு செய்யும் பணிகள்

யாழ்ப்பாணம்,மே18

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள 23கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை அந்தந்தப் பகுதிகளில் மீள்குடியேறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம் ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இன்று செவ்வாய்க் கிழமை அக்கராயன் மகாவித்தியாலயத்திலும்-

திருநகர்தெற்கு,திருநகர்வடக்கு, உதயநகர் மேற்கு, உதயநகர் கிழக்கு, பெரியபரந்தன், விவேகானந்தநகர், கிருஸ்ணபுரம், அம்பாள்குளம், செல்வாநகர், ஆனந்தபுரம், தொண்டமான் நகர்,கிளிநகரம், கனகபுரம், கணேசபுரம்,ஜெயந்திநகர், உருத்திரபுரம் கிழக்கு, ஊற்றுப்புலம் , புதுமுறிப்பு ஆகிய 18கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் நாளை புதன்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் தாங் கள் தற்காலிகமாக வதியும் கிராம அலு வலர் பிரிவில் பதிவு நீக்கம் செய்த கடிதத் துடன் வந்து பதிவு செய்யுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

இருநாள்களும் முற்பகல் 9மணிமுதல் பிற்பகல் 2மணிவரையுமே பதிவுகள் மேற்கொள்ளப்படும். அதேவேளை தற்காலிக பதிவு நீக்கக் கடிதத்துடன் வருபவர்கள் மட்டுமே மீள்குடியேற அனுமதிக்கப்படுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-16-10)

# இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றம்; பக்கச் சார்பற்ற விசாரணை அவசியம்

## த.தே.ம. முன்னணி வலியுறுத்து

யாழ்ப்பாணம், மே 18

தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனப்படுகொலை மற்றும் போர்க் குற்றம் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட்டு, தமிழர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

வன்னியில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட ஓராண்டு நிறைவை ஒட்டி விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

த.தே.ம. முன்னணி வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு :-

மே-18 ஓராண்டு நினைவு நிகழ்வுகளில் அனைத்து தமிழ்பேசும் மக்களுடனும் கைகோர்க்கும் தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி -

* சிறிலங்காவின் சிறைக்கூடங்களில் வாடும் அனைத்து தமிழ் அரசியல் - போர்க் கைதிகளும் விடுவிக்கப்படல் வேண்டும்.
* தமிழர்கள் தனித்துவமான இறைமை கொண்ட தேசம் என்பது அங்கீகரிக்கப்பட்ட அடிப்படையில் இனச்சிக்கலுக்கான தீர்வு அமைய வேண்டும் என்று கோருகின்றது - என்றுள்ளது.

(ஓ1)



வன்னிப் போரில் உயிர்நீத்த தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அமெரிக்காவில் உள்ள லிங்கன் நினைவுத் தூபிக்கு முன்னால் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

# ஊழியர்,சேமலாப நிதி தொடர்பான இருநாள் நடமாடும் சேவை யாழ்.நகரில்

## நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும்

யாழ்ப்பாணம்,மே18

இலங்கை மத்தியவங்கி ஊழியர் சேமலாப நிதிப்பிரிவின் இருநாள் நடமாடும் சேவை நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் முற்பகல் 9மணி முதல் பிற்பகல் 4மணிவரை யாழ். வீரசிங்கம் மண்டபத்திலுள்ள தொழில் திணைக்கள அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட தொழில் திணைக் களத்தின் அனுசரணையுடன் இடம்பெறவுள்ள இந்த நடமாடும் சேவையில் நாளை, ஊழியர் சேமலாபநிதிப்பிரச்சினை தொடர்பாகவும், அதனை எப்படித் தீர்த்தல் என்பது பற்றியும், ஊழியர் சேமலாப நிதியில் இலத்திரனியல் உபகரணப் பிரயோகம் பற்றியும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் யாழ். மாவட்ட தனியார்துறை தொழில் தருநர்களுக்கு நடத்தப்படவுள்ளன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை இரண்டாம் நாள் அமர்வின்போது ஊழியர் சேமலாபநிதி தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

# நளினியைத் தற்கொலை செய்ய தூண்டுகின்றனர் சிறை அதிகாரிகள்

## அவரது கணவர் முருகன் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 18

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் கைதியாக நளினி வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நளினி தன்னை சிறை அலுவலர்கள் உணவில் விஷம் கலந்து கொல்ல திட்டமிட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டியுள்ள நிலையில், சிறைத்துறையினர் நளினியை தற்கொலை செய்து கொள்ள தூண்டுகிறார்கள் என அவரின் கணவர் முருகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருபவை வருமாறு:-

நளினி தனக்கு தரும் உணவில் விஷம் கலந்து கொடுத்து கொலை செய்து விடுவார்களோ என்ற சந்தேகத்தில் தனக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தார். இந்நிலையில் நளினி அளித்த புகார் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு சிறைத்துறை அதிகாரிகளிடம் தமிழக அரசு தெரிவித்திருந்தது.

இது தொடர்பாக சிறைத்துறை டிஜிபி கோவிந்தராஜ் தலைமையிலான குழு தமிழக அரசிடம் நேற்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது. இந்நிலையில் ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் நளினியின் கணவர் முருகன் மாநில சிறைத்துறை ஏடிஜிபி ஷியாம் சுந்தருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், சென்னை சிறைத்துறையினர் என் மனைவி நளினியை தற்கொலை செய்து கொள்ள தூண்டுகிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். என தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்லாந்து அரசை பதவி விலகக்கோரி தலைநகர வீதிகளில் போராட்டம் உக்கிரம்!



## பழைய டயர்களை வீதிகளில் குவித்துத் தீ வைப்பு!!

பாங்கொக், மே 18

தாய்லாந்தில் அபிசித் வெஜஜிவா தலைமையிலான அரசை பதவி விலகக் கோரி பாங்கொக்கில் நடைபெறும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

பாங்கொக்கின் பல வீதிகளில் போராட்டக்காரர்கள் ஞாயிற்றுக்கிழமை பழைய டயர்களைக் குவித்துப் போட்டு தீ வைத்துக் கொளுத்தினர். கடை ஒன்றுக்குத் தீ வைத்து வன் முறையில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தால் பாங்கொக்கில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. மக்கள் அச்சமின்றி வீதிகளில் நடமாடத் தயங்குகின்றனர். இதையடுத்து, சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் வகையில் பிரச்சினைக்குரிய சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்க அந்நாட்டு அரசு முடிவெடுத்துள்ளது.

பாங்கொக்கில் தற்போது மக்கள் யார், போராட்டக்காரர்கள் யார் என்பதே தெரியவில்லை. இதனால் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்க முடிவு செய்துள்ளோம் என்று இராணுவத்துறை செய்தித் தொடர்பாளர் கேர்னல் சுன்சென் தெரி வித்தார்.

பாங்கொக்கில் போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடுகிறார்கள். ஆதலால் பாடசாலைகளைத் திறப்பது நல்லதல்ல. இதனால் பாடசாலைகள் மூடியிருக்கும். பாடசாலைகளைத் திறப்பது குறித்து பின்னர் முடிவு செய்யப் படும் என்றும் அவர் கூறினார்.

தாய்லாந்தில் கடந்த 2006ஆம் ஆண்டு பிரதமராக இருந்த ஷினவத்ரே பதவி நீக்கம் செய்யப்பட்டார். இதைத் தொடர்ந்து, அங்கு இராணுவ ஆட்சி அமுல்படுத்தப்பட்டது. 2008இல் நடந்த தேர்தலில், இராணுவத்தின் ஆதர வுடன் அபிசித் வெஜ்ஜஜீவா பிரதமராகத் தெரிவுசெய்யப் பட்டார்.

தில்லுமுல்லு செய்து அபிசித் பிரதமராகிவிட்டார் எனக் கூறி, ஷினவத்ரேவின் ஆதரவாளர்கள் கடந்த இரண்டு மாதங்களாகத் தலைநகர் பாங்கொக்கை முற்றுகையிட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் ஷினவத்ரே ஆதரவாளர்கள், சிவப்புச் சட்டை அணிந்து நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டனர். இதனால், நாடாளுமன்றத்திலிருந்து எம்.பிக்கள் ஹெலிக் கொப்டர் மூலம் தப்பிச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, அங்கு அவசர நிலை பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களாக சிவப்புச் சட்டைக்காரர்கள், பாங்கொக் நகர வீதிகளை ஆக்கிரமித்துள்ளனர். எதிர்க்கட்சித் தொண்டர்களின் இந்தப் பிடிவாதம் காரணமாக எதிர்வரும் நவம்பர் மாதம் தேர்தல் நடத்தப்படும் என பிரதமர் அபிசித் கூறினார். ஆனால், போராட்டக்காரர்கள் இதற்கு உடன்படவில்லை. உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு, தேர்தல் நடத்த வற்புறுத்தி வருகின்றனர்.

கடந்த வாரம் போராட்டக்காரர்களின் தலைவரும், இராணுவ அதிகாரியுமான சீ டயங் தாக்கப்பட்டார். இராணுவத்தினர் சுட்டதில், அவரின் தலையில் குண்டுக் காயம் ஏற்பட்டதைத் தொடர்ந்து கலவரம் வெடித்தது.

இதையடுத்து, போராட்டக்காரர்கள் பாங்கொக்கிலுள்ள அமெரிக்கத் தூதரகம் உள்ளிட்ட பல்வேறு நாட்டுத் தூதரகங்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். பாங்கொக் நகரின் மூன்று சதுரகிலோ மீற்றர் தூரத்துக்குள் போராட்டக்காரர்கள் நுழைய, இராணுவத்தினர் தடைவிதித் துள்ளனர்.

இந்தத் தடையை மீறிய போராட்டக்காரர்கள்; இராணுவச் சிப்பாய்கள் மீது கல்லெறிந்தும், பெட்ரோல் குண்டுகளை வீசியும் ரகளை செய்து வந்தனர். இவர்களைக் கலைக்க, பாதுகாப்புப் படையினர் தடியடி மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 25 பேர் வரை பலியாகியுள்ளனர்.

பாங்கொக்கில் மூன்றரை சதுர கிலோ மீற்றர் பகுதிக்குள் போராட்டக்காரர்கள் நுழையத் தடைவிதிக்கப்பட்டு, 'இந்தப் பகுதி துப்பாக்கிச் சூடு நடக்கும் பகுதி' என அறிவிக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினரின் கட்டுப்பாட்டி லுள்ள இந்தப் பகுதியில் இராணுவச் சிப்பாய்கள் முகாமிட் டுள்ள பகுதிக்கு அருகே 36 மீற்றர் தூரத்தைத் தாண்டி வரும் போராட்டக் காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. பாங்கொக்கில் வசிக்கும் மக்கள் அடையாள அட்டையைக் காட்டிய பின்னரே அனுமதிக்கப் படுகின் றனர்.

உலக அரங்கில்

# சூட்டுக் காயத்துடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாய்லாந்தின் போராட்டத் தலைவர் ஜெனரல் சீ டயாங் மரணம்

பாங்கொக், மே 18

தாய்லாந்து போராட்டத்தின்போது துப்பாக்கியால் சுடப்பட்டு, வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் தலைவரும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான ஜெனரல் சீ டயாங் காலமானார் என வைத்தியசாலை அதிகாரிகள் நேற்று திங்கட்கிழமை தெரிவித்தார்கள்.

இராணுவத்திலிருந்து விலக்கப்பட்ட ஜெனரல் ஹாட்டியா சவாஸ் டி பொல், சீ டயங் என்றும் அழைக்கப்பட்டார். அரசுக்கு எதிரான போராட்டங்களை முடுக்கி வந்த இவர், கடந்த வியாழக்கிழமை இடம் பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது சுடப்பட்டார்.

தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்களின் பேரணி நடைபெற்றுக்கொண்டிருந்தது. அச்சமயம் முன்னாள் மேஜர் ஜெனரல் சீ டயாங், நியூயோர்க் ரைம்ஸ் ஊடகவியலாளருடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது இனந்தெரியாதோரால் அவர் சுடப்பட்டார்.

தலையில் சூடுபட்ட சீ டயாங் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவரை சுட்டவர் யாரென கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே சீ டயாங் காயமடைந்தார் என ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பரித்தார்கள்.



தாய்லாந்து இராணுவத்திலிருந்து விலக்கப்பட்ட மேஜர் ஜெனரல் ஹம்டியா சவாஸ் டி போல் (சீ டயாங்) பாங்கொங்கில் 13 ஆம் திகதி நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணியின்போது, தாம் சுடப்படுவதற்கு முன்னர் தாய்லாந்து, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு பேட்டியளித்தபோது எடுத்த படம்.

# அமெரிக்கா தீப்பற்றி எரியும்; தலிபான் புதிய மிரட்டல்!

இஸ்லாமாபாத், மே 18

அமெரிக்கா தீப்பற்றி எரியும் என்று தலிபான் இயக்கம் புதிய மிரட்டலை விடுத்துள்ளது.

அமெரிக்காவில் நியூயோர்க் ரைம்ஸ் சதுக்கத்தில் வெடிகுண்டு கார் நிறுத்தப்பட்டிருந்த சம்பவத்துக்குப் பாகிஸ்தான் தலிபான் இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவை எரித்து விடுவோம் என்று புதிய மிரட்டலை விடுத்து அந்த இயக்கத்தின் செய்தித் தொடர்பாளர் அசீம் தாரிக் பேசிய ஒலிநாடா வெளியாகியுள்ளது.

''ரைம்ஸ் சதுக்க வெடிகுண்டு வெடிக்கா விட்டாலும், விரைவில் அமெரிக்காவில் குண்டுகள் வெடிக்கும். அதில் அமெரிக்கா தீப்பற்றி எரியும். அமெரிக்காவின் கூட்டாளிகளுக்கும் அதே கதிதான் ஏற்படும். அமெரிக்காவின் செயற்திட்டத்தை பின்பற்றும் பாகிஸ்தான் அரசு தூக்கி எறியப் படும். எங்களை நசுக்க முடியாது'' என்றும் அதில் அவர் பேசியுள்ளார்.

# இத்தாலியில் முதன்முறையாக விவாகரத்துக் கண்காட்சி

மிலன், மே 18


இத்தாலியில் முதன் முறையாக விவாகரத்துக் கண்காட்சி நடைபெற்றது. இத்தாலியில் விவாகரத்து என்பது அரிதாக நடைபெறக்கூடிய விடயம். ஆனால், சமீபகாலமாக அங்கு விவாகரத்து அதிக அளவில் இடம்பெற்று வருகிறது.

விவாகரத்து தொடர்பான கண்காட்சி சமீபத்தில் மிலன் நகரில் நடைபெற்றது. விவாகரத்து ஆனவர்கள் எப்படி தனிமையைச் சமாளிப்பது, விவாகரத்து வேண்டுவோர் அதை எப்படி தள்ளிப் போடுவது, சிறு சிறு பிரச்சினைகளை வாழ்க்கைத் துணை யுடன் அனுசரித்துப் போவது எப்படி என்பது உள்ளிட்ட ஆலோசனைகளும் இந்தக் கண்காட்சியில் வழங்கப்பட்டன.

விவாகரத்து செய்தே தீருவேன் என அடம்பிடிப்பவர்கள், சட்டப்படி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்கும் இங்கு அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. இந்த அரங்கில் அழகுசாதன நிலையங்களும் இடம்பெற்றிருந்தன,

விவாகரத்து செய்துவிட்டு புதிய துணை கிடைத்துள்ளவர்கள் எப்படி வாழ்க்கையை செம்மையாக நடத்துவது உள்ளிட்ட ஆலோசனைகளும் இந்தக் கண்காட்சியில் வழங்கப்பட்டன. ஆறு கோடி ஜனத்தொகை [illegible] ஆம் ஆண்டு அதிகபட்சமாக 81 ஆயிரம் ஜோடிகள் பிரிந்[illegible] விவாகரத்துப் பெற்றனர்.

# மீண்டும் எரிமலை குமுறல்: பிரி. விமானசேவைகள் ரத்து



ஐஸ்லாந்து, மே 18

ஐஸ்லாந்தில் மீண்டும் எரிமலைசீற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த முறை எரிமலை சீற்றம் ஏற்பட்டபோது அதன் துகள்கள் பெரும் பகுதியை ஆக்கிரமித்ததையடுத்து, பல நாடுகளில் விமானப் போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டது.

பயணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகினர். பல விமான நிறுவனங்கள் கோடிக்கணக்கில் நட்டத்தைச் சந்தித்தன.

தற்போது மீண்டும் எரிமலை சீற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, மோசமான வானிலை மற்றும் புகை மண்டலத்தால் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தின் முக்கிய விமான நிலையங்களை 2 நாள்கள் மூடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐஸ்லாந்து எரிமலை மீண்டும் குழம்பை கக்கியதால், அண்டை நாடான பிரிட்டன் முழுவதிலும் சாம்பல் பரவியுள்ளது.

இதனால் வடக்கு பிரிட்டனில் விமானசேவை நிறுத்தப்பட்டுள்ளது. மான்செஸ்டர், லிவர்பூல், லீட்ஸ் ஆகியவை உள்ளிட்ட முக்கிய விமானநிலையங்களில் விமானப் [illegible] ரத்துச் செய்யப்பட்டது.

இதனால் பயணிகள் அவதிப்பட்டனர். அவர்களிடம் விமானநிலைய நிர்வாகம் மன்னிப்பு கேட்டுள்ளது. நிலைமை சீரடையும் வரை விமானசேவை ரத்து செய்யப்பட்டிருக்கும் என்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் பல இடங்களிலும் வணக்கத்தலங்களில் நேற்றுப் பிரார்த்தனைகள், அஞ்சலிக் கூட்டங்கள்

கொழும்பு, மே 18

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் உயிரிழந்த அனைத்து மக்களுக்கும் அஞ்சலி செலுத்துமுகமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நேற்று பிரார்த்தனைகளும், கூட்டங்களும் இடம்பெற்றன.

திருகோணமலை நகரில் திருக்கோணேஸ்வரர் ஆலயம், ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம், ஆலடிப் பிள்ளையார் ஆலயம் மற்றும் சிவன்கோயில் ஆகியவற்றில் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெற்றன.

அத்துடன், திருகோணமலையின் பள்ளிவாசல்கள் மற்றும் பெரியகடைப் பகுதியில் உள்ள சென் மேரிஸ் தேவாலயம் ஆகியவற்றிலும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

யுத்தத்தில் உயிர்நீத்த தமிழர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடுபடவேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரியிருந்தது. இதன் அடிப்படையில் இந்த நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன், திருகோணமலை மாவட்டக் கிளையின் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும், திருகோணமலை மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினருமான க.துரைரட்ணசிங்கம் ஆகியோரும் இந் நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

அதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் வன்னிச்சமரில் உயிர்நீத்த உடன்பிறப்புகளின் ஒருவருட பூர்த்தி நினைவு தினம் நேற்று காரைதீவில் நடைபெற்றது.

பொதுநல அமைப்புகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வின் ஓரங்கமாக காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூஜை நடைபெற்றது.

ஆலய குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் பூஜையை நடத்திவைத்தார். ஊர்ப் பிரமுகர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து அங்கு 30 நிமிடம் இறை தியானம், ஆத்மாஞ்சலி நடைபெற்றன. நினைவஞ்சலியை ஓய்வுபெற்ற அதிபர் கலாபூஷணம் இரா.கிருஷ்ணபிள்ளை நிகழ்த்தினார்.

பாடசாலைகளிலும், காலை ஒன்று கூடலில் மௌன அஞ்சலி மாணவர்களால் மேற்கொள்ளப்பட்டது. நினைவுரைகளும் நிகழ்த்தப்பட்டன.

அம்பாறை மாவட்டத் தமிழரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பொ.பியசேன நினைவு தினச்செய்தியொன்றையும் அங்கு அனுப்பிவைத்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச்சோலை சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் இறந்தவர்களின் நினைவாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன், ஆலயக் குருக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் சுடரை ஏற்றினர்.

இதேவேளை, வன்னியில் உயிர் நீத்த உறவுகளின் நினைவாக நேற்றுக் குடாநாட்டின் முக்கிய ஆலயங்களில் அவர்களின் உறவினர்கள் மோட்ச அர்ச்சனை செய்து, பிரார்த்தனைகளில் ஈடுபட்டனர். (அ-சி)



வன்னிப் போரில் உயிர்நீத்த எமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு திருகோணமலையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட பிரமுகர்கள் அஞ்சலி செலுத்துவதைப் படத்தில் காணலாம்.

## தலைநகர் கொழும்பில் பாதுகாப்புக் 'கமெரா'

கொழும்பு, மே 18

கொழும்பில் முக்கிய பகுதிகளில் பாதுகாப்புக் கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன.

குற்றச்செயல்கள் மற்றும் வீதிப் போக்குவரத்து மீறல்கள் ஆகியவை கமெராக்கள் மூலம் கண்காணிக்கப்படும்.

மேற்படி கமெராக்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்து கற்றுக்கொள்வதற்காக சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட குழுவொன்று சிங்கப்பூருக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது எனத் தெரிய வருகின்றது.

## 'எக்ஸ்ரே' பிரிவுக்கு குளிரூட்டிகள்

யாழ்ப்பாணம், மே 18

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் 'எக்ஸ்ரே' சிகிச்சைப் பிரிவுக்கு சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியால் குளிரூட்டிகள் ('எயார் கண்டிஷ்னர்கள்) பொருத்தப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வின் வைபவரீதியான ஆரம்பம் இன்று மு.ப. 10 மணிக்கு இடம் பெறும் என்று கொமர்ஷல் வங்கியின் சாவகச்சேரிக்கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் அறிவித்துள்ளார். (ஒ-16-207)

## களனிதிஸ்ஸ மின் நிலையத்துக்குட்பட்ட எண்ணெய்க்குழாயில் நேற்று வெடிப்பு

கொழும்பு.மே 18

களனிதிஸ்ஸ மின் நிலையத்துக்குட்பட்ட எண்ணெய்க்குழாயொன்றில் நேற்று மாலை வெடிப்பொன்று ஏற்பட்டுள்ளது.

இந்த எண்ணெய்க்குழாய் வெடிப்பினால் அவ்விடத்தில் தீப் பற்றிஎரிந்துள்ளது. இருப்பினும் தீயணைப்பு படையினர் குறித்த பகுதிக்கு விரைந்து வந்து தீயைக் கட்டுப்படுத்தினர் எனவும் தெரிய வருகின்றது.

இந்தத் தீ விபத்தால் உயிர்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் தீயணைப்பு படையின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ஒ-11)

## பட்டச்சான்றிதழ்; இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 18

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வு தொடர்பான கலந்துரையடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலந்துரையாடலில் யாழ்.வெளிவாரிப் பட்டதாரிகள் சங்கத்தின் தமது பதிவுகளை மேற்கொண்டவர்களும் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் தவறாது கலந்துகொண்டு தங்கள் பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், பதிவுகளை மேற்கொண்ட 2004 ஆம், 2005 ஆம், 2006 ஆம் ஆண்டு வெளிவாரிப் பட்டதாரிகளையும் கலந்து கொள்ளுமாறு சங்கத்தினர் கேட்டுள்ளனர். (ஒ-10)

# மறுசீரமைப்பு யோசனைகள் இன்று ஐ.தே.க. செயற்குழுவிடம்

கொழும்பு, மே 18

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்பு தொடர்பாக அக்கட்சியின் எம்.பிக்களிடமிருந்து திரட்டப்பட்ட யோசனைகள் இன்று அக்கட்சியின் செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படவுள்ளன என்று கயந்த கருணாதிலக்க எம்.பி. நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பாக எம்.பிக்களின் யோசனைகளைத் திரட்டுவதற்காக கட்சியின் செயற்குழுவால் ஜோஸப் மைக்கல் பெரேரா எம்.பியின் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழு இதுவரை அதிகமான எம்.பிக்களின் யோசனைகளைத் திரட்டிவிட்டது. இன்னும் ஒரு சில எம்.பிக்களின் யோசனைகள் மாத்திரமே திரட்டப்பட இருக்கின்றன.

மீதியாக உள்ள எம்.பிக்களின் யோசனைகள் இன்றுடன் (நேற்றுடன்) திரட்டி முடிக்கப்பட்டதும் அனைத்து யோசனைகளும் செவ்வாய்க்கிழமை கட்சியின் செயற்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படும்.

செயற்குழு இந்த யோசனைகளை ஆராய்ந்து கட்சியின் மறுசீரமைப்புத் தொடர்பான இறுதி முடிவை எடுக்கும். - என்றார். (ஒ-சி)



ஜி - 15 இன் மாநாட்டின் தலைமைப் பொறுப்பு ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாட்டினால் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம்.

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு 8 பேர்; உறுப்பினர்களின் பெயர்கள் அறிவிப்பு

கொழும்பு, மே 18

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்தவை குறித்து ஆராய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எட்டு உறுப்பினர்களை நியமித்துள்ளார்.

ஜனாதிபதி சட்டத்தரணிகளான சிட்டரஞ்சன் டி.சில்வா, அம்ரித் றொஹான் பெரேரா , பேராசிரியர் முகமட் தாஹிர், முகமட் ஜிவ்ரி, பேராசிரியர் கருணரட்ண கங்சன்வட்ட, சந்திரிபால சண்முகம், ஹேவமதர கமஹே, சிறிபால பல்லியக்கார, மனோஹரி ராமநாதன், பராக்கிரம பரணகம ஆகியோர் இந்த ஆணைக் குழுவில் இடம்பெற்றனர்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் நிகழ்ந்த சம்பவங்களுக்குத் தனி நபரோ அல்லது குழுவோ, அமைப்போ நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமாக இருந்தனவா என்பதைக் கண்டறிந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு இந்த ஆணைக்குழு கேட்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்கான பரிந்துரைகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஆணைக்குழு கேட்கப்பட்டுள்ளது.

மேலும் தேசிய ஐக்கியம் மற்றும் தேசிய நல்லிணக்கத்தை முன்னெடுப்பதற்கான வழிவகைகளை முன்னெடுக்குமாறும் ஆணைக்குழு கோரப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய பின்னரே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

# ஐ.நாவும் உதவி வழங்கும் நாடுகளும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும்

## சர்வதேச நெருக்கடிக் குழு கோரிக்கை

கொழும்பு, மே 18

இலங்கையில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஐ.நாவும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டுமென பிரஸல்ஸைத் தளமாகக் கொண்ட சர்வதேச நெருக்கடிக் குழு என்ற அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வன்னியில் கடந்த வருடம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் ஷெல் தாக்குதலை மேற்கொண்ட அரசு, ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொலை செய்தது எனவும் இந்த அமைப்பு குற்றஞ்சாட்டி உள்ளது.

இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து ஒருவருடம் நிறைவு பெறுகின்றமையைக் குறிக்குமுகமாக விடுத்துள்ள தனது ஆய்வறிக்கையிலேயே இந்த அமைப்பு இவ்வாறு குறிப்பிட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்களை அரசால் அறிவிக்கப்பட்ட பாதுகாப்பு வலயங்களை நோக்கிச் செல்லுமாறு இராணுவம் கோரிய பின்னர் அவர்கள் மீது தொடர்ச்சியாகக் கண்மூடித்தனமான ஆட்டிலறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை மேற்கொண்டது எனவும் அந்த அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

குறிப்பிட்ட மாதங்களில் வேண்டுமென்றும், தொடர்ச்சியாகவும் பொதுமக்கள் மீதும் வைத்தியசாலைகள் மற்றும் மனிதாபிமானப் பணியாளர்கள் மீதும் பாதுகாப்புப் படையினர் தாக்குதலை மேற்கொண்டமைக்கான ஆதாரங்கள் தான் திரட்டிய சான்றுகள் மூலம் கிடைத்துள்ளன எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

செய்மதிப் படங்கள், ஆவணங்கள் மற்றும் சம்பவங்களை நேரில் கண்டவர்களின் சாட்சியங்கள் ஆகியவற்றை வைத்தே இந்த அறிக்கையைத் தயாரித்துள்ள சர்வதேச நெருக்கடிக்குழு பெருமளவு அநீதிகள் குறித்து பரந்துபட்ட சர்வதேச விசாரணைகள் அவசியம் என்றும் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட தாக்குதலின் போது பொது மக்களையும் மனிதாபிமானப் பணியாளர்களையும் பாதுகாப்பதாக அரசு உறுதியளித்த போதிலும், ஆயுதம் ஏந்தாத மக்கள் உள்ளனர் எனத் தமக்குத் தெரிந்திருந்தும் கூட சில பகுதிகள் மீது படையினர் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் -

பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்கள் காரணமாகப் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பெரும் இழப்புகள் குறித்து அரசின் உயர் அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்குத் தெரிந்திருந்த போதிலும் அவர்கள் பொதுமக்களைப் பாதுகாக்கத் தவறிவிட்டனர் என்றும் - அந்த அமைப்பு தெரிவித்தது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நகர சபை, யாழ்ப்பாணம்

# வெளிநாடுகள் பலவற்றில் இன்று முள்ளிவாய்க்கால் பேரவல நினைவுகள்

டப்ளின்,மே18

வன்னியில் யுத்தம் முடிவடைந்து ஒரு வருடப்பூர்த்தியையடையும் இன்றைய நாளை (செவ்வாய்க்கிழமை) சர்வதேச போர்க்குற்ற நாளாக பிரகடனப்படுத்தியுள்ள புலம்பெயர்வாழ் தமிழர்கள் இன்றைய நாளில் கவனஈர்ப்பு ஒன்றுகூடல், இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தல் போன்ற நிகழ்ச்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இந்த நினைவுநாள் அயர்லாந்து, கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அயர்லாந்தின் தலைநகர் டப்ளில் இன்று செய்வாய்க்கிழமை 3மணியளவில் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவு நாள் நினைவுகூரப்படுகின்றது.

கனடாவில் ரொரன்ரோ நகர மத்தியில் அமைந்துள்ள ஒன்ராரியோ நாடாளுமன்றத்தின் முன்பாக போர்க்குற்றநாள் நிகழ்வுகள் மாலை 5மணிக்கு நடைபெறவுள்ளன.

பிரான்ஸில் ஸ்ராஸ்பேர்க்கில் ஐரோப்பிய நாடாளுமன்றத்தைச் சுற்றியுள்ள பகுதியில் காலை 9மணியிலிருந்து மாலை 5 மணிவரை நினைவு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த நினைவு நிகழ்வுகளில் மக்கள் கூடி இறந்து போன தமது உறவுகளுக்காக அஞ்சலிசெலுத்துவதுடன் இலங்கை அரசின் இன அழிப்பை ஆட்சேபித்து கவன ஈர்ப்புக்களையும் நடத்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(அ-10)

# ஜி-15 மாநாட்டின் தலைமைப்பொறுப்பை ஏற்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, மே 18

'ஜீ - 15' நாடுகளின் தலைமைப் பதவி சற்று நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் பொறுப்பேற்கப்பட்டது. ஈரானிய ஜனாதிபதி அஹமது நிஜாட்டினாலேயே இந்தப் பதவி கையளிக்கப்பட்டது என்று ஜனாதிபதிச் செயலகம் தெரிவித்தது.

ஈரானின் தெஹ்ரான் நகரில் நேற்று ஆரம்பமாகிய ஜீ-15 நாடுகளின் உச்சி மாநாட்டின் போதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் இந்தப் பதவி பொறுப்பேற்கப்பட்டது என்றும் ஜனாதிபதிச் செயலகம் தெரிவித்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட 18 நாடுகளின் தலைவர்கள் கலந்துகொண்டுள்ள இம்மாநாட்டின்போது நாடுகளிற்கிடையிலான நல்லுறவு, அபிவிருத்தி மற்றும் சர்வதேச விவகாரம் சம்பந்தமாகக் கலந்துரையாடப்படுகின்றது.

ஜீ-15 நாடுகள் அமைப்பில் ஈரான், அல்ஜீரியா, ஆர்ஜென்ரினா, பிரேஸில் சிலி, எகிப்து, இந்தியா, இந்தோனேஷியா, ஜமைக்கா, கென்யா, நைஜீரியா, மலேசியா, மெக்ஸிக்கோ, பெரு, செனகல், இலங்கை மற்றும் சிம்பாப்வே ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம் 23 ஆம் பக்கத்தில்)

## யுத்த வெற்றியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கும்போது மறுபுறம் நாம் கொண்டாட்டத்தில் மூழ்கியிருப்பது சரியல்ல.

யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுள் 70 ஆயிரம் பேர் இன்னும் அகதிமுகாம்களில் வாடுகின்றனர். அவர்களுக்கு எதுவித அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப் படவில்லை.

அந்த மக்கள் முதலில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். அம்மக்களுக்கான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்கப்பட வேண்டும்.அப்போதுதான் யுத்தவெற்றி உண்மையானதாக அமையும்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயமான அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் தொடர்ந்தும் உறுதியாக இருக்கின்றோம். ஆனால், அரசியல் தீர்வு யோசனை தொடர்பாக திஸ்ஸவிதாரணவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியாது.

அரசியல் தீர்வு,மீள்குடியேற்றம் அனைத்தும் இந்த அரசால் மறுக்கப்பட்டு வருகின்றன. இவை அனைத்தும் யுத்த வெற்றிக் கொண்டாட்ட நிகழ்வுக்குள் போட்டு மறைக்கப்பட்டுள்ளன.

அகதிகள் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எம்மால் எப்படி சந்தோஷமாக இந்த யுத்த வெற்றிகளைக் கொண்டாட முடியும்.?

இந்த நாட்டு மக்களுக்கு இருக்கின்ற அனைத்து உரிமைகளும் தமிழ் மக்களுக்கும் இருக்க வேண்டும். இந்த நாட்டின் சமபிரஜைகளாக அவர்கள் மதிக்கப் படவேண்டும் - என்றார். (அ-சி)

## யாழ்.பிரதி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளங்கோ நேற்றுப் பிற்பகல் ஆஜர் செய்யப்பட்டார்.

அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி எஸ். சந்திரலால் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்து வாதாடினார்.

மனுவை ஆராய்ந்த நீதிவான் பொலிஸாரின் ஆட்சேபனை இல்லாததையடுத்து நிபந்தனையின் அடிப்படையில் அவரைப் பிணையில் செல்ல அனுமதித்தார்.

யாழ். நீதி நிர்வாகத்துக்கு உட்பட்ட இருவரின் 50 ஆயிரம் ரூபா ஆள்பிணையிலும், பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நீதிமன்றத்தில் கையொப்பம் இட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரிலும் நீதிவான் பிணை வழங்கி உத்தரவிட்டார். (ஒ-1)

## வன்னியில் உயிர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வில் அவர்களால் கலந்துகொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை தமிழரசுக்கட்சி நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்குபற்றித் திரும்பியவர்களும் படையினரால் விசாரிக் கப்பட்டனர் என்று அறியவந்துள்ளது. (ஒ-1)

## தெற்கில் மண்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருவிட்ட, எகலிகொட, கலவள மற்றும் எலபத்த ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இது தொடர்பாக விசேட அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சுத் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி, களுத்துறை, காலி ஆகிய மாவட்டங்களிலுள்ள தாழ் நிலப் பகுதிகளில் வாழும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அந்த அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

(அ-சி)

## யுத்த வெற்றி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுஅறிவித்தல் வரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பிற்கான ஊடக மத்திய நிலையத்தின் பணிப்பாளர் லக்ஷ்மன் ஹுலுகல்ல தெரிவித்தார். (அ-சி)

## வலி.வடக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கண்டவாறு மக்களிடம் உறுதியளித்தனர்.

சங்கத்தின் தலைவர் ஆ.சி. நடராசா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ. சரவணபவன், எஸ். சிறீதரன், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியமர்வு விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

இந்த விடயத்தில் சகலரும் இணைந்து செயற்பட முன்வந்தால், தானும் பங்களிப்பது குறித்து ஆராய்ந்து முடிவுசெய்யப்படும் என்று அமைச்சர் அங்கு அறிவித்தார்.

சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து மீள்குடியமர்வுச் செயற்பாட்டை முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பது என்று முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களில் அதுகுறித்த முடிவை அறிவிப்பதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஒ-1-86)

## யாழ்.மேஜர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்காக கால அவகாசத்தை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நேற்று நீதிமன்றம் வழங்கியுள்ளது. நீதிமன்றத்தை அவமதிக்கும் விதத்தில் உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரம் பிரசுரித்தமை தொடர்பாக யாழ். மேயரிடம் வாக்கு மூலம் பெற்று அறிக்கை சமர்ப்பிக்குமாறு யாழ். பொலிஸாருக்கு நீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது.

நேற்று இந்த விவகாரம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட போது, மேயர் தொடர்பான விசாரணைகள் முடிவடைய வில்லை என்றும் காலஅவகாசம் தேவை என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம், எதிர்வரும் 19 ஆம் திகதி வரை அவகாசம் வழங்கி, அன்று மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

இதேவேளை -

நீதிமன்றத்தை அவமதித்ததாக யாழ். மாநகர ஆணையாளர், செயலாளர் ஆகியோருக்கு எதிரான குற்றச்சாட்டு தொடர்பான விவகாரமும் நேற்று நீதிமன்றத்தில் எடுக்கப்பட்டது.

உள்ளூர் பத்திரிகைகளின் கடந்த 15 ஆம் திகதி ஆணையாளர் வெளியிட்ட திருத்த விளம்பரத்தை ஆராய்ந்த நீதிமன்றம், ஆணையாளரையும் செயலாளரையும் இந்த விவகாரத்தில் இருந்து நேற்று விடுவித்தது.

(ஒ-1)

## போரில் நடந்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மிகப் பெரும் மனித உரிமை மீறல்கள் குறித்து ஐக்கிய நாடுகள் சபை உடனடியாக சுயாதீன விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டுமென்றும் கோரியுள்ள மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையின் சமீபத்தைய உள்நாட்டு யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட மிகப் பெரும் மனித உரிமை மீறல்கள் குறித்து உடனடியாக சுயாதீன விசாரணையொன்றை ஆரம்பிக்குமாறு ஐ.நாவுக்கு சர்வதேச மன்னிப்புச்சபை வேண்டுகோள் விடுக்கிறது.

இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் நீதி, நஷ்டஈடு பெறமுடியாத நிலைமை நிலவுகின்றது.

இதேவேளை, மோதல் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் முகாம்களில் வாடுகின்றனர். அல்லது சிதைந்துபோன வாழ்வை மீண்டும் கட்டியெழுப்புவதற்குப் போராடுகின்றனர்.

மோதலின் இறுதிக்கட்டச் சம்பவங்கள் குறித்து தான் அறிந்தவற்றை ஐ.நா இன்னமும் பகிரங்கப்படுத்தவில்லை; அங்கு நடைபெற்ற உரிமை மீறல்களை ஏற் றுக்கொள்ளவில்லை; பொறுப்புக் கூறச் செய்வதற்கான அழுத்தங்களைக் கொடுக்கவில்லை.

### அட்டூழியங்கள் தொடர்கின்றன

சட்டங்களால் எவ்வித சர்வதேச விளைவுகளும் ஏற்படமாட்டாது என்ற நினைப்பில் யுத்தத்திற்குப் பின்னரும் பொதுமக்கள் மற்றும் மாற்றுக்குழு உறுப்பினர்கள் மீது அட்டூழியங்கள் தொடர்கின்றன.

யுத்தத்தின் போது சர்வதேச சட்டங்களை மீறியவர்கள் குறித்து விசாரணை செய்து தண்டனை வழங்குவதற்குப் பதிலாக இலங்கை அரசு கடந்த ஒரு வருட காலமாகத் தன்னை விமர்சிப்பவர் களை சிறையில் அடைக்கும் நடவடிக்கை யில் ஈடுபட்டுள்ளது.

மோதலின் இறுதிக் கட்டத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்தனர். சுயாதீன விசாரணைகள் நடப்பதைத் தடுப்பதன் மூலம் முழுமையான விவரங்கள் வெளிவருவதை இலங்கை அரசு தவிர்க்க முயல்வதால் இறந்தவர்களின் எண்ணிக்கை பல மடங்காக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

மோதலில் சிக்கியவர்களின் நிலைமையில் இந்த ஒருவருட காலத்துக்குப் பின்னரும் முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படவில்லை.

* குடிதண்ணீர், சுகாதாரம், மருத்துவ வசதிகள் அற்ற நிலையில் 80ஆயிரம் பேர் இன்னமும் முகாம்களிலேயே உள்ளனர்.
* விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றங்களை அணுகமுடியாதபடி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.
* யுத்தக் குற்றங்கள் குறித்து விசாரிப்பதற்கான அர்த்தபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரைஎடுக்கப் படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அ-சி)

## மரண அறிவித்தல்



### முத்துலிங்கம் ராஜ்குமார்

(இளைப்பாறிய உதவி முகாமையாளர், மக்கள் வங்கி,கொழும்பு)

கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பு-13இணை வதிவிடமாகவும் கொண்ட மு.ராஜ்குமார் நேற்று (17.05.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம்-பவளம் தம்பதியரின் புத்திரனும் திருமதி ராஜலக்ஷ்மியின் (பேபி) அன்புக் கணவரும் ராஜ்ஹரன் (ரமேஷ்), ராஜ்பவன் (சுரேன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சுகன்யா ராஜ்பவனின் மாமனும், ரக்ஷ ன்யாவின் அப்பப்பாவும், இந்திரகுமார் (இந்திரன்), விஜயகுமார் (பாபு),ஸ்ரீகர்ணகுமார் (கண்ணன்),திருமதி து.சறோஜா, திருமதி ஆ.பவானி, திருமதி நா.ரஜனி,திருமதி ம.நந்தினி, திருமதி நி.சாந்தினி (பவி), காலஞ்சென்ற மகாலிங்கம் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.05.2010) புதன்கிழமை பி.ப. ஒருமணிக்கு பூநாறி வீதி, கொக்குவில் என்னும் முகவரியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை களுக்காக கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
ரமேஷ்,சுரேன்(மகன்மார்)
பூநாரி வீதி,
கொக்குவில்மேற்கு,கொக்குவில். (98389) தொ.பே.0772261333,0772479436

LAZER AC
சந்தோஷம்,மகிழ்ச்சி,குதூகலம் அனைத்தும் குடும்பத்துடன் கூடி உங்கள் இல்லங்களில் ஆனந்தம் பொங்கிட lazer AC யினை பொருத்துங்கள்
யாழ் விநியோகஸ்தர்கள்
e city
NO:338A, KASTHURIAR ROAD, JAFFNA. T.P: 0212228147 0776510009
ஒப்பந்தக்காரர்கள்,மீள்விற்பனை செய்வோருக்கு விசேட விலைக்கழிவு
Available: A/C Installation and Service also

வான் விற்பனைக்கு
பாடசாலைச்சேவை,விற்பனை முகவர்களின் விநியோகத்தேவை, பிரத்தியேக வாடகைச்சேவை என்பவற்றுக்குகந்த TOP UP Condition இல் உள்ள வான் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0215673818 (98506)

A/L PHYSICS (2008)ROSA
பூபாலசிங்கம் புத்தகசாலை
வேம்படிச்சந்தி, யாழ்ப்பாணம். | ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

A/L-PHYSICS
Past Paper
Dr.ROSA
1.2008-(முதல் முதலில் யாழ் நகரில்)
2.2007
3.2006
4.2000-2002
5.1999-1994
6.பௌதிகவியலும் அலைவுகளும் அதிர்வுகளும்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் 0212229881 (c/567733) சாவகச்சேரி 0212270003
19.05.2010 முதல்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org